# மொழிச் சிறுபான்மையினரின் குழந்தைகளுக்குத் தமிழ் கற்பிக்கும் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கான கையேடு


பதிப்பாசிரியர்

டாக்டர் மா. சு. திருமலை

இணைப்பாளர்

பி சியாமளகுமாரி

ஆசிரியர்கள்

டாக்டர் ந. நடராசபிள்ளை

டாக்டர் கோ. சங்கரநாராயணன்

டாக்டர் மா. சு. திருமலை

டாக்டர் கோ. சுப்பையா

த. பரசுராமன்

கே. வி. மீனாட்சிசுந்தரம்



இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம்

(இந்திய அரசு) மைசூர்

தமிழ்நாடு கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம்

(தமிழ்நாடு அரசு) சென்னை

# மொழிச் சிறுபான்மையினரின் குழந்தைகளுக்குத் தமிழ் கற்பிக்கும் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கான கையேடு


*பதிப்பாசிரியர்*

டாக்டர் மா. சு. திருமலை

*இணைப்பாளர்*

பி. சியாமளகுமாரி

*ஆசிரியர்கள்*

டாக்டர் ந. நடராசபிள்ளை

டாக்டர் கோ. சங்கரநாராயணன்

டாக்டர் மா. சு. திருமலை

டாக்டர் கோ. சுப்பையா

த. பரசுராமன்

கே. வி. மீனாட்சிசுந்தரம்



இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம்

(இந்திய அரசு) மைசூர்

தமிழ்நாடு கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம்

(தமிழ்நாடு அரசு) சென்னை

# உள்ளடக்கம்


பக்கம்

முன்னுரை i

பதிப்பாசிரியர் உரை iv

1. தமிழும் பிற தமிழக மொழிகளும் ஓர் அறிமுகம் 1
2. இருமொழியம் அதன் இயல்பும் பண்பும் 7
3. இருமொழியக் குழந்தையின் மொழி வளர்ச்சி 13
4. மொழி இடையீடு 19
5. தமிழின் இரு வழக்கு நிலை 24
6. தமிழும் தெலுங்கும் 26
7. தமிழும் கன்னடமும் 31
8. தமிழும் மலையாளமும் 35
9. தமிழும் சௌராட்டிரமும் 43
10. தமிழும் உருதுவும் 48
11. தமிழும் மராத்தியும் 54
12. கேட்டல் திறன் வளர்த்தல் 59
13. பேசுதல் திறன் வளர்த்தல் 64
14. படித்தல் திறன் வளர்த்தல் 72
15. எழுதுதல் திறன் வளர்த்தல் 76
16. ஒலிகளையும் வரி வடிவங்களையும் கற்பித்தல் 83
17. சொற்களைக் கற்பித்தல் 88
18. செய்யுள் கற்பித்தல் 96
19. உரைநடை கற்பித்தல் 102
20. பிழை தொகுத்தலும் நீக்கலும் 109
21. தேர்வுகள் 115
22. பாடநூல்களைக் கற்பித்தல் 120

நூற்பட்டியல். 127

டாக்டர் இ. அண்ணாமலை

எம்.ஏ., எம். லிட்., எம்.ஏ., பிஎச். டி. (சிகாகோ)

இயக்குநர்,

இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம்,
(கல்வி—பண்பாட்டு அமைச்சகம், இந்திய அரசு)
மானச கங்கோத்ரி, மைசூர் – 570006

# முன்னுரை

ஒவ்வொரு மாநிலத்திலும் அந்த மாநிலத்தின் பெரும்பான்மையான மக்களால் பேசப்படுகின்ற, கல்வி, ஆட்சி மொழியாகப் பயன்பட்டு வருகின்ற மொழியை அம்மாநிலத்தின் எல்லா மக்களும் கற்றுத் தேர்வது மாநில முன்னேற்றத்துக்கும் இந்திய நாட்டு ஒருமைப்பாட்டுக்கும் மிகவும் தேவையானது. இந்திய நாட்டில் பல மொழிகள் பேசப்படுகின்றன. இவ்வாறு பல மொழிகள் பேசப்பட்டாலும் நாட்டின், சமூக, பொருளாதார முன்னேற்றத்தில் எல்லா மொழி பேசுபவர்களும் ஈடுபட வேண்டும், முன்னேற்றத்தின் பயன்களைப் பெறவேண்டும்.

பெரும்பான்மையான மக்களால் பேசப்படுகின்ற மொழியை அம்மாநிலத்தின் மொழிச் சிறுபான்மையினர் கற்றுத் தேறவேண்டும் என்று கூறும்போது அந்த மொழியை விரைவாகவும் திறமையாகவும் கற்றுக் கொள்வதற்குரிய வாய்ப்புகளை ஏற்படுத்துவது மிகவும் அவசியம். மொழிச் சிறுபான்மையினருக்குப் பெருபான்மையானவரின் மொழியைக் கற்றுக் கொள்வதில் இடர்ப்பாடுகள் ஏற்பட இடமுண்டு என்பதை உணர்ந்து அந்த அடிப்படையில் அவ்விடர்ப்பாடுகளைக் களைய மொழி கற்பிக்கும் நூல்களையும் கற்பிக்கும் முறைகளையும் உருவாக்க வேண்டும். இதற்கான ஆராய்ச்சியின் அடிப்படையில் மொழிப் பாடத் திட்டத்தையும் வகுக்கவேண்டும். மொழிச் சிறுபான்மையினரின் குழந்தைகளுக்குப் பெரும்பான்மையானவரின் மொழியைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குத் தனித்த பயிற்சியும் தரவேண்டும். இத்தனித்த பயிற்சியில் இவ்வாசிரியர்களுக்கு மொழிச் சிறுபான்மையினரின் குழந்தைகளுக்கு ஏற்படும் இடர்ப்பாடுகளை உணர்வுறுத்த வேண்டும். இவ்வாறு செய்வதால் பெரும்பான்மையினர், சிறுபான்மையினர் இரு சாரார்க்கும் பொதுவாகத் தயாரிக்கப்பட்டுப் பள்ளியில் பயன்படுகின்ற மொழி கற்பிக்கும்

நூல்களைக் கூட மொழிச் சிறுபான்மையினரின் குழந்தைகளுடைய பின்னணிக்கேற்ப, திறன்களுக்கேற்ப இவ்வாசிரியர்களால் கற்பிக்க முடியும். இதுவே இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்தின் கொள்கை.

இக் கொள்கையை வகுத்துக் கொண்ட இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், தமிழ் நாட்டு மொழிச் சிறுபான்மையினரின் குழந்தைகளுக்குத் தமிழ் கற்பிக்கும் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கான இக்கையேட்டை மற்ற மாநிலங்களுக்கு முன் மாதிரியாக, சோதனை அடிப்படையில் வெளியிடுகிறது. இக்கையேடு கோயமுத்தூரில் 5-3-1984 முதல் 12-3-1984 வரை பீளமேடு சர்வஜன மேனிலைப் பள்ளியில் இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்தாலும் தமிழ்நாடு கல்வி ஆராய்ச்சி—பயிற்சி நிறுவனத்தாலும் நடத்தப் பெற்ற பணியிடைப் பயிற்சியில் முதன் முறையாகப் பயன் படுத்தப் பட்டது. பணியிடைப் பயிற்சியின் இயக்குநராக இருந்து சர்வஜன மேனிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் டாக்டர் எஸ். எஸ். இராச கோபாலன் நடத்திக் கொடுத்தார். இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்தின் சார்பில் டாக்டர்கள் மா. சு. திருமலை, ந. நடராச பிள்ளை, கோ. சுப்பையா, கோ. சங்கர நாராயணன், த. பரசு ராமன் ஆகியோரும் தமிழ் நாடு கல்வி ஆராய்ச்சி-பயிற்சி நிறுவனத்தின் சார்பில் டாக்டர் ம. இரகுராம் சிங், திரு. கே. வி. மீனாட்சி சுந்தரம் ஆகியோரும் கருத்தாளராக இருந்து தமிழ்நாடு முழுவதிலு மிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட நாற்பத்தெட்டு தொடக்கப் பள்ளி மற்றும் பயிற்சிப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி தந்தனர். இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்தில் திருமதி ப. சியாமளகுமாரி இப் பணியிடைப் பயிற்சிக்கும் இந் நூலைத் தயாரிப்பதற்கும் இணைப்பாளராகத் துணை புரிந்தார்.

இக்கையேடு தமிழ் நாட்டில் மொழிச் சிறுபான்மையினரின் குழந்தைகளுக்குத் தமிழ் கற்பிக்கும் தொடக்க நிலை வகுப்பாசிரியர் களுக்கான கையேடு. தமிழகத்தில் மொழிச் சிறுபான்மையினரின் குழந்தைகள் அதிக அளவில் பயிலும் தொடக்கப் பள்ளிகளின் தமிழா சிரியர்களுக்கு இது அனுப்பப்படும். ஆசிரியர்கள் இக்கையேட்டை நாளும் பயன்படுத்தித் தமிழ்க்கல்வியை மொழிச்சிறுபான்மையினரின் குழந்தைகளுக்குத் தருவார்கள் என்று நம்புகிறேன். தமிழிலேயே கல்வியும் ஆட்சியும் அமைவதால் தமிழ்மொழிக் கல்வி செம்மையாக இச் சிறுபான்மையினரின் குழந்தைகளிடம் அமையுமானால் மற்ற பாடங்களையும் அவர்கள் திறமையாகக் கற்க முடியும். இதனால் எல்லாருக்கும் மொழியினால் சமவாய்ப்பு இல்லை என்கிற குறை இருக்காது.

மொழிக் கல்வியைச் செம்மைப் படுத்துவதற்கான இத்திட்டத்தில் இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம் பங்கேற்க வாய்ப்புக் கொடுத்தமைக்குத் தமிழ் நாடு அரசுக்கு நன்றி. இந்நூல் தரும் கருத்துகளைத் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் தங்கள் வகுப்பறைகளில் பயன்படுத்தினால் இக்கையேட்டின் நோக்கம் நிறைவேறியதாகும்.

இ. அண்ணாமலை

# பதிப்பாசிரியர் உரை

மொழிச் சிறுபான்மையினரின் குழந்தைகளுக்குத் தமிழ் கற்பிக்கும் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி தருவதற்கான திட்டத்தை நான் வகுத்த போதும், அத் திட்டத்தைப் பயிற்சி முகாம் வழியாகச் செயல்படுத்திய போதும், இக்கையேட்டை எழுதிய போதும், எழுதுவித்த போதும் பெருமகிழ்ச்சி அடைந்தேன். ஒன்று, மொழியியலை இந்தியச் சூழ்நிலைக்கு ஏற்றவாறும் இந்திய மொழிக் கல்விப் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாணுமாறும் பயன்படுத்தியது; இரண்டு, தமிழ் நாட்டு மக்கள் மொழிவழி ஒற்றுமை பெற்று இந்திய ஒற்றுமைக்கு வலிமை தருவது, மூன்று, இந்திய மொழியிலேயே அறிவாராய்ந்த கருத்துகளைத் தெரிவிப்பது என்ற காரணங்களால் இம்மகிழ்ச்சி பெருகி வந்தது. இக்கையேட்டில் மிகவும் இன்றியமையா, இருபத்திரண்டு தலைப்புகளின் கீழ் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு ஒரு சில வழி முறைகள் சுட்டிக்காட்டப் பெறுகின்றன. இவ் வழிமுறைகள் எளிமையாகக் கூறப்பட்டிருக்கின்றன என்பதால் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் தாமாகவே இக்கையேட்டைப் படித்துப் பயன் பெறுவார்கள் என்று நம்புகிறேன். இக்கையேட்டை அவர்கள் படிப்பதோடு பிற ஆசிரியர்களோடும், ஆசிரியர் மன்றக் கூட்டங்களிலும் மற்றும் கல்வித்துறை மேல் அலுவலர்களோடும் கலந்துரையாடினால் மேலும் பயன்பெறலாம். இக்கையேடு தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கானது. அடுத்த கையேடு நடுநிலைப் பள்ளித் தமிழாசிரியர்களுக்காக வெளிவரும். இக்கையேடுகளை ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் கற்பித்தால் மொழிக் கல்வியின் தரம் உயர வழியுண்டு என்று நம்புகிறேன்.

**மா. சு. திருமலை**

பேராசிரியர் மற்றும் துணை இயக்குநர்

இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம்

மைசூர் 570006

# 1. தமிழும் பிற தமிழக மொழிகளும்—ஓர் அறிமுகம்

நம் நாட்டில் பல்வேறு மொழிகளைப் பேசுகின்ற மக்கள் வாழ்கின்றனர். 1961 இந்திய மக்கட்தொகைக் கணக்கெடுப்பின்படி இந்தியாவில் 1652 "தாய்மொழிகள்" பேசப்படுகின்றன. இவ்வாறு பேசப்படுகின்ற தாய் மொழிகளில் வரிவடிவம் பெற்று, இலக்கிய வளம் மிகுந்த மொழிகள் பல உண்டு. இவற்றுள் பதினைந்து மொழிகளை இந்திய அரசியல் சட்டம் குறிப்பாகச் சுட்டிக் காட்டுகிறது. இம்மொழிகள் பின்வருமாறு, அசாமியமொழி, வங்காளம், குஜராத்தி, மராத்தி, இந்தி, கன்னடம், காஷ்மீரி, மலையாளம், ஒரியா, பஞ்சாபி, சிந்தி, சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு மற்றும் உருது. இப்பதினைந்து மொழிகளில் சமஸ்கிருதம், சிந்தி, உருது தவிர்த்த மற்றமொழிகள் ஒவ்வொன்றிற்கும் அவை பெரும்பான்மையாகப் பேசப்படுகின்ற ஒன்று அல்லது பல மாநிலங்களைச் சுட்டிக் காட்ட முடியும். எடுத்துக் காட்டாக, தெலுங்கு ஆந்திரப் பிரதேச மாநிலத்தின் பெரும்பாலான மக்களால் பேசப்படுகிறது. இந்தி உத்திரப் பிரதேசம் மற்றும் மத்தியப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் பெரும்பால்லான மக்களால் பேசப்படுகிறது. தமிழ், தமிழ் நாட்டில் பெரும்பாலான மக்களால் பேசப்படுகிறது. வடமொழி, சிந்தி, உருது ஆகிய மொழிகளுக்கென்று பெரும்பான்மையான மக்களால் பேசப்படும் மாநிலங்கள் இல்லை. உருதுமொழியையும் சிந்திமொழியையும் பேசுவோர் நாட்டின் பல பாகங்களிலும் காணப்படுகின்றனர். ஒவ்வொரு மொழியினரும் தங்கள் சமூகப் பழக்க வழக்கங்களில் இன்னொரு மொழி பேசுவோரினின்று வேறுபட்டுள்ளனர். இவ்வாறு மொழியின் அடிப்படையிலும் சமூகப் பண்பாட்டின் அடிப்படையிலும் வேறுபட்டிருந்தாலும் அடிப்படை இந்தியப் பண்பாடு ஒன்றாகவே அமைகிறது. இந்த வேற்றுமையிலும் ஒற்றுமையாயிருக்கும் பண்பை ஆசிரியர் அறிந்திருக்க வேண்டும். மாணவர்களுக்கும் தெரிவிக்க வேண்டும்.

இந்தியாவில் பேசப்படுகின்ற எல்லா மொழிகளையும் நான்கு மொழிக் குடும்பங்களாகப் பிரிக்கலாம். அவை முண்டா (ஆஸ்ட்ரோ—ஆசியாடிக்) மொழிக் குடும்பம்; திபத்திய—பர்மிய மொழிக் குடும்பம்; திராவிட மொழிக் குடும்பம்; ஆரிய மொழிக் குடும்பம் என்பன. ஒரிசா, மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்களில் பேசப்படுகிற சந்தாலி மேகாலயா மாநிலத்தில் பேசப்படுகிற

காசி போன்ற மொழிகள் ஆஸ்ட்ரோ—ஆசியாடிக் மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவை.. மராத்தி, இந்தி, பஞ்சாபி, சமஸ்கிருதம் முதலியன ஆரியமொழிக் குடும்பத்தைச் சார்ந்தவை. இந்திய நாட்டின் கிழக்கு மாநிலங்களான நாகாலாந்து, மேகாலயா, அருணாசலப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் பேசப்படுகின்ற மொழிகளான ஆவோ நாகா மொழி, மிஸிமி, தாடோ போன்றவை திபெத்திய-பர்மிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவை. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், கோண்டி, பர்ஜி, குருக், தோதுவம், கோத்தம் போன்றவை திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவை.

இந்திய நாட்டில் பல மொழிகள் பேசப்படுகின்றன. இந்த உண்மை நம் எல்லோருக்கும் தெரிந்ததே. இதே போன்று இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மாநிலத்திலும் பல மொழிகள் பேசப்படுகின்றன. அதாவது, ஒவ்வொரு மாநிலமும் ஒரு குட்டி இந்தியா தான். மொழிவாரி அடிப்படையில் மாநிலங்களுக்குப் பெயர் சூட்டி இருப்பதால் இந்த உண்மை நம்மில் பலருக்குச் சட்டெனத் தெரிவதில்லை. தமிழ் நாட்டிலும் தமிழ் மொழியைத் தவிர ஏனைய மொழிகளைப் பேசுவோரும் வாழ்கின்றனர். தமிழ் நாட்டில் பேசப்படுகின்ற மற்ற மொழிகளில் தெலுங்கு, கன்னடம், மலையாளம், சௌராட்டிரம், உருது, மராத்தி முதலியன முக்கியமான பிற இந்திய மொழிகளாகும். எனினும், எல்லோரும் தமிழையே ''தாய் மொழியென'' ஏற்று வாழ்கின்றனர். தமிழ் நாட்டில் திராவிட மொழிகளான தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்றவையும், ஆரிய மொழிகளான மராத்தி, சௌராட்டிரம், உருது போன்றவையும் பேசப்படுகின்றன. பின்வரும் பட்டியல் தமிழ் நாட்டில் தமிழ் மற்றும் பிறமொழிகளைப் பேசுவோர் எண்ணிக்கையையும் அவர்கள் வாழ்கின்ற மாவட்டங்களையும் 1971 இந்திய மக்கட் தொகைக் கணக்கின் படி தருகிறது.

திராவிட மொழிகளுக்கும் ஏனைய மொழிக் குடும்பங்களைச் சார்ந்த மொழிகளுக்கும் இடையே பல வேறுபாடுகள் உள்ளன. தமிழ் மொழியின் மொழி அமைப்பு தெலுங்கு, மராத்தி, உருது போன்ற மொழிகளிலிருந்து வேறுபட்டுள்ளது. (இவை பற்றிய விளக்கங்களைப் பின்வரும் தமிழும் தெலுங்கும், தமிழும் கன்னடமும், தமிழும் மலையாளமும், தமிழும் சௌராட்டிரமும், தமிழும் உருதுவும், தமிழும் மராத்தியும் என்னும் இயல்களில் காணுங்கள்.)

தமிழ் நாட்டில் தமிழ் மற்றும் பிற மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்டோர் எண்ணிக்கை

| மாவட்டங்கள் | தமிழ் | தெலுங்கு | கன்னடம் | மலையாளம் | சௌராட்டிரம் | உருது | மராத்தி |
|---|---|---|---|---|---|---|---|
| சென்னை | 1,820,274 | 297,188 | 17,703 | 92,081 | 19,913 | 141,896 | 16,794 |
| செங்கல்பட்டு | 2,435,409 | 351,209 | 8,215 | 34,749 | 3,828 | 48,849 | 4,503 |
| வடஆர்க்காடு | 3,103,986 | 368,494 | 27,749 | 6,137 | 5,091 | 224,613 | 10,474 |
| தென்ஆர்க்காடு | 3,388,050 | 139,677 | 7,425 | 9,055 | 845 | 66,566 | 1,336 |
| தர்மபுரி | 1,107,156 | 306,205 | 175,882 | 2,425 | 175 | 73,935 | 6,460 |
| சேலம் | 2,518,298 | 303,778 | 92,348 | 10,677 | 17,997 | 44,680 | 1,189 |
| கோயமுத்தூர் | 3,017,666 | 824,302 | 345,968 | 116,617 | 3,743 | 48,539 | 3,933 |
| நீலகிரி | 188,221 | 31,004 | 157,672 | 95,638 | 305 | 9,618 | 2,235 |
| மதுரை | 3,226,045 | 409,952 | 161,506 | 13,538 | 92,843 | 28,464 | 1,517 |
| திருச்சி | 3,572,245 | 176,967 | 18,198 | 15,601 | 9,116 | 46,030 | 3,214 |
| தஞ்சாவூர் | 3,737,212 | 46,426 | 4,018 | 5,884 | 22,340 | 15,108 | 7,473 |
| இராமநாதபுரம் | 2,584,976 | 216,913 | 34,070 | 3,302 | 15,674 | 3,888 | 507 |
| திருநெல்வேலி | 3,047,001 | 125,598 | 5,009 | 6,864 | 6,082 | 7,092 | 265 |
| கன்னியாகுமரி | 1,070,782 | 2,365 | 749 | 146,617 | 1,093 | 329 | 65 |

உதவிய நூல்: census of India, 1971, series 19 Tamilnadu part II c (II)

பிற மொழிகளின் தொடர்பால் தமிழிலும் சில புதிய ஒலிகளும், சில இலக்கண அமைப்புகளும் வழக்குப் பெற்றுள்ளன. எடுத்துக் காட்டாக, ஆங்கிலத்திலுள்ள 'F' எனும் 'ஒலியைக் குறிக்க தமிழில் ஆய்தம் சேர்த்து ''ஃப'' என வழங்குவதை இன்று காணலாம்.

ஆங்கிலம் : Fan Coffee

தமிழில் : ஃபேன் காஃபி

இதைப் போலவே, தமிழின் உறவால் தமிழ் நாட்டில் பேசப் படும் ஏனைய மொழிகளிலும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. எடுத்துக் காட்டாக, தமிழகத் தெலுங்கு மொழியில்.

1. வாண்டு பணி சூஸ்துன்னாடு 'அவன் வேலை பார்க்கிறான்'

2. ஃபோன் பெட்டாடு 'அவன் போனில் பேசினான்'
என வருபவை ஆந்திரத் தெலுங்கில்

1. வாண்டு பணி சேஸ்துன்னாடு

2. ஃபோன் மாட்லாடு என்று வரும்.

தமிழ் நாட்டில் பிற மொழி பேசுவோர்கள் தமிழ் மொழி வளர்ச் சிக்கும் தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும் பல வகைகளில் தொண்டாற்றியுள்ளனர். தஞ்சையை ஆண்ட மராத்திய மன்னர் மாணவர்களுக்கு எளிதில் கல்வி கற்பிக்கக் ''குறவஞ்சி'' என்னும் இலக்கியத்தை உருவாக்கினார்.

புகழ் வாய்ந்த பல தமிழறிஞர்கள் அன்றும் இன்றும் தமிழ் நாட்டில் வீட்டில் பிறமொழிகளைப் பேசுவோர் சமூகத்திலிருந்து தோன்றியுள்ளனர். கலைகளிலும் பொறியியலிலும் கட்டிடக் கலை யிலும் அரசியலிலும் தமிழ் உணர்வோடு இவர்கள் ஆற்றியுள்ள தொண்டு அளவிட முடியாதது.

இவ்வாறு தமிழ் நாட்டில் பலமொழி பேசுவோர் இருப்பினும், அவர்கள் பொதுவான பழக்க வழக்கங்களைக் கொண்டவராகவும், தமிழ் மொழியையும் தமிழ் இலக்கியத்தையும் தம் சொத்தாகவே கருதித் தமிழராகவே வாழ்கின்றனர். இதற்குப் பல்வேறு வரலாற்றுக் காரணங்கள் உண்டு. ஒரு முக்கிய காரணம் வீட்டில் எம்மொழி பேசினாலும் அவர்கள் தமிழர்களே என்ற எண்ணத்தைத் தொன்று தொட்டு தலைவர்களும் கவிஞர்களும் பாமரரும் நம்பி, நடைமுறை யில் செயற்படுத்தி வருவதுதான்.

தமிழில் பேச்சுத் தமிழுக்கும் எழுத்துத் தமிழுக்கும் நிறைய வேற்றுமை உண்டு. கல்வி பயிலத் தொடங்கும்போதுதான் குழந்தைகள் எழுத்துத் தமிழைக் கற்கத் தொடங்குகின்றன. வீட்டில் தமிழையே பேசுகிற குழந்தைக்குக் கூட எழுத்துத் தமிழ் புதியதே. இருப்பினும் இவர்கள் வீட்டிலும் பள்ளியிலும் தமிழையே பயன் படுத்துவதால் ஓரளவு பள்ளிக்கல்வி எளிதாகிறது. வீட்டில் பிற மொழியைப் பேசுகிற குழந்தைகள் பள்ளியில் தமிழை முதன் மொழி யாகக் கற்கும் போது பல இடர்ப்பாடுகளுக்கு உள்ளாகின்றனர். இவ் விடர்ப்பாடுகளைக் களைவதற்காகத் தமிழ் மொழி ஆசிரியர்களுக்கு இதுவரை எந்தப் பயிற்சியும் தரப்படவில்லை. இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனமும் தமிழ் நாடு கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவனமும் சேர்ந்து வெளியிட்டுள்ள **தொடக்கப் பள்ளிகளில் தமிழ் மொழித் திறன்களை வளர்த்தல்** என்னும் ஆசிரியர் கையேட்டில் வீட்டிலும் பள்ளியிலும் தமிழை முதன் மொழியாகக் கற்கின்ற குழந்தைகள் எதிர்ப்படும் இடர்ப்பாடுகளைக் களைய வழிகள் சொல்லப்படு கின்றன. வீட்டில் பிற மொழியைப் பேசுகின்ற குழந்தைகள் பள்ளி யில் தமிழை முதன் மொழியாகக் கற்கும் போது அவர்கள் எதிர்ப் படுகின்ற இடர்ப்பாடுகளைக் களைய இவ்வாசிரியர் கையேட்டில் ஆசிரியருக்குப் பயிற்சி தரப்படுகின்றது.

## ஆசிரியர் செய்ய வேண்டிய சில குறிப்புகள்

1. மாணவர்கள் தத்தம் வீட்டில் பேசும் மொழியைக் கண்டறிய வேண்டும்.

2. பிற மொழி பேசும் மாணவர்கள் தத்தம் வீட்டில் கொண்டாடும் விழாக்கள், பழக்க வழக்கங்களை அறிந்து கொள்ள வேண்டும்.

3. மாணவர்கள் மொழியில் எந்தெந்த இலக்கணக் கூறுகளில் இடர்ப்பாடுகளை எதிர்நோக்குகின்றனர் என்பதைக் கண்டறிய வேண்டும்.

4. மாணவர்களின் பெற்றோர்களுடைய கல்வி, மற்றும் சமூக நிலைகளைக் கண்டறிய வேண்டும்.

5. மாணவர்கள் வகுப்புக்கு வருமுன் பெற்றிருக்கிற தமிழ் மொழி யறிவைக் கண்டறிய வேண்டும்.

6. இந்திய நாட்டில் பல மொழிகள் பேசப்படுவதைப் போன்று மாநிலங்களிலும் பல மொழிகள் பேசப்படுவதை அறிய வேண்டும்.

7. தமிழ் மொழிக்கும் இலக்கியத்திற்கும் கலைகளுக்கும் வீட்டில் பிற மொழி பேசுவோர் ஆற்றிய பணிகளைக் கூற வேண்டும். எவ்வாறு இவ்வறிஞர்கள் தமிழ் உணர்வோடு பாடுபட்டனர் என்பதையும் சொல்ல வேண்டும்.

8. மாநில மொழி வழி இந்திய ஒற்றுமை வளர்கிறது என்பதை விளக்க வேண்டும்.

—o—

## 2. இரு மொழியம் : அதன் இயல்பும் பயனும்

நம் நாட்டின் ஒவ்வொரு மாநிலத்திலும் பல்வேறு மொழிகள் பேசுகின்ற மக்கள் வாழ்வது கண்கூடு. இவர்கள் தங்கள் வீட்டு மொழியோடு அம்மாநில மொழியையும் பேசுகிறார்கள். இந் நிலையை அதாவது வீட்டு மொழியோடு வேறு ஒன்று அல்லது பல மொழிகளைப் பேசுவதை — பயன்படுத்துவதை — **இரு மொழியம்** என்று சொல்லலாம். இரு என்ற அடைமொழி இரண்டு மற்றும் அதற்கு மேற்பட்ட பல என்ற பொருளில் பயன்படுகிறது என்பதைக் கவனிக்கவும். தமிழல்லாத பிற மொழிகளை வீட்டு மொழியாகப் பேசும் குழந்தைகளின் மொழித்திறன் என்ன ?, அதன் பயன்பாடுகள் எவை ? அவர்களுக்குத் தமிழ் மொழியைக் கற்பிக்கும் போது அவர் களுடைய தமிழ் மொழித் திறன் வீட்டு மொழியினால் எவ்வாறு பாதிக்கப்படுகிறது ? என்பன போன்ற கேள்விகளுக்கு இவ்வியலில் ஓரளவு விளக்கம் காண முயல்வோம்.

### முறை சாரா இரு மொழியம்

தமிழகத்தின் எல்லையோர மாவட்டங்களிலும் மற்ற பகுதி களிலும் தமிழல்லாத பிற மொழிகளை வீட்டில் பேசும் மக்கள் வாழ்கின்றனர். இவ்விடங்களில் பள்ளிக் கல்வியின் துணையின்றியே அவர்கள் இரு மொழிகளைப் பேசப் பழகுகிறார்கள். வீட்டு மொழியை வீட்டிலும் தமிழை வெளியுலகிலுமாக இரு மொழிகளை யும் கற்றுக் கொள்கிறார்கள். இது ஒருவகை இரு மொழியம். இது பள்ளிக் கல்வியில் வராத அறிவாதலால் இதை **முறை சாரா இரு மொழியம்** என்று கூறலாம்.

### முறை சார் இரு மொழியம்

வீட்டுமொழி வேறாக இருந்து தமிழை முதன் மொழியாகப் பள்ளியில் கற்று இரண்டு மொழிகளிலும் அறிவு பெறுவது இன்னொரு வகை இரு மொழியம். இவ்வாறு பள்ளியில் தமிழைக் கற்பதையும் வீட்டில் வீட்டு மொழியில் பேசுவதையும் **முறை சார் இரு மொழியம்** எனக் கூறலாம்.

## நிறை இரு மொழியம்

ஒருவர் தம் வீட்டுமொழியோடு இன்னொரு மொழியையும் கற்று இரண்டு மொழிகளிலும் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய திறன்களில் சமமான ஆற்றல் கொண்டிருந்தால் அதை **நிறை இரு மொழியம்** என்று கூறலாம்.

## குறை இருமொழியம்

ஒருவர் தாம் கற்றிருக்கும் இரு மொழிகளிலும் சமமான திறன் பெறுவது எளிதன்று. பயன்பாடு காரணமாக ஒரு மொழியில் அதிகத் திறனும் இன்னொரு மொழியில் குறைவான திறனும் பெற்றிருப்பது பெருவழக்கு. எனவே, வீட்டு மொழியிலும் தமிழிலும் மொழித் திறன்களின் வளர்ச்சி குறைபாடு உடையதாகவே அமைவதால் இதைக் **குறை இருமொழியம்** என்று கூறலாம்.

முறைசார் இரு மொழியமாக இருந்தாலும் முறைசாரா இரு மொழியமாக இருந்தாலும் கற்றுக் கொண்டிருக்கின்ற இரு மொழி யறிவிலும் வேற்றுமைகள் உண்டு. அதாவது, அடிப்படை மொழித் திறன்களான கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகியவற்றில் அவர்கள் ஒவ்வொரு மொழியிலும் அடைந்திருக்கும் திறன் அளவில் ஏற்றத் தாழ்வு இருக்கும்.

சான்றாக, தெலுங்கை வீட்டு மொழியாகக் கொண்டு தமிழ் நாட்டில் வாழ்கிறவருக்குத் தெலுங்கில் பேசத் தெரியும் ஆனால், பெரும்பாலும் எழுதப் படிக்கத் தெரியாது. எனவே வீட்டு மொழி யில் தமிழ் மொழியை விடக் குறைந்த மொழித் திறன் பெற்றிருப் பார். ஆனால் இவர்களில் தமிழை முதல் மொழியாகப் பள்ளியில் கற்றுத் தேறியவருக்குத் தமிழில் பேசுதல் திறனோடு எழுதப் படிக்கும் திறனும் அமைந்திருக்கும்.

மேலும், இவ்வாறு வீட்டு மொழியிலும் தமிழிலும் வேறுபட்ட திறன்களை அடையும் போது கூட அதில் பல விதமான நிலைகளைப் பார்க்கலாம்.

## குறை இருமொழியத்திற்கான பல்வேறு காரணங்கள்.

1. எல்லையோர மாவட்டங்களில் வாழ்கிறவர்களுக்கு (நீலகிரி மாவட்ட கூடலூர் போன்ற இடங்களில்) தங்கள் வீட்டு மொழியோடு இருக்கும் உறவு தொடர்ந்து அமைகிறது. அதனால், முதன் மொழி யாகத் தமிழைக் கற்கும் போது அவர்களின் மொழியடைவு குறைவாக இருக்கலாம். இவர்கள் வீட்டுக்கு வெளியேயும் தங்கள் வீட்டு மொழி

யிலேயே பேச வாய்ப்பு இருக்கின்றது. பள்ளியில் மட்டும் தமிழைப் படிப்பார்கள். ஆனால் தமிழ் நாட்டின் நடு மாவட்டங்களில் வாழ் கிறவர்களின் நிலை வேறானது. இவர்களின் வீட்டு மொழியைப் பேசுகின்ற மாநிலத்தோடு உறவும் நெருக்கமும் வளர்ச்சியும் குறைவாக அமைவதால் இவர்களின் தமிழ்மொழி அடைவு அதிகமாக இருக்கலாம். வீட்டிற்குள் வீட்டு மொழியைப் பேசினாலும் வெளியில் தமிழிலேயே பேசுகின்ற சூழ்நிலையில் இவர்கள் இருக்கின்றார்கள்.

2. இருமொழியக் குழந்தையின் விட்டுமொழி, முதன்மொழியாகக் கற்கப் போகின்ற தமிழோடு தொடர்பு இல்லாத மொழியாக இருக்க லாம். அதாவது, திராவிட மொழிக் குடும்பத்தைச் சேராத இன்னொரு மொழியாக இருந்தால் இடர்பாடுகள் எழும்.

3. தமிழ் நாட்டின் இரு மொழியக் குழந்தையும் அதன் பெற் றோரும் குடியேறியிருக்கும் காலத்தின் அளவிற்கும் அவர்கள் அடைந் திருக்கும் தமிழ்மொழி அறிவிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. 5 ஆண்டுகளுக்கு முன் குடியேறியவரின் தமிழ் மொழி அறிவும் 50 ஆண்டுகளாகத் தமிழ் நாட்டில் வாழ்ந்து வருபவரின் தமிழ் மொழி அறிவும் கண்டிப்பாக வேறுபடும். அதன் தாக்கம் பள்ளிக்கு வரும் குழந்தைகளிடமும் காணப்படும்.

4. வீட்டில் தமிழ் அல்லாத பிற மொழிகளைப் பேசுகிற மக் களுக்கும் வீட்டில் தமிழையே பேசுகிற மக்களுக்கும் இடையே தொன்று தொட்டு மொழிப்பரிமாற்றம் இருந்து வருகின்றது. இருப் பினும், மேற்கூறிய மொழியினரில் ஒரு சில சமுதாயத்தினரிடம் சில குறிப்பிட்ட பணிகளுக்காகவே செய்திப் பரிமாற்றம் தொன்று தொட்டு இருந்து வருவதால் இவர்களிடையே தமிழ் மொழியறிவு மேற்சொன்ன சில பணிகளை நிறைவேற்றும் வகையில் மட்டும் இருந்து வருகிறது. இவர்களுள் கல்வி அறிவு பெற்றோரும் புறவுலகில் தொழில் செய்வோரும் அதிக அளவு தமிழ் மொழியறிவு பெற்றிருக்கலாம்.

5. வீட்டில் தமிழல்லாத பிற மொழி பேசும் சமுதாயத்தினருள் வசதி படைத்தவர்களின் புறவுலகத் தொடர்பு பொருளியல் காரணங் களால் அதிகமாக இருப்பதால் தமிழ் மொழியறிவு வேறுபடுகிறது.

6. வீட்டில் தமிழ் அல்லாத பிற மொழி பேசும் சமுதாயத்தினருள் வயது வேறுபாட்டின் காரணமாக அடைந்திருக்கும் தமிழறிவும் வேறுபடலாம். இங்கு இளைய தலைமுறையினருக்குத் திரைப்படங் களின் தாக்கத்தினால் தமிழ்மொழியறிவு கூடுதலாகியிருப்பதைக் காணலாம்.

7. பால் வேற்றுமையினாலும் இருமொழியக் குழந்தைகளின், பெரியவர்களின் தமிழ் மொழியறிவு வேறுபடுவதைக் காணலாம். ஆண்களும் சிறுவர்களும் வீட்டுக்கு வெளியே கூடுதல் அளவு பெண்களைவிடத் தொடர்பு கொள்வதால் வெளியுலக மொழியான தமிழில் அதிக மொழித் திறன் பெறலாம்.

8. இரு மொழி பேசுபவர்களின் குடியிருப்பு ஓர் ஊரில் தனித் தெருவாக அமைந்து அத்தெருவில் அவ்விருமொழி பேசுபவர்கள் மட்டும் வாழ்ந்தால் அவர்களின் தமிழ் மொழியறிவு வேறுபட வாய்ப்புண்டு. அத்தெருவைச் சுற்றித் தமிழை வீட்டு மொழியாகப் பேசுபவர்களின் தெருக்களே இருந்த போதிலும், அன்றாடக் கொண்டுகொடுப்பு வினைகள் அவரவர் தெருவுக்குள்ளேயே அமைவது இவ்வேறுபாட்டிற்குக் காரணமாக அமையலாம்.

9 வீட்டு மொழி வேறாக இருந்தாலும் சிறுவயது முதலே முதன் மொழியாகக் கற்கப் போகின்ற தமிழில் பேசுதல் திறன் பெற்றுள்ளவர்கள். இவர்களுக்குப் பள்ளிக் கல்வியில் தடுமாற்றம் குறைவாகவே இருக்கும்.

10. வீட்டு மொழி வேறாக இருந்தாலும் சிறுவயது முதலே முதன் மொழியாகக் கற்கப் போகின்ற தமிழில் பேசுதல் திறன் பெறாதவர்கள், இன்னொரு வகையினர். இக் குழந்தைகளைப் பொறுத்தவரை தமிழ் இரண்டாவதாகப் பயன்படுகின்ற மொழியின் தன்மையை போன்றே இருக்கின்றது. இதனாலும் குழந்தையின் தமிழ் மொழியறிவு வேறுபடுகின்றது.

இவ்வாறு இருமொழியறிவின் பயன்பாடும் அடைவும் பல நிலைகளாக அமைவதால் அவர்கள் எதிர்ப்படுகின்ற பிரச்சினைகளும் பல விதமாக அமைகின்றன. இப்பிரச்சினையின் இயல்புகளை ஆசிரியர் அறிந்து கொள்ள வேண்டும். எனவே, இருமொழியக் குழந்தைகள் பள்ளிக்கு வரும்போது அவர்களுக்குத் தெரிந்திருக்கும் தமிழ் மொழியறிவின் அடிப்படையில் புதிய அணுகுமுறைகளையும் உத்திகளையும் ஆசிரியர் பயன்படுத்த வேண்டும்.

## இருமொழிகளின் பயன்பாடுகள்

இருமொழிகளை அறிந்துள்ளவர்கள் எந்தெந்த வேளைகளில் தாங்கள் கற்ற இருமொழிகளையும் பயன்படுத்துகிறார்கள் என்பதை அறிந்து, அதன் அடிப்படையில் இருமொழிகளில் அவர்கள் கொண்டுள்ள திறன்களை அளவிட்டுக் கொள்ளலாம். அதன் அடிப்படையில் கல்வித் திட்டத்திலும் உத்திகளிலும் மாறுதல்களை உருவாக்கிக் கொள்ளலாம்.

மற்றவர்களோடு, தமிழ் அல்லாத பிற மொழிகளை வீட்டு மொழியாகக் கொண்டுள்ளவர்கள் கொண்டுள்ள மொழித் தொடர்பைப் பலவாறாக விளக்கலாம்.

## க) மொழித் தொடர்பு

கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகியவற்றில் இரு மொழிகளும் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன? சான்றாக, கன்னடத்தை வீட்டு மொழியாகக் கொண்டவர்கள் கேட்டல், பேசுதல் ஆகியவற்றில் மட்டும் கன்னடத்தைப் பயன்படுத்தலாம். ஆனால் இவர்கள் தமிழில் எல்லாத் திறன்களும் பெற்றிருக்கலாம். இவ்வாறு மொழித்திறன்களில் வேறுபடுதலால் அவர்களின் மொழியறிவும் வேறுபட்டுத்தான் இருக்கும்.

தமிழில் நான்கு மொழித் திறன்களைப் பெறும் இவர்கள் தங்கள் வீட்டு மொழியில் இரு திறன்களே பெற்றிருக்கின்றனர்.

## உ) மொழிப் பயன்பாடு

கேட்டுணர்தல், படித்துணர்தல், ஆகிய **உணர்தல் திறன்களிலும்** பேசுதல், எழுதுதல் ஆகிய **வெளியிடும் திறன்களிலும்** சிந்தனைக்கும் பயன்படுத்தப் படுகின்ற மொழித் திறனிலும் (இதையே **உட்பேச்சு** என்பார்கள்) இரு மொழிகளின் பங்கு வேறுபட்டிருக்கும். அதன் அடிப்படையிலும் அவர்களின் மொழியறிவை அளவிட்டுக் கொள்ளலாம்.

## ங) எந்தெந்தத்துறைகளில்

இருமொழிகளையும் எந்தெந்தத் துறைகளில் பயன்படுத்துகிறார்கள் என்பது ஒவ்வொரு மொழிக்கும் அவர்கள் தருகின்ற முக்கியத்துவத்தை எதிரொலிக்கின்றது. வீட்டில் பேசுகின்ற மொழி, கலைக்கான மொழி, பண்பாட்டு வெளியீட்டுக்கான மொழி, எனப் பல துறைகளிலும் ஒரேமொழியையோ வேறு வேறு மொழிகளையோ பயன்படுத்தலாம். இவ்வாறான மொழிப் பயன்பாடு வீட்டுமொழிக்கும் தமிழுக்கும் அவர்கள் பணிகளைப் பங்கீட்டளிப்பதைக் காட்டுகிறது. இவை, தமிழை இருமொழியக் குழந்தைகள் கற்கும்போது காட்டுகின்ற மனப்பான்மையைப் பெரிதும் பாதிக்கும் தன்மை வாய்ந்தவையாகும். அதாவது தமிழைப் பாடமாகவும் பாடமொழியாகவும் மட்டுமின்றி மேற்கூறிய துறைகளில் பலவற்றிற்கும் பயன்படுத்துவதற்காக அவர்கள் தமிழைக் கற்றுக் கொண்டார்கள் என்றால் அவர்களின் தமிழ் மொழியறிவு வளர வழியுண்டு.

இவ்வாறு பலவிதங்களிலும் பிறமொழிகளை வீட்டுமொழியாகக் கொண்டுள்ள குழந்தைகள் தமிழை முதன் மொழியாகக் கற்கும் போது வேறுபடுகின்றனர். எனவே, அவர்களுக்கென தனி மொழி கற்பிக்கும் முறைகளும் உத்திகளும் உருவாக்கப் படவேண்டும். அது அவர்களின் மொழியடைவைக் கண்டிப்பாக வளர்க்கும்.

**ஆசிரியர் நினைவிலிருத்த வேண்டிய சில குறிப்புகள்.**

(1) இருமொழியத்தின் வகைகளை அறிந்திருக்க வேண்டும்.

(2) குறை இருமொழியத்துக்கான பல்வேறு காரணங்களை அறிந்திருக்க வேண்டும்.

(3) இருமொழிகளும் எவ்வெவ்வற்றிற்குப் பயன்படுகின்றன என்பதை அறிந்திருக்க வேண்டும்.

(4) இருமொழியக் குழந்தைகளின் தமிழ் மொழியறிவு குறைவதற்கு வேறு காரணங்கள் இருப்பின் அவற்றையும் தொகுக்கவும்.

— 0 —

# 3. இரு மொழியக் குழந்தைகளின் மொழி வளர்ச்சி

வீட்டு மொழி வேறாக இருந்து தமிழை முதன் மொழியாகக் கற்கின்ற குழந்தையிடம் பள்ளிக்கு வருமுன் இருக்கின்ற மொழி வளர்ச்சியை அறிந்து கொள்ள வேண்டும். அவ்வாறு அறிந்து கொள்வதால் குழந்தை, பள்ளிக்கு வரும்போது என்னென்ன உத்திகளைக் கையாண்டு அக்குழந்தைக்குத் தமிழைக் கற்பிக்கலாம் என்பது தெளிவாகும்.

## வீட்டு மொழி வளர்ச்சி நிலைகள்

பேசத் தொடங்குகின்ற குழந்தை முதலில் ஒலிப்புச் சரியில்லாத சொற்களைச் சொல்லுகிறது. இதைக் **குழறு மொழி** என்பர். குழறு மொழிப் பருவம் முடிந்ததும் குழந்தை ஒவ்வொரு சொல்லாகப் பேசத் தொடங்குகிறது. அம்மா, அப்பா, பந்து, முட்டை எனத் தொடங்குகின்ற குழந்தை பின்னர் இரண்டு சொற்களால் வாக்கியங்களை உருவாக்கத் தொடங்குகிறது. 'அம்மா, சோறு' என்றால் 'அம்மா எனக்குச் சோறு தா' என்று பொருள்படுகின்றது.

குழந்தைகள் சொல்கின்ற ஓரிரு சொற்களை வெறும் சொற்கள் என எடுத்துக் கொள்ளலாகாது. அவற்றை முழு வாக்கியங்களின் குறுக்கங்கள் என எடுத்துக் கொள்ள வேண்டும்.

குழந்தைகள் மொழியைப் பேசத் தொடங்கி அவை வாக்கியங்களாக உருவாவதற்கு முன் **தந்திப் பேச்சாக** வெளிவருகின்றது. வாக்கியங்களின் முக்கிய சொற்களை மட்டும் அவை கூறுகின்றன. சான்றாக, அம்மா, அப்பா, அண்ணா, அடி இது ஒரு வாக்கியமாகும். 'அம்மா, அப்பா, அண்ணனை அடிக்கிறார்கள் என்பதன் தந்திப் பேச்சாக இது அமையலாம். ஒரு சில குழந்தைகளின் பேச்சு அதன் பெற்றோருக்கு மட்டுமே புரியும்.

குழந்தைகள் ஒத்த வயதினராக இருந்தாலும் கூட சொற்களஞ்சிய வளர்ச்சியில் வேறுபட்டிருப்பதைக் காணலாம். மொழி வளர்ச்சிக்கு உதவுகின்ற அல்லது ஊறு செய்கின்ற கூறுகள் பல இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, பெற்றோரும் மற்றோரும் குழந்தையோடு பேசி உறவாடும் அளவு, உடல் வளர்ச்சி, மன வளர்ச்சி போன்றவைகளாலும் மொழி வளர்ச்சி மாறிக் காணப்படலாம்.

குழந்தைகளிடம் வாக்கிய அமைப்புகள் தெளிவாக வளரும் முன்பே பொருளுணரும் திறன் வளர்ந்து விடுகிறது.

இப்பொருள் உணரும் திறனை இருவகைகளாகப் பிரிக்கலாம்:

1) கேட்டுப் பொருள் உணர்தல் 2) படத்தை (அல்லது பொருட்களை) பார்த்துப் பொருள் உணர்தல். குழந்தைகளுக்குக் கதை கேட்பது மிகவும் பிடிக்கும். நிறைய கதைகளைச் சொல்வது அவர்களின் கேட்டுணரும் திறனை வளர்க்கும்.

படத்தைப் பார்த்துப் பொருள் உணரும் திறன் வளர்வதால் படம் பார்த்துக் கதை சொல்லும் முறையை முதலில் வளர்க்க வேண்டும். இது அவர்களின் உற்று நோக்கும் திறனையும் வளர்க்கிறது. கண்களால் கண்டு அப்பொருளின் பெயரைக் குழந்தை அறிந்து கொண்டால் அது மறக்காது. எனவே, கேட்பதற்கும் பார்ப்பதற்கும் நிறைய வாய்ப்புகள் தர வேண்டும்.

பேசத் தொடங்குகின்ற குழந்தைப் பிறரைப் பற்றிய உணர்வின்றியே தன் தேவைகளையே மனத்திற்கொண்டு பேசும். இதைத் **தன் முனைப்புப் பேச்சு** என்று கூறலாம். எனவே, குழந்தையோடு தொடர்புடைய சொற்களை வைத்தே மொழி வளர்ச்சிக்கு உதவ வேண்டும்.

தன் முனைப்புப் பேச்சு மாறிக் குழந்தை பிறரையும் மனத்திற் கொண்டு சமுதாயத்தில் பிறரும் பேசுகின்ற சமுதாயப் பேச்சைப் பேச வாய்ப்பு அளிக்க வேண்டும். எனவே, சமுதாயப் பேச்சுக்குப் பெற்றோர் வழிவகுத்திருப்பினும் பள்ளியில் ஆசிரியரும் அதற்கு உதவவேண்டும்.

## இரு மொழியக் குழந்தைகளின் வீட்டு மொழியும் தமிழும்.

இரு மொழியக் குழந்தைகள் வீட்டில் வீட்டு மொழியையே பயன்படுத்துவதால் மேற்ச் சொன்ன தன்முனைப்புப் பேச்சும், சமுதாயப் பேச்சும் அதன் வீட்டு மொழியிலேயே பெரும்பாலும் அமைகின்றன. உடல் வளர்ச்சியாலும் மன வளர்ச்சியாலும் தமிழை வீட்டு மொழியாகக் கொண்ட குழந்தைகளின் மொழி வளர்ச்சிக்கு ஒப்பாயிருக்கின்றது. மேலும், அவர்கள் வாழும் தெருக்களில் அவர்களுடைய வீட்டு மொழியைப் பேசுபவர்கள் மட்டுமே இருந்தால் ஒரு சில குழந்தைகள் பள்ளிக்கு வரும்போது தங்கள் வீட்டு மொழியை மட்டுமே அறிந்து வருகின்றன.

ஆனால், இவ்விருமொழியக் குழந்தைகளுக்குத் தமிழில் உள்ள அறிவு, தமிழை வீட்டு மொழியாகக் கொண்டுள்ள குழந்தைகளின் மொழியறிவை விடக் குறைவாகவே இருக்கிறது எனலாம். இக் குழந்தைகளுக்குத் தமிழில் தெரியும் சொற்களும், ஒலிகளும் வாக்கியங்களும் வாக்கிய அமைப்புகளும் குறைவாகவே இருக்கின்றன.

தமிழ் நாட்டின் உள் மாவட்டங்களில் வாழ்கின்ற குழந்தைகள் பெரும்பாலும் சிறு வயதிலிருந்தே தமிழும் பேசத் தொடங்கி விடுகின்றன. எனவே, வீட்டில் தங்கள் வீட்டு மொழியையும் வீட்டுக்கு வெளியே தமிழிலுமாக இருமொழிகளிலும் திறன் பெற்றுப் பள்ளிக்கு வருகின்றன.

பெற்றோரின் தமிழ் மொழியறிவு, பணி, வயது, அவர்கள், குடியிருக்கும் பகுதி, வட்டாரம் போன்றவைகளின் தாக்கத்தால் இக் குழந்தைகளின் தமிழ் மொழியறிவு வேறுபடுகிறது.

தொடக்க நிலைப் பள்ளியின் முதல் இரண்டு மூன்று வகுப்புகளில் குழந்தை தன் பேச்சில் அதிக அளவு தன் வீட்டுமொழிக்கு இடம் கொடுத்தாலும் பின்னர் அது முதன் மொழியாகக் கற்கின்ற தமிழுக்குப் பெரும்பாலும் குறிப்பாக உள் மாவட்டங்களில் அதிக மதிப்பு கொடுக்கத் தொடங்குகின்றது. இதன் காரணமாகத் தமிழ் மொழியில் மொழித்திறன்களின் வளர்ச்சி அதிகமாக இருக்கும்.

## மொழிவழி சமுதாயத்தில் இணைதல் (குடிமரபாதல்)

மொழியைக் கற்றுக் கொள்வது என்பதே அந்த மொழிச் சமுதாயத்தோடு ஒன்றாதலுக்குரிய, இணைதற்குரிய செயற்பாடு தான். அதாவது ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தோடு தன்னை இணைத்துக் கொள்வதற்கு அச்சமுதாயத்தின் மொழி ஒரு கருவியாகிறது. முன்னர் பார்த்தது போலக் குழந்தை ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தோடு தன்னை ஒரு உறுப்பினனாகக் கொள்ள வீட்டு மொழியையும் பெரும்பான்மைச் சமுதாயத்தோடு தன்னைச் சேர்த்துக் கொள்ளத் தமிழையும் கற்கின்றது.

## இரு மொழியக் குழந்தையின் மொழி வளர்ச்சி நிலைகள்.

வீட்டு 'மொழியைக் கற்று வீட்டுக்கு வெளியே வருகின்ற குழந்தை வெளியிலும் வீட்டு மொழியையே கேட்டு வளர்வது ஒரு நிலை. இக் குழந்தைகளுக்குத் தமிழ் மொழியறிவு பள்ளிக்கூடம் வரும் வரை இல்லாமலேயே போகலாம்.

பெரும்பாலான சூழல்களில் வீட்டுக்கு வெளியே வரும் குழந்தை மற்றவர்களோடு தமிழில் பேசித் தமிழ் மொழியறிவையும் வளர்த்துக் கொண்டு வருகின்றது.

இவ்விருவகையினரின் தொடக்க நிலைப் பிரச்சினைகள் வெவ்வேறு வகையினவாகும்.

இதே போன்று வீட்டு மொழியிலும் குழந்தை வட்டார அல்லது சமுதாய வழக்கையே கற்றுக் கொள்கிறது. அதாவது, கோயமுத்தூரில் பேசப்படுகின்ற தெலுங்கு தஞ்சாவூரில் அல்லது தென்னார்க்காடு மாவட்டத்தில் பேசப்படுகின்ற தெலுங்கு வேறுபட்டிருக்கும். நாயுடு சமுதாயத்தினரின் தெலுங்கும் ரெட்டியார் சமுதாயத்தினரின் தெலுங்கும் வேறுபட்டிருக்கும். இவ்வாறு தெலுங்கை வீட்டு மொழியாகக் கொண்ட குழந்தையின் பேச்சுக் கூட இடத்திற்கு இடம் மாறுபட்டிருப்பது குழந்தையின் தமிழ் மொழி அறிவிலும் வெவ்வேறு வகையான இடர்ப்பாடுகளை ஏற்படுத்துகின்றது.

வீட்டுமொழியில் குழந்தையின் பேச்சு இடத்தாலும் சமுதாயத்தாலும் வேறுபட்டிருந்தாலும் தமிழைக் க்றகும் போது அவர்களுடைய தமிழ் மொழியறிவு இருவிதமாக அமைகின்றது,

1. பள்ளியில் பேசப்படுகின்ற தமிழ் மட்டும் அறிந்திருத்தல்

2. தன் வீடு அமைந்திருக்கும் பகுதியினரின் தமிழ்ப் பேச்சையும் பள்ளியில் பேசப்படுகின்ற தமிழையும் (படிக்கும் தமிழை)யும் அறிந்திருத்தல்.

**பள்ளிக் கல்வியில்**

தமிழை அறிந்து கொண்டோ அறியாமலோ வருகின்ற குழந்தை வகுப்பறையில் எழுத்துத் தமிழை, திருந்திய வழக்கைக் கற்கின்றது. வகுப்பறைக்கு வெளியே பேச்சுத் தமிழைக் கற்கின்றது. எல்லையோரப் பகுதிகளில் இவ்வாறு பெரும்பாலும் அமைவதில்லை. பள்ளிக்கு வெளியிலும் இக்குழந்தைகள் தங்கள் வீட்டு மொழியிலேயே பேசுகின்ற வாய்ப்புப் பெறுகின்றனர்.

படித்தல் திறனுக்கும் எழுதுதல் திறனுக்கும் பள்ளிக் கல்வி முக்கியத்துவம் அளிக்கின்றது. எனவே, பள்ளிக்கு வெளியேயும் தமிழைப் பேசுகின்ற குழந்தைகளின் பிரச்சினைகள் ஓரளவு குறைவாகவே இருக்கும்.

இவ்வாறு கற்று வருகின்ற குழந்தை தமிழின் இரு வழக்குகளையும் பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு—கற்கின்ற செயற்பாடு தொடர்கின்றது. வீட்டு மொழியின் பயன் குறைகின்றது. எழுதுதல்,

சொல் தெரிந்தெடுத்தல், எழுத்து வழக்கின் கூறுகளைக் கற்றல் தொடர்கின்றது. சான்றாக, 'அவ வந்தா' எனப் பேசுகின்ற குழந்தை 'அவள் வந்தாள்' என வகுப்பறைக்குள் படிக்கின்றது. இத்தகைய பேச்சுத் தமிழ் எழுத்துத் தமிழ் வேறுபாடுகளைக் குழந்தை நினைவிலி நிலையிலேயே கற்கின்றது.

குழந்தை ஐந்தாம் வகுப்பு வரும்போது தமிழின் பேச்சு வழக்கி லும் எழுத்து வழக்கிலும் அதிகத் திறன் பெற்று விடுகின்றது. எனவே தமிழையும் வீட்டு மொழியையும் சூழலுக்கு ஏற்பப் பயன்படுத்து கின்ற திறனைப் பெற்று விடுகின்றன.

குழந்தையின் தமிழ் மொழி வளர்ச்சியில் அடுத்த படி ஒரு பொதுமைப் பேச்சுத் தமிழ் மொழியறிவாகும். தான் இருக்கும் வட்டாரத்தின் பேச்சுத் தமிழைக் குழந்தை பேசுவதற்குப் பயன் படுத்துகிறது. பின்னர் பள்ளியில் எழுத்துத் தமிழைப் படிக்கின்றது.

இவ்வாறு இரு வழக்குகளையும் கற்கின்ற குழந்தை இவ்விரு வழக் குகளுக்கும் இடைப்பட்ட ஒரு பொதுமைப் பேச்சுவழக்கையும் தன்னுள் உருவாக்கிக் கொள்ளத் தொடங்குகிறது. இது ஓர் உட் பேச்சாகவே வளர்ந்து வருகின்றது. இந்த உட்பேச்சின் வாயிலாகத் தான் குழந்தை எழுத்துத் தமிழிலிருந்து பேச்சுத் தமிழுக்கும் பேச்சுத் தமிழிலிருந்து எழுத்துத்தமிழுக்கும் மாறுகின்ற திறனை பெறுகின்றது, சான்றாக,

1. அவர்கள் வந்தார்கள் — அவங்க வந்தாங்க

2. மிக, நிரம்ப—ரொம்ப, வீட்டு மொழியாகத் தமிழைக் கொண்ட வர்கள் தமிழைக் கற்கும் போது இவ்வாறு மாறுகின்ற திறன் எளிதில் வரலாம்.

குழந்தையின் வட்டார அல்லது சமுதாயப் பேச்சு வழக்குக்குப் பொதுப் பேச்சுத் தமிழ் அடிப்படையாவது போல மேடைப் பேச்சுக் கும் வகுப்பறைப் பேச்சுக்கும் எழுத்துத் தமிழ் அடிப்படையாகிறது. இவ்விரண்டு வழக்குகளையும் திறன்படப் பயன் படுத்துவதற்குத் தேவையான வாய்ப்புகளையும் பயிற்சிகளையும் தருவது முக்கிய மாகும்.

ஆகவே, இருமொழியக் குழந்தை பேச்சுத் தமிழையும் எழுத்துத் தமிழையும் தனித்தனியாக மூளையில் சேர்த்துக் கொண்டு வருவ தோடு தன் வீட்டு மொழியையும் ஒருபுறம் வளர்த்துக் கொண்டு வருகின்றது. இவ்வாறான மூன்று அறை கொண்ட பகுதியாக மொழி வளர்ச்சி நடந்தாலும் ஒன்றின் செல்வாக்கு அடுத்ததில் எப்போதும் இருந்து கொண்டே இருக்கிறது.

**ஆசிரியர் நினைவிலிருத்த வேண்டிய சில குறிப்புகள்**

1 வீட்டு மொழி வளர்ச்சி நிலைகளையும் தமிழ் மொழி வளர்ந்து வரும் நிலைகளையும் அறிந்திருக்க வேண்டும்.

2 சமுதாயத்தில் இணைவதற்கு மொழி எப்படித் துணை செய்கிறது என்பதை அறிந்திருக்க வேண்டும்

3 எந்தெந்த இடங்களில் மாணவர்கள் வீட்டு மொழியைப் பேசுகிறார்கள், வட்டாரத் தமிழைப் பேசுகிறார்கள் எழுத்துத் தமிழைப் பேசப் பயன்படுத்துகிறார்கள் என்பதைக் கவனிக்க வேண்டும்.

—o—

## 4. மொழி இடையீடு

தமிழ் நாட்டில் இருமொழி பேசுபவர்கள் வீட்டு மொழியை வீட்டிலும், வெளியில் தமிழ் மொழியையும் பயன்படுத்தி வருகின்றனர். இவ்வாறு இவர்கள் இவ்விரு மொழிகளையும் வெவ்வேறு இடங்களில் பயன்படுத்தினாலும் அவர்களுடைய வீட்டு மொழியில் தொடர்பு மொழியான தமிழின் செல்வாக்குக் காணப்படுகிறது. இச் செல்வாக்கால் அவர்களுடைய தமிழில் வீட்டு மொழியின் ஒலிகள் சொற்கள் முதலியவை கலந்துறவாடலாம்; வீட்டு மொழியிலும் தமிழ் ஒலிகள், சொற்கள் போன்றவை கலந்துறவாடலாம். இவ்வாறு ஒரு மொழியின் கூறுகள் மற்றொரு மொழியில் வந்து வழங்கும் இயல்பை **மொழி இடையீடு** என்பர்.

இடையீடு மொழியின் ஒலிகள், சொற்கள், சந்தி மாற்றங்கள், வாக்கியங்கள், இன்னோரன்ன பிறவற்றிலும் ஏற்படலாம். எடுத்துக் காட்டாக கன்னடம், தெலுங்கு போன்ற மொழிகளில் நகர, னகர, வேறுபாடு காணப்படுவதில்லை. இந்நிலையில் இம் மொழிகளுள் ஒன்றை வீட்டு மொழியாகக் கொண்டவர்கள் தமிழைப் பயன்படுத்தும் போது தமிழில் 'ந' வருகின்ற இடங்களில் 'ன' வைப் பதிலீடு செய்யலாம்.

பந்து—பன்து

தமிழில் உளப்பாட்டுத் தன்மைப் பன்மை உளப்படுத்தாத் தன்மைப் பன்மை என்ற இரு தன்மைப் பன்மைகள் (நாம்/நம் நாங்கள்/எங்கள்) உள்ளன. கன்னடத்தில் 'நாவு/நம்ம' என்ற ஒரே தன்மைப் பன்மை மட்டும் உள்ளது. கன்னடத்தை வீட்டு மொழியாகக் கொண்டவர்கள் தமிழைப் பயன்படுத்தும் போது 'நாங்கள்' வருடமித்தில் 'நாம்' என்று கூறலாம்.

எங்கள் மாணவர்கள் — நம்ம மாணவர்கள்.

இக்கையேட்டில் மாணவர்கள் இழைக்கின்ற பிழைகள் பல வற்றைச் சுட்டிக் காட்டுகிறோம். இவை பல ஆசிரியர்களால் தங்கள் வகுப்பில் கவனித்துக் கொடுக்கப்பட்டவையாகும். இவை தவிர வீட்டு மொழிக்கும் தமிழுக்கும் இடையிலான வேறுபாட்டால் எங்கெங்குப் பிழைகள் மாணவர்களால் இழைக்கப்படலாம் என ஊகித்து எழுதப்பட்டிருக்கின்றன.

## வரிவடிவ இடையீடு

வீட்டுமொழியை ஓரிரு ஆண்டுகள் கற்றுவிட்டு பின்னர் தமிழை முதன் மொழியாகக் கற்கும் போது வீட்டுமொழியின் வரிவடிவம் தமிழை எழுதும் போது இடையீடு செய்யக்கூடும்.

சான்றாக, உருதுவை முதலில் கற்ற குழந்தை பின்னர் தமிழைக் கற்ம்குபோது 'அம்மா' என்ற சொல்லை எழுதும் போது 'மாம் அ' என்று எழுதலாம்.

மலையாளத்தை முதலில் கற்ற குழந்தை பின்னர் தமிழைக் கற்கும் போது இகர ஈகாரத் தலைக்கட்டை அடிப்படையான மெய் யெழுத்தோடு ஒட்டாது மேலே தனியாகத் தொங்குவது போல் எழுதுகிறார்கள். தெலுங்கு, கன்னடம், அல்லது இந்தியை முதலில் கற்ற குழந்தை பின்னர் தமிழைக் கற்கும் போது க, ச, த போன்ற எழுத்துகளை எழுதும் போது மேற்கோட்டை இந்தியை எழுதுவது போல கடைசியில் இடுகிறார்கள்.

இவ்வாறு வீட்டுமொழியின் செல்வாக்கால் அவர்கள் பேசுகின்ற எழுதுகின்ற தமிழில் ஏற்படும் தமிழுக்குப் புறம்பான இயல்புகளை இடையீடு என்று சொல்கிறோம். வீட்டுமொழியின் இவ்விடையீடே தமிழ் மொழியில் மாணவர் செய்யும் பெரும்பாலான பிழைகளுக்குக் காரணமாக அமைகிறது. இம்மொழி இடையீட்டை எவ்வாறு அடையாளங் கண்டு கொள்வது, கண்டபின் அவற்றை நீக்க எவ்வெவ் வழிகளைக் காண்பது ஆகியவையே **உறழ்வு ஆய்வு**. மொழிகளுக் கிடையே ஒலியிலும், சொல்லிலும், வாக்கியத்திலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஆகவே, இருமொழியக் குழந்தைகள் தமிழைக் கற்கும் போது வீட்டுமொழியறிவு சில கூறுகளில் துணை செய்யும்; சில கூறுகளில் ஊறு செய்யும். வீட்டுமொழியமைப்பு தமிழ் மொழி அமைப்பிலிருந்து வேறுபடும் இடங்களே மாணவரின் பிரச்சினைக் குரிய பகுதியாக, அஃதாவது கடினமான பகுதியாக அமைந்து' பிழை ஏற்படக் காரணமாகின்றன.

தமிழை முதன் மொழியாகப் பயிலும் குழந்தைகள் ஏற்கனவே அறிந்துள்ள வீட்டுமொழி அமைப்போடு ஒத்திருக்கும் அமைப்பு மட்டுமின்றி வேறுபட்டு நிற்கும் தமிழ் மொழி அமைப்பையும் வீட்டு மொழியைப் போன்ற அமைப்பாகவே கருதலாம். ஏற்கனவே அறிந் துள்ள வீட்டு மொழி பற்றிய அறிவு தமிழ் மொழி பயிலும் போது தோன்றிக் கொண்டேயிருக்கும். வீட்டு மொழியால் ஏற்படும் இடையீட்டை **நேர்முக இடையீடு, மறைமுக இடையீடு** என்று

இரண்டாக வகைப்படுத்தலாம். தமிழில் 'கொடு' என்னும் வினைச் சொல்லிற்குக் 'கொடுக்க' என்பது செயவெனும் வினையெச்ச வடிவம். கன்னட மொழியில் இது 'கொட' என்று பயன்படுகிறது. இதன் காரணமாகக் கன்னடத்தை வீட்டுமொழியாகக் கொண்டவர்கள் தமிழ் பயிலும் போது நீ கொடுக்கலாம் என்பதை நீ கொடலாம், என்றும் நீ கொடுக்க வேண்டும் என்பதை நீ கொட வேண்டும் என்றும் இருமொழியக் குழந்தைகள் எழுத்திலும் பேச்சிலும் பயன்படுத்தலாம். இத்தகைய இடையீட்டை **நேரடி இடையீடு** எனலாம்.

வீட்டுமொழியில் தமிழ் மொழியின் குறிப்பிட்ட ஓர் அமைப்பே இல்லாத போது தோன்றும் இடையீடு **மறைமுக இடையீடாகும்.** தமிழில்

அவன் படித்தான்
அவள் படித்தாள்
அவர் படித்தார்
அவர்கள் படித்தார்கள்

என்று எழுவாயின் பால், எண் தன்மைக்கொப்ப பயனிலையும் மாறியமைகிறது. ஆயின் மலையாள மொழியில் இதுபோன்று பால் எண் இயைபு விகுதி இல்லாத காரணத்தால் மலையாளத்தை வீட்டுமொழியாகக் கொண்ட குழந்தைகளின் தமிழில் வாக்கிய அமைப்பில் இடையீடு நேரலாம்.

அவன் படிச்சு
அவள் படிச்சு
அவர் படிச்சு
அவர்கள் படிச்சு

மாணவரின் பிழைக்கு வீட்டுமொழி-தமிழ் மொழி அமைப்பு வேறுபாடு மட்டும் காரணமாக அமைவதில்லை. குழந்தைகள் ஏற்றுள்ள தமிழ் மொழி வளர்ச்சியின் அளவு தமிழ்மொழியிலேயே காணப்படும் சில ஒழுங்கற்ற அமைப்புகள் தமிழ் மொழியில் காணப்படும் இரு நிலை வழக்குத் தன்மை ஆகியனவும் மாணவர் செய்யும் பிழைக்குக் காரணமாகலாம்.

### வளர்மொழி இடையீடு

தொடக்க நிலையில், குழந்தைகளுக்குத் தமிழ்மொழியின் ஒரு சில அமைப்புகள் மட்டுமே கற்பிக்கப்பட்டிருக்கும். இந்நிலையில் இக்குழந்தைகள் பெற்றுள்ள தமிழ் மொழி அறிவு முழுமையடையாமல் குறை நிலையில் இருக்கும். இவர்களின் இம்மொழியறிவை வளர்மொழி என்று சொல்லலாம். குழந்தைகள் தாங்கள் பெற்றுள்ள

குறையறிவோடு தமிழைப் பேச, எழுத முயற்சி செய்யலாம். அப்பொழுது இவ்வளர்மொழி அறிவு (தாங்கள் கற்றிராத) தமிழின் புதிய அமைப்புகளைப் பயன்படுத்த முயற்சி செய்யும் நிலையில் இடையீடு செய்து பிழை ஏற்பட ஏதுவாகலாம். இதனை வளர்மொழி இடையீடு என்றுகூறலாம். சான்றாக, தமிழில் பல இறந்த கால இடைநிலைகள் இருக்கின்றன. ஒவ்வொன்றாகக் கற்பித்து வரும் நிலையில் ந்த்-இடைநிலை ஏற்கும் வினைச் சொற்களைக் கற்பிக்கும் முன்னரே உட்கார் எனும் வினைச் சொல் வந்தால் அதை உட்காரினேன் எனப் பயன்படுத்தலாம்.

## தமிழ் மொழியிலுள்ள விதி விலக்குகளின் இடையீடு

தமிழ் மொழியில் காணப்படும் சில அமைப்புகள் ஒரே விதியமைப்பில் வராமல் விதிவிலக்குகள் பெற்று வரலாம். இது தமிழ் பயிலும்போது இடையீடு செய்யலாம்.

சான்றாக 'எடு' என்ற வினைச் சொல்லின் எதிர்கால வடிவம் 'எடுப்பேன்' என்று வருவதை மாணவர் கற்றுக்கொண்டிருப்பர். இவ்வினையின் வடிவை ஒத்த நடு, விடு போன்ற வினைச் சொற்களின் எதிர்கால அமைப்பையும் ('எடு' வின் எதிர்கால அமைப்புப் படியே) 'நடுப்பேன்', 'விடுப்பேன்' என்று மாணவர் பிழையாக எழுதலாம் பேசலாம்.

இருமொழியக் குழந்தைகள் தமிழின் பேச்சு வழக்கை முதலில் அறிந்து வருகிறார்கள். அதனால் அவர்கள் அறிந்திருக்கும் பேச்சு வழக்கு எழுத்து வழக்கில் இடையூறு செய்யலாம். இவர்களின் தமிழ்ப் பேச்சு வழக்கில் வீட்டுமொழியின் செல்வாக்கு இருக்கும். 'நான் படித்தேன்' என்பதை நான் 'படிச்சேன்' என்றோ 'அவள் வந்தாள்' என்பதை 'அவ வந்தா' என்றோ பிழையாக எழுதுவது பேச்சு வழக்கின் இடையீட்டினால் ஏற்படுவதாகும். இவ்வியல்பைத் தமிழை வீட்டுமொழியாகக் கொண்ட குழந்தைகளும் பெற்றிருக்கின்றனர்.

தமிழை வீட்டுமொழியாகவும் வெளியுலக மொழியாகவும் கொண்ட குழந்தைகள் தமிழை வகுப்பறையில் கற்றுக் கொள்வதென்பது வீட்டில் தமிழ் கற்றல் நிலையின் தொடர்ச்சியேயாகும். ஆயின் இருமொழியக் குழந்தைகள் தமிழை அறிந்தோ அறியாமலோ பள்ளிக்கு வந்து வகுப்பறையில் தமிழைக் கற்கத் தொடங்குதல் ஓரளவு மாறுபட்டு அமைகிறது. அதற்கு மொழி கற்பிக்கும் ஆசிரியர் இக்குழந்தைகளின் தமிழ்மொழி அறிவுக்கு ஏற்றவாறு சில அணுகுமுறைகளையும் செயற்பாடுகளையும் திட்டமிடுவது தேவையாகிறது.

பொதுவாக, பாடத்திட்டமும் பாட அமைப்பும் பாடமும் எழுதப்படும் போது ஒரே மொழியை வீட்டு மொழியாகவும் வெளி யுலக மொழியாகவும் கொண்ட குழந்தைகளை மனத்தில் கொண்டு தான் எழுதப்படுகின்றன. தமிழை வீட்டு மொழியாகக் கொண்ட குழந்தைகளும் கற்றுக்கொள்ளப்போவது ஒரேமாதிரியான பாடநூல் தானே! இருமொழியக் குழந்தைகள் செய்கின்ற பிழைகளுக்கு வீட்டு மொழியின் இடையீடு பெரிதும் காரணமாக அமைகிறது. இப் பிழைகளை ஆசிரியர் முன் கூட்டியே ஊகித்து விடுவதால் இவை ஏற்படாதவாறு ஏற்ற பயிற்சிகளைத் திட்டமிட்டு அளிக்கமுடிகிறது. எந்தெந்த வீட்டு மொழிக் குழந்தைகள் தமிழின் எந்தெந்த இலக்கண அமைப்புகளில் இடையீடு செய்யக் கூடும் என்பதை ஆசிரியர் ஓரளவு அறிந்து வைத்திருப்பதால் இவற்றிற்கேற்றவாறு கற்பிக்கும் முறை மையை மாற்றியமைத்துக் கொண்டு தீர்வு காண முடிகிறது.

## ஆசிரியர் அறிய வேண்டிய சில குறிப்புகள்

1. மொழி இடையீடு என்றால் என்ன என்பதை அறிந்திருக்க வேண்டும்.

2. இடையீடு ஒலிகள், சொற்கள், வாக்கியங்கள் போன்றவற்றில் ஏற்படுவதை அறிந்திருக்க வேண்டும்.

3. உறழ்வு ஆய்வு என்றால் என்ன என்பதைப் பற்றி அறிந்திருக்க வேண்டும்.

4. நேர்முக இடையீடு, மறைமுக இடையீடு பற்றி அறிந்திருக்க வேண்டும்.

5. வளர்மொழி இடையீடு, தமிழ் மொழி இடையீடு, பேச்சு வழக்கு இடையீடு பற்றி அறிந்திருக்க வேண்டும்.

6. வீட்டு மொழியின் இடையீடு பற்றி ஆசிரியர் முன் கூட்டியே அறிந்து கொள்வதால் ஏற்ற பயிற்சிகளைத் திட்டமிட அறிந் திருக்க வேண்டும்.

7. மேற் கூறியவற்றிற்குரிய செய்திகளை உங்கள் வகுப்பு மாணவர் களிடமிருந்து தொகுக்கவும். இதற்கென ஆசிரியர் ஒரு குறிப்பேடு வைத்துக் கொண்டு அவ்வப்போது பிழைகளைத் தொகுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

—o—

# 5. தமிழின் இருவழக்கு நிலை

தமிழ் மொழி பழங்காலத்திலிருந்தே எழுத்து வழக்கு, பேச்சு வழக்கு என்ற இருவகையாக வாழ்ந்து வருகிறது. தமிழில் எழுத்து வழக்கிற்கும் பேச்சுவழக்கிற்கும் பல ஒற்றுமைகளும் வேற்றுமைகளும் உள்ளன. பேச்சு வழக்கிற்கு இல்லாத சில பண்புகள் எழுத்து வழக்கிற்கு உண்டு. அதுபோன்றே எழுத்து வழக்கிற்கு இல்லாத சில பண்புகள் பேச்சு வழக்கிற்கு உண்டு. நாம் பொதுவாகத் தமிழில் எழுதும் போது பேசுவது போல் எழுதுவது இல்லை; பேசும்பொழுது எழுத்துத் தமிழில் பேசுவதும் இல்லை. இவ்வாறு தமிழ் மொழியின் எழுத்துவழக்கும் பேச்சுவழக்கும் இரு தனி நிலைகளாகச் செயல்படும் தன்மையைத் தமிழின் **இருவழக்கு நிலை** என்கிறோம். தமிழின் பேச்சுவழக்கு இடத்திற்கு இடமும் சமூகத்திற்குச் சமூகமும் வேறுபட்டிருக்கிறது.

இருமொழியச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தமிழ் மொழி கற்கும் போது பின்வரும் நிலைகளுக்கு உள்ளாகிறார்கள். முதலில் தங்களுடைய வீட்டுமொழியைப் பேசத் தொடங்குகின்றனர். அதன்பின் அவர்களைச் சுற்றிப் பேசப்படும். அவர்களுடைய சமூகத் தமிழைப் பேசத் தொடங்குகின்றனர். மூன்றாவதாக தங்களுடைய சமூகத்துத் தமிழிலிருந்து அவர்கள் வாழும் வட்டாரத் தமிழையும் பேசத் தொடங்குகின்றனர், இவ்வட்டாரத் தமிழ் அவ்வட்டாரத்தில் வாழ்கின்ற பல சமூகத்தினருக்கும் பொதுவாக அமைகின்றது. அதன் பின் நான்காவதாக கல்வி அறிவின் வளர்ச்சியாலும் போக்குவரத்து, செய்திப் பரிமாற்றக் கருவிகளாலும் தமிழ்நாட்டின் பல இடங்களிலும் பணிபுரியும் அல்லது கல்வி கற்கும் வாய்ப்பினாலும் தமிழ்நாட்டில் பேசப்படுகின்ற பல வட்டாரத் தமிழுக்கும், பல சமூகத் தமிழுக்கும் பொதுவான இயல்புடைய ஒரு தமிழைப் பேசத் தொடங்குகின்றனர் இத்தமிழைப் பேசும் போது பேசுபவர்களின் வட்டார, சமூகக் கூறுகள் குறைந்தும் மறைந்தும் காணப்படும். ஐந்தாவதாக எழுத்துத் தமிழின் அடிப்படையிலான திருந்திய பேச்சுத் தமிழில் திறன் ஏற்படலாம். இவ்வழக்கையே வானொலி, மேடைப்பேச்சு முதலியவற்றில் பேசுகிறோம். இவற்றோடு எழுத்து வழக்கையும் அவர்கள் கற்றுக் கொள்கிறார்கள். கடைசி மூன்றும் பள்ளிக் கல்வியால் வருவது.

தமிழை வீட்டுமொழியாகக் கொண்டுள்ள குழந்தைகளை மட்டும் மனத்திற்கொண்டு தமிழ்ப் பாடத் திட்டம் அமைந்திருப்பதால் இப்பாடத்திட்டம் எழுத்து வழக்கைச் செம்மையாகப் பேச்சு

வழக்காகத் தருவதற்கு மட்டுமே வலியுறுத்துகிறது. இருமொழியக் குழந்தைகளின் தேவைக்கேற்ப எழுத்துவழக்கைப் பேச்சில் ஆக்கும் முயற்சியோடு பேச்சுவழக்கையே (பொதுபேச்சு வழக்கு) கற்றுக் கொள்கிற முயற்சியையும் வலியுறுத்த வேண்டியுள்ளது. வகுப்பறையில் பேச வேண்டிய, எழுத்து வழக்கின் அடிப்படையிலமைந்த பேச்சு வழக்கு, வெளியில் பேச வேண்டிய பேச்சு வழக்கின் திருந்திய வடிவிலமைந்த பொதுப்பேச்சு வழக்கு என்ற இரு வழக்குகளைக் கற்கும் முயற்சியில் இருமொழியக் குழந்தைகள் ஈடுபட வேண்டியுள்ளது.

தமிழ்க் கல்வியின் குறிக்கோள் தமிழின் இருவழக்குகளையும் செம்மையாகத் தன்னதப்படுத்திக் கொள்வதே. அஃதாவது வகுப்பறையில் தமிழைப் பேசுவதும் எழுதுவதும் எழுத்துத் தமிழின் அடிப்படையிலும், வெளி உலகில் பேசுவது பொதுப் பேச்சுத் தமிழின் அடிப்படையிலும் விளங்குவதாகும். இருமொழியக் குழந்தைகளைக் கருத்தில் கொள்ளும்போது தமிழின் இவ்விரு வழக்குகளையும் தொடக்க நிலைத் தமிழ்க் கல்வியில் செம்மையாகத் தன்னகப் படுத்திக் கொள்ள முயலுவது தேவையாகிறது. இதனைக் கருத்திற் கொண்டு, ஆசிரியர் தம் அணுகு முறைகளையும் செயல்முறைகளையும் உருவாக்கிக் கொண்டால் இருமொழியக் குழந்தைகளும் தமிழை வீட்டுமொழியாகக் கொண்ட குழந்தைகளைப் போன்று பொதுப் பேச்சுத் தமிழில் வெளியுலகில் உரையாடவும் எழுத்துத் தமிழில் வகுப்பறையில் பேசவும், எழுதவும் திறனைப் பெறுவார்கள் என்பது உறுதியாகும்.

**ஆசிரியர் அறிய வேண்டிய சில குறிப்புகள்**

1. தமிழின் இருவழக்கு நிலை என்றால் என்ன என்பதை அறிந்திருக்கவேண்டும்.

2. பொதுப் பேச்சுத் தமிழ் என்றால் என்ன என்பதைப் பற்றி அறிந்திருக்கவேண்டும்.

3. இருமொழியக் குழந்தைகளுக்குப் பொதுப்பேச்சுத் தமிழ், எழுத்துத் தமிழ் என்ற இரண்டையும் கற்றுக் கொடுக்க வேண்டிய தேவையை அறிந்திருக்க வேண்டும்.

4. பேச்சுத் தமிழுக்கும் எழுத்துத் தமிழுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை அறிந்திருக்க வேண்டும்.

5. இருமொழியக் குழந்தைகளின் மொழி வளர்ச்சியில் உள்ள ஐந்து நிலைகளில் அவர்களுடைய தமிழில் ஏற்படும் இடர்பாடுகள் எந்தெந்த நிலைகளில் ஏற்படுகிறது என்பதை சிந்திக்க வேண்டும்.

# 6. தமிழும் தெலுங்கும்

கோயமுத்தூர், சேலம் போன்ற மாவட்டங்களில் தெலுங்கை வீட்டுமொழியாகக் கொண்டவர்கள் அதிகமாக வாழ்கின்றனர். (காண்க : இயல் ஒன்றிலுள்ள பட்டியல்) தெலுங்குதிராவிடமொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழி. அதனால் தமிழுக்கும் தெலுங்குக்கும் இடையே ஒற்றுமைகள் காணப்படுகின்றன. எனினும் இரண்டு மொழிகளுக்கும் இடையே எழுத்திலும், சொல்லிலும், வாக்கியங்களிலும் பல வேற்றுமைகள் காணப்படுவதால் தெலுங்கை வீட்டு மொழியாகக் கொண்ட குழந்தைகள் தமிழைக் கற்றுக் கொள்ளும் போது சில இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன. தமிழுக்கும் தெலுங்குக்கும் இடையேயுள்ள ஒருசில வேற்றுமைகளை இங்கு பார்க்கலாம்.

### ஒலிகளில் வேறுபாடுகள்

தமிழ் மொழியில் க, ச, ட, த, ப என்னும் வல்லினத்தில் ஒவ்வொன்றிற்கும் ஒரெழுத்து உண்டு. ஆனால் தெலுங்கு மொழியில் ஒவ்வொரு வரிசையிலும் நான்கு எழுத்துகள் உண்டு. அதாவது, ககர வரிசையில் நான்கு ஒலிகள் உண்டு. இதே போன்று சகர, டகர, தகர, பகர, வரிசை ஒவ்வொன்றிலும் நான்கு எழுத்துகளுண்டு. இதனால் தெலுங்கை வீட்டுமொழியாகக் கொண்ட குழந்தைகள் தமிழை முதல்மொழியாகக் கற்கும் போது தமிழ் ஒலிகளை, குறிப்பாக, வல்லின ஒலிகளை இடத்திற்கு தகுந்தவாறு ஒலிப்பதில் பிழை செய்யலாம். தமிழ் மொழியிலுள்ள ஒரே வல்லெழுத்து சொற்களின் முதலில் வரும்போதும் (**கப்பல்**) இடையில் இரட்டித்து வரும்போதும் (**பக்கம்**) சொற்களில் இடையில் இன்னொரு வல்லெழுத்தோடு வரும் போதும் (**வெட்கம்**) ஒருவகையாகவும் சொல் நடுவில் மெய்மயக்கம் இல்லாத தனி உயிர்மெய்யாக வரும் போது மற்றொரு வகையாகயும் (**பகல்**) மெல்லின எழுத்தை அடுத்து வரும்போது இன்னொரு வகையாகவும் (**அங்கு**) ஒலிக்கப் பெறுகிறது. மேற்கூறிய சொற்களில் ககரம் வரும்போது ஒலி மாறுவதைக் காண்க.

தமிழ் மொழிக்கேயுரிய சிறப்பு ஒலிகளான 'ழ'வும், 'றவும்' தெலுங்கு மொழியில் இல்லை. தெலுங்கு மொழியில் ல,ள என்ற வேறுபாடுதானுண்டு. தெலுங்கை வீட்டுமொழியாகக் கொண்ட

குழந்தைகள் பேசும் போதும் படிக்கும் போதும் 'ழ' எனும் ஒலியை 'ள' என்றே ஒலிப்பதுடன் எழுதுவதிலும் 'ள' வையே பயன்படுத்த நேரிடலாம். சான்றாக,

'பழம்' என்ற சொல்லை 'பளம்' என்றும் 'வாழை' என்ற சொல்லை 'வாளை' என்றும் பேசலாம், படிக்கலாம், எழுதலாம் 'அறி' என்ற சொல்லை 'அரி' என்றும் 'மறம்' என்பதை 'மரம்' என்றும் எழுதலாம்.

நிறையச் சொற்களில் தமிழில் 'ள' கரத்தில் வரும் சொற்கள் தெலுங்கில் லகரமாக மாறுகின்றன. இதன் காரணமாக ஒரு சொல்லில் ளகரம், வரும்போது அதை லகரமாகவே ஒலிப்பதையும் எழுதுவதையும் காணலாம். எடுத்துக் காட்டாக, பள்ளி என்பதை பல்லி எனத் தெலுங்கில் கூறுவதால் தமிழின் 'பள்ளி' யையும் 'பல்லி' என்றே ஒலிக்கக் காணலாம்.

சொற்களின் கடைசியில் வருகின்ற 'உ' எனும் உயிரொலி தெலுங்கில் முற்றியலுகரமாகவே ஒலிக்கப் பெறுகிறது. அதுவே தமிழில் குற்றியலுகரமாக ஒலிக்கப் பெறுகிறது. தெலுங்கை வீட்டு மொழியாகக் கொண்ட குழந்தைகள் குற்றியலுகரம் வரும் சொற்களை முயற்றியலுகரமாகப் பேசலாம், படிக்கலாம். பசு, ஆடு, ஆட்டு போன்ற சொற்களை முற்றியலுகரமாக ஒலிக்கலாம்.

தமிழில் பல ஆட்பெயர்களும் வேறு பொருள்களைக் குறிக்கும் சொற்களும் நெடில் உயிரில் முடிவதுண்டு. தெலுங்கில் இதை குறிலாகப் பேசலாம், படிக்கலாம் சில நேரங்களில் எழுதலாம். தாத்த, அப்ப, அம்ம, அக்க, போன்று குறிலுடன் தெலுங்கில் வருகின்றது.

தமிழில் சுட்டெழுத்துகளான அ, இ, எ, என்பன குறிலாகவரத் தெலுங்கில் இவை நெடிலாக அமைகின்றன. இதன் காரணமாகப் பேசும் போது இடர்ப்பாடுகள் வருவதுடன் எழுதும் போதுகூட இடர்ப்படலாம். எடுத்துக் காட்டாக, இப்புத்தகம், அத்தட்டு, எனும் சொற்களை அவர்கள் இபுத்தகம் என்றோ ஈபுத்தகம் என்றோ அதட்டு, ஆ தட்டு; என்றோ படிக்கலாம், எழுதலாம். இதன் காரணமாகப் புணர்ச்சியிலும் பிழை ஏற்படுகிறது. (பார்க்க : **பிழை தொகுத்தலும் நீக்கலும்.**)

### சொல்லிலக்கணத்தில் வேறுபாடுகள்

தமிழில் படர்க்கைப் பெயரில் ஆண்பால் பெண்பால் என்ற பால் பாகுபாடு உயர்திணையில் உள்ளது. ஆனால் தெலுங்கு மொழியில்

பெண்பால், ஒருமையில் அஃறிணையுடனும் பன்மையில் உயர்திணையுடனும் இணைந்துள்ளது. எடுத்துக்காட்டாக,

தமிழ் : அவன்/இவன் ஆண்பால்
அவள்/இவள் பெண்பால்

தெலுங்கு : வாண்டு/வீண்டு 'அவன்/இவன்' ஆண்பால்
அதி/இதி அவள், 'அது/இவள், இது' பெண்பாலும் அஃறிணையும்.

இத்தகைய வேறுபாட்டால் தெலுங்கு மொழியை வீட்டுமொழியாகக் கொண்ட குழந்தைகள் தமிழில் பேசும் போதும் எழுதும் போதும் பெண்பாலை அஃறிணையுடன் இணைத்து விடலாம். (மேற்கூறியவற்றில் பல இயல்புகள் தமிழ்க் கொச்சைப் பேச்சிலும் உண்டு. ஆயின், தமிழை வீட்டுமொழியாகக் கொண்ட குழந்தைகள் எழுத்துத் தமிழைப் பயிலும் போது இவ்வியல்புகளைப் பெரும்பாலும் எளிதில் களைந்து கொள்கிறார்கள். தெலுங்கை வீட்டுமொழியாகப் பேசும் குழந்தை எழுத்துத் தமிழைக் கற்கும் போதும் இவ்வியல்புகளை அவ்வளவு எளிதாகக் களைந்து கொள்ள முடிவதில்லை.)

தமிழில் வேற்றுமை உருபு ஏற்பதற்கு முன்னால் தன்மை முன்னிலைச் சொற்கள் உருமாறுகின்றன. ஆனால் தெலுங்கு, மொழியில் இத்தகைய வேறுபாடு கிடையாது. அதாவது தெலுங்கு மொழியிலுள்ள தன்மை, முன்னிலைச் சொற்கள் வேற்றுமை உருபுக்கு முன்னால் தம் கடைசி எழுத்தை (ஒலியை) இழந்து விடுகின்றன. சான்றாக,

தமிழ் : நான்+கு = எனக்கு
நீங்கள்+ஐ = உங்களை

தெலுங்கு : நானு+கு = நாக்கு
மீரு+கு = மீக்கு

அதாவது, நானு, மனமு, நுவ்வு, மீரு என்னும் சொற்கள் நா, மன், நா, மீ என நிலை பெறுகின்றன. இத்தகைய வேறுபாட்டினால் தெலுங்கை வீட்டுமொழியாக் கொண்ட குழந்தைகள் தமிழில் வேற்றுமை உருபு சேர்த்து எழுதும்போதும் பேசும்போதும் 'எனக்கு' என்பதற்குப் பதிலாக 'நாக்கு' எனவும் 'உங்களுக்கு' என்பதற்குப் பதிலாக நீங்களுக்கு எனவும் பயன்படுத்தலாம்.

தமிழில் காலங் காட்டும் இடைநிலைகள் ஒன்றுக்கு மேல் உள்ளன. இறந்த காலத்தில் -இன்-, -த்த்-, -ந்த்-,-த்- எனப் பல இடைநிலைகள் உள்ளன. நிகழ்காலத்தில் -கிற்-, -க்கிற்-, -கின்ற-எனப்பல உள்ளன. -ப்--ப்ப்-, -வ்-, என்பன எதிர்கால இடை நிலைகளாகவும் உள்ளன. ஆனால் தெலுங்கு மொழியில் காலங்காட்டும் இடைநிலைகள் ஒவ்வொரு காலத்திற்கும் ஒவ்வொன்றுதான் உள்ளன. எடுத்துக் காட்டாக, -இன்- என்னும் இடைநிலை ஒன்றுதான் இறந்த காலத்தைக் குறிக்கப் பயன்படுகிறது. -தா- நிகழ்கால இடைநிலையாகவும் -தூ- எதிர்கால இடைநிலையாகவும் பயன்படுகின்றன. தெலுங்கை வீட்டுமொழியாகக் கொண்ட குழந்தைகள் தமிழில் -இன்- இடைநிலையை மனத்திற் கொண்டு எல்லா வினைச் சொற்களுக்கும் இதையே இறந்த காலத்தில் பயன்படுத்தலாம். எடுத்துக் காட்டாக,

'அவன் செய்தான்' என்பதை 'அவன் செய்யினான்' என்றும் 'நான் கொடுத்தேன்' என்பதை 'நான் கொடினேன்' என்றும் பயன் படுத்தலாம்.

இதைப் போன்றே நிகழ் காலத்திலும் எதிர் காலத்திலும் வீட்டு மொழியில் ஒரே இடைநிலை வடிவம் இருப்பதால் இடர்ப்பாடு நேரலாம்.

### சொற்றொடரில் வேறுபாடுகள் :

தமிழ் வாக்கியங்களில் பயனிலைச் சொல் எழுவாய்ச் சொல்லின் பால் எண் இவற்றின் இயைபைக் காட்டும். அதாவது பயனிலையில் ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன் பால் பலவின் பால் ஆகியவற்றைத் தமிழில் குறிக்கிறோம். ஆனால் தெலுங்கு வாக்கியங்களில் ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால், என்று மட்டுமே வினை விகுதிகளாகக் குறிக்கப்படுகின்றன. பெண்பால் ஒன்றன் பாலோடு கலந்து இயங்குகிறது. 'அதாவது ,அவள்சொன்னாள்' எனத் தமிழில் கூறுவதைத் தெலுங்கில் அதி செப்பினதி என்று கூறுவார்கள். இவ்வாக்கியம் 'அது சொன்னது' என்றும் பொருள் பெறும். இவ்வாறு தெலுங்கில் பயன்படுவதால் இருமொழியக் குழந்தைகள் அவள் சொன்னாள் என்பதற்குப் பதிலாக, அவள் சொன்னாதி என்றோ 'அது சொன்னாதி' என்றோ பேசலாம், எழுதலாம்.

### சொற்களில் வேறுபாடுகள்

தமிழுக்கும் தெலுங்குக்கும் இடையே நிறையச் சொற்கள் பொதுவாக அமைகின்றன. அவற்றில் ஒருசில, சில ஒலிப்பு மாற்றங்களைப் பெற்றிருக்கும். சில வடமொழிச் சொற்களுக்குத் தமிழில்

ஒரு பொருளும் தெலுங்கில் இன்னொரு பொருளுமாக இருக்கும். இவ்வாறு பல வகைகளில் சொற்கள் வேறுபடுவதால் இரு மொழியக் குழந்தைகள் தமிழைக் கற்கும் போது சொற்களைத் தவறாகப் பேசலாம், படிக்கலாம், எழுதலாம். எடுத்துக்காட்டாக பிரமாதம் என்ற சொல் தமிழில் 'நன்றாக இருக்கின்றது' எனப் பொருள் படுகிறது. ஆனால் தெலுங்கில் இது 'அபாயம், விபத்து' என்கின்ற பொருளின் வருகின்றது. தமிழில் மெய்யில் முடியும் சொற்கள் தெலுங்கில் 'உ' பெற்று வரும் எனவே காலமு, ஆகாயமு, பாலு எனப் பேசுவதையும் படிப்பதையும் எழுதுவதையும் காணலாம், பொழுது—பெத்து, மருந்து—மந்து என ஒலிப்பில் மாறுபடுவதால் ஓரளவு ஒற்றுமையைப் பார்த்து அவற்றைப் பயன்படுத்தலாம்.

**ஆசிரியர் நினைவிலிருத்த வேண்டிய சில குறிப்புகள்.**

1. தெலுங்கை ஆசிரியர் ஓரளவாவது தெரிந்து வைத்திருக்க வேண்டும். தெலுங்கை வீட்டுமொழியாகக் கொண்ட குழந்தைகள் வகுப்பில் இருந்தால்.

2. தமிழும் தெலுங்கும், எழுத்துகளில், சொற்களில், சொல்லிலக்கணத்தில், வாக்கியத்தில் எவ்வாறு வேறுபடுகின்றன என்பதை அறிந்திருக்க வேண்டும்.

3. இவ்வேறுபாடுகளை மனத்திற்கொண்டு கற்பிக்கும் போது கவனம் செலுத்த வேண்டும்.

4. இரு மொழியக் குழந்தைகள் தங்கள் பேச்சிலும், படிப்பிலும், எழுத்திலும் பயன்படுத்தும் தெலுங்கின் செல்வாக்கைத் தொகுக்கவும்

—o—

## 7. தமிழும் கன்னடமும்

தர்மபுரி, சேலம், கோயமுத்தூர் போன்ற மாவட்டங்களில் கன்னடத்தை வீட்டுமொழியாகக் கொண்டவர்கள் அதிகமாக வாழ்கின்றனர். (காண்க : இயல் ஒன்றிலுள்ள பட்டியல்) கன்னடம், திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழி. தமிழுக்கும் கன்னடத்திற்கும் இடையே நிறைய ஒற்றுமைகள் காணப்பட்டாலும் எழுத்திலும், சொல்லிலும் வாக்கியங்களிலும் பல வேற்றுமைகளும் இருக்கின்றன. இதன் காரணமாகக் கன்னடத்தை வீட்டுமொழியாகக் கொண்ட குழந்தைகள் தமிழைக் கற்கும் போது பல இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன. தமிழுக்கும் கன்னடத்திற்கும் இடையேயுள்ள ஒரு சில வேற்றுமைகளை இங்கு பார்க்கலாம்.

### ஒலிகளில் வேறுபாடுகள்

தமிழில் ல, ள. ழ என்னும் ஒலிகளும் ர, ற என்னும் ஒலிகளும் தனித்தனியாக ஒலிக்கப் பெறுவதுடன் தனித்தனியே தெளிவாகவும் எழுதப்படுகின்றன. ஆனால் ல, ள என்னும் வேறுபாடும் 'ர' வும் தான் கன்னடத்தில் உண்டு. கன்னடத்தை வீட்டுமெழியாகக் கொண்ட குழந்தைகள் 'ழ' வை 'ள' வாகவே ஒலித்து 'ள' வாகவே எழுதுகின்றனர். இதைப் போலவே 'ற' வை 'ர' வாகவேஒலித்து 'ர' வாகவே எழுதுகின்றனர். எடுத்துக் காட்டாக, வாழ்க்கை என்பதை வாள்க்கை என்றும் 'பயிற்சி' என்பதை பயிர்ச்சி என்றும் பேசலாம், எழுதலாம். (பார்க்க : **தமிழும் தெலுங்கும்**)

தமிழில் ந, ன என்பன ஒலிப்பிலும் எழுத்திலும் வேறுபட்டுள்ளன. ஆனால் கன்னடத்தில் ஒலிப்பில் இருந்தாலும் எழுத்தில் தனியாக எழுதப்படுவதில்லை, இதனால் கன்னடத்தை வீட்டுமெழியாகக் கொண்ட குழந்தைகள் இவ்விரண்டையும் ஒன்றே போல் ஒலிப்பதுடன் ன 'வாகவே எழுதலாம்' சான்றாக, பந்து என்னும் சொல்லைப் பன்து எனவும் தந்தம் என்னும் சொல்லைத் 'தன்தம்' எனவும் பேசலாம், எழுதலாம் (பார்க்க **பிழை தொகுத்தலும் நீக்கலும்)**

தமிழில் க, ச, ட, த, ப, என்னும் வல்லினத்தில் ஒவ்வொன்றிற்கும் ஒரெழுத்துதான் உண்டு. ஆனால் கன்னட மொழியில் ஒவ்வொரு வரிசையிலும் நான்கு எழுத்துகள்உண்டு. அதாவது ககர வரிசையில் நான்கு ஒலிகள் உண்டு. இதே போன்று, ச, ட, த, ப என்னும் ஒலிகள் ஒவ்வொன்றிற்கும் நான்கு எழுத்துகள் உண்டு. இதனால்

கன்னடத்தை வீட்டுமொழியாகக் கொண்ட குழந்தைகள் தமிழை முதன் மொழியாகக் கற்கும் போது தமிழ் ஒலிகளைக் குறிப்பாக, வல்லின ஒலிகளை இடத்திற்குத் தகுந்தவாறு ஒலிப்பதில் இடர்ப் படலாம்.

தமிழில் 'ல' ககரத்திற்கு முன்னால் 'ற்' ஆக மாறுபடுகிறது. ஆனால் இத்தகைய மாறுபாடு கன்னட மொழியில் இல்லை. சான்றாக, தமிழில் கற்கள் என எழுத்தில் வருவதைக் கன்னடத்தை வீட்டுமொழியாகக் கொண்ட குழந்தைகள் கல்கள் என எழுதலாம்.

கன்னடத்தில் ஆட்களின் பெயர்களும் வேறு சில பொருள்களின் பெயர்களும் குறில் அ எழுத்தில் முடிவதுண்டு. இவற்றிற்கு இணை யான தமிழ்ச் சொற்கள் பெரும்பாலும் நெடிலில் முடியும் இதன் கார ணமாக இருமொழியக் குழந்தைகள் பேசும் போதும், படிக்கும் போதும் எழுதும் போதும் இடர்ப்பாடு செய்யலாம். சான்றாக, சீதா, கமலா, விமலா போன்றவை கன்னடத்தில் கமல, சித, விமல என்றே எழுதப் படுகின்றன.

## சொல்லிலக்கணத்தில் வேறுபாடுகள்

கன்னடத்தில் லீலா, கமலா என்னும் பெயர்ச் சொற்கள் வேற்றுமை உருபு ஏற்கும் முன்னால் லீலள், கமலள் என மாறுகின்றன. ஆனால் தமிழில் இத்தகைய மாறுபாடில்லை. கன்னடத்தை வீட்டு மொழியாகக் கொண்ட குழந்தைகள் தமிழில் லீலா, கமலா என்னும் பெயர்ச் சொற்களை வேற்றுமை உருபு ஏற்பதற்கு முன்னால் லீலாள் கமலாள் என மாற்றி எழுதலாம்.

தமிழைப் போன்று கன்னடத்தில் தன்மைப் பன்மையில் உளப் பாட்டுத் தன்மை (நாம்) உளப்படாத் தன்மை (நாங்கள்) என்னும் வேறுபாடில்லை. 'நாவு' என்னும் சொல்லையே 'நாம்' என்பதற்கும் 'நாங்கள்' என்பதற்கும் பொதுவாகப் பயன்படுத்துகின்றனர்.

இதனால் கன்னடத்தைவீட்டுமொழியாகக் கொண்ட குழந்தை களுக்கு இச்சொற்களைப் பயன்படுத்துவதில் இடர்ப்பாடு நேரிட லாம். 'நம் வீடு' என்பதையும் 'எங்கள் வீடு' என்பதையும் 'நம் வீடு' என்றே பேசலாம், எழுதலாம்.

பெயர்ச் சொல்லில் தன்மை முன்னிலைப் பெயர்ச்சொற்கள் வேற்றுமை உருபு ஏற்பதற்க்கு முன்னர் தமிழிலும் சில மாற்றங் களைப் பெறுகின்றன. ஆனால் இம்மாற்றங்கள் தமிழிலும் கன்ன டத்திலும் ஒன்றுபோல் இல்லை, எடுத்துக்காட்டாக, தமிழில்

'நான்' 'நீங்கள்' என்பன 'என்' 'உங்கள்' என மாறுகின்றன. ஆனால், கன்னடத்தில் 'நானு', 'நிவு' என்பன 'நன்', 'நிம்' என மாற்றம் அடைகின்றன. இதனால் கன்னடத்தை வீட்டுமொழியாகக் கொண்ட குழந்தைகள் 'எனக்கு,' 'உங்களுக்கு' எனப் பேசுவதற்கும் எழுதுவதற்கும் பதிலாக, 'நன்க்கு'; நிங்களுக்கு' எனப் பேசலாம், எழுதலாம்.

## சொற்றொடர்களில் வேறுபாடுகள்.

கன்னட மொழியில் 'பந்தில்ல', 'பருவதில்ல' என இருவகை எதிர்மறை உள்ளன. ஆனால் தமிழில் 'வரவில்லை' என்ற ஒரே எதிர்மறைதான் இறந்தகாலத்திற்கும் நிகழ்காலத்திற்கும் பொதுவாக உள்ளது. கன்னடத்தை வீட்டு மொழியாகக் கொண்ட குழந்தைகள் தமிழில் எதிர்மறை வாக்கியங்கள் அமைக்கும் போது தம் வீட்டு மொழி போன்ற இறந்த காலத்தில் வந்தில்லை என்றும் நிகழ்காலத்தில் வருவதில்லை என்றும் அமைத்துப் பேசலாம், எழுதலாம்.

தமிழில் எச்சங்கள், குறிப்பாக, செயவெனும் வினையெச்சம் அதாவது. 'வர', 'போக' 'இருக்க' ஆகியவை போன்று கன்னடத்திலும் காணப்படுகின்றன. ஆனால் கன்னடத்தில் 'அல்க்கு' எனும் விகுதியே பெரும்பாலும் செயவெனும் வினையெச்சப் பொருளில் பயன்படுத்தப் படுகிறது. சான்றாக, 'நான் சாப்பிடப் போனேன்' என்பதைக் கன்னடத்தில் 'நானு தின்னல்க்கு ஹோதேனே' என்று சொல்கிறார்கள். இதனால் கன்னடத்தை வீட்டுமொழியாகக் கொண்ட குழந்தைகள் செயவெனும் வினையெச்சங்களை வாக்கியங்களில் அமைத்துப் பேசுவதற்கும் எழுதுவதற்கும் இடர்படுகின்றனர்.

'ஒன்றுமில்லை' என்பதற்குக் கன்னடத்தில் 'ஏனுமில்ல' என வருவதால் தமிழில் இருக்கும் 'ஏன்' எனும் சொல்லைப் பயன்படுத்தி 'ஏனுமில்லை' என்று இவ்விருமொழியக் குழந்தைகள் பேசலாம், எழுதலாம்.

'நூறு ரூபாய்' என்பது கன்னடத்தில் 'ஒந்து நூறு ரூபாயிகளு' என வருகிறது. இதன் காரணமாக 'ஒரு பத்து', 'ஒரு நூறு' எனப் பேசலாம். எழுதலாம்.

## சொற்களில் வேறுபாடுகள்

தமிழும் கன்னடமும் திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்த மொழிகள் ஆகையால் சொற்களில் நிறைய ஒற்றுமைகள் இருக்கின்றன. எனினும் சில நேரங்களில் ஒரே சொல் இருமொழி

யிலும் வேறு வேறு பொருளில் பயன்படுத்தப் படலாம். பேச்சுத் தமிழிலும் கன்னடத்திலும் நிறைய வடமொழிச் சொற்கள் பயன்படுத்தப் படுவதால் அவற்றை எழுத்துத் தமிழிலும் எழுதலாம். தமிழ்ச் சொல் தெரியாத இடங்களில் வடிவ ஒற்றுமையுள்ள கன்னடச் சொல்லைப் பயன்படுத்தலாம். இவ்வாறாக, சொற்களுக்கிடையே காணப்படுகின்ற வேற்றுமைகளும் இடர்ப்பாடுகளைத் தரலாம். எடுத்துக் காட்டாக,

தமிழில் 'முடியாது' என்பதற்குக் கன்னடத்தில் 'ஆகிறதில்லை' என வழங்குகிறார்கள். 'திரிந்து விட்டது' (கெட்டு விட்டது) என்பதைக் கன்னடத்தில் 'ஒடெ தோய்த்து' என்கிறார்கள். 'இற' எனக் கூறுவதற்குத் 'தீர்' என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார்கள். ஆனால் தமிழில் இச்சொல் (தீர்) 'முடி' எனும் வினைப் பொருளில் வழங்கப்படுகிறது. இதனால் கன்னடத்தை வீட்டுமொழியாகக் கொண்ட குழந்தைகள் தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தும் போது இடர்ப்படுகின்றனர்.

**ஆசிரியர் நினைவிலிருத்த வேண்டிய சில குறிப்புகள்.**

1. கன்னடத்தை ஆசிரியர் ஓரளவாவது தெரிந்து வைத்திருக்க வேண்டும் (கன்னடத்தை வீட்டு மொழியாகக் கொண்ட குழந்தைகள் வகுப்பில் இருந்தால்)

2. தமிழும் கன்னடமும் எழுத்துகளில், சொற்களில், சொல்லிலக்கணத்தில் வாக்கியத்தில் எவ்வாறு வேறுபடுகின்றன என்பதை அறிந்திருக்க வேண்டும்.

3. இவ்வேறுபாடுகளை மனத்திற் கொண்டு கற்பிக்கும் போது கவனம் செலுத்த வேண்டும்.

4. இருமொழியக் குழந்தைகள் தங்கள் பேச்சிலும் எழுத்திலும், படிப்பிலும் பயன்படுத்தும் கன்னடமொழிச் செல்வாக்கைத் தொகுக்கவும்.

—o—

# 8 தமிழும் மலையாளமும்

கன்னியாகுமரி, கோவை போன்ற மாவட்டங்களில் மலையாளத்தை வீட்டுமொழியாகக் கொண்டவர்கள் அதிகமாக வாழ்கின்றனர். (காண்க: இயல் ஒன்றிலுள்ள பட்டியல்) திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த தமிழிலும் மலையாளத்திலும் எழுத்து, சொல் வாக்கியம் முதலியவற்றில் மிகுந்த ஒற்றுமை காணப்படும். சில இடங்களில், மலையாளம் தமிழிலிருந்து வேறுபடுவதால் மலையாளத்தை வீட்டுமொழியாகக் கொண்ட இருமொழியக் குழந்தைகள் தமிழைப் பயிலும்போது சில இடர்ப்பாடுகளை எதிர்ப் படுகின்றனர். ஆகவே மலையாளத்தை வீட்டுமொழியாகக் கொண்ட குழந்தைகளின் பிரச்சினைகளை முன் கூட்டியே அறிந்து கொள்ள மலையாளத்தின் மொழியமைப்பு பற்றியும் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர் அறிந்திருந்தால் உதவியாக இருக்கும்.

## ஒலிகளில் வேற்றுமைகள்

'ஐ' யில் முடியும் தமிழ்ச் சொற்கள் மலையாளத்தில் பெரும்பாலும் 'அ' ஒலிப்புப் பெற்று முடிகின்றன.

| மலையாளம் | தமிழ் |
|---|---|
| தல | தலை |
| வாழ | வாழை |
| காள | காளை |
| பச்ச | பச்சை |

இதனால் மலையாளத்தை வீட்டு மொழியாகக் கொண்ட இருமொழியக் குழந்தைகள் தமிழைப் பேசும் போதும், படிக்கும் போதும் எழுதும் போதும் 'ஐ' யில் முடியும் தமிழ்ச் சொற்களின் இறுதியை 'அ' ஒலிப்புடன் கூறலாம், எழுதலாம்.

'ஆ' வில் முடியும் தமிழ்ச் சொற்கள் மலையாள மொழியில் 'அ' வில் முடிகின்றன இதைப் பெரும்பாலும் ஆட்களின் பெயர்களிலும் ஒரு சில பொருள்களின் பெயர்களிலும் காணலாம்.

| மலையாளம் | தமிழ் |
|---|---|
| கமல | கமலா |
| ராத | ராதா |
| மால | மாலா |
| மீன | மீனா |
| காக்க | காக்காய் |

தமிழில் வரும் இச்சொற்களையும் தங்கள் வீட்டு மொழியான மலையாளத்தைப் போன்ற 'அ' முடிவுடன் உச்சரிக்கவும் எழுதவும் செய்யலாம்.

அ, இ என்ற சுட்டு வடிவங்கள் தமிழில் குறிலாக அமைந்திருக்க மலையாளத்தில் இவை முறையே 'ஆ', 'ஈ' என்று நெடிலாய் விளங்குகின்றன. ஆகவே அப்புத்தகம், இம்மரம் போன்ற தமிழ்ச் சொற்களிலுள்ள சுட்டுகளை இருமொழியக் குழந்தைகள் தங்கள் வீட்டுமொழியான மலையாளத்தைப் போன்று ஆ புத்தகம், ஈபுத்தகம் என்று நீட்டிக் கூறலாம்.

தமிழிலுள்ள க, ச, ட, த, ப என்ற ஐந்து வல்லெழுத்துகள் ஒவ்வொன்றிற்கும் நான்கு, நான்கு எழுத்துகள் மலையாளத்தில் உள்ளன. தமிழ் மொழியில் ஒரே வல்லெழுத்து சொற்களின் முதலில் வரும்போது (கப்பல்) இடையில்இரட்டித்து வரும்போது (பக்கம்) சொற்களில் இடையில் இன்னொரு வல்லெழுத்தோடு வரும் போது (வெட்கம்) ஒரு வகையாகவும் சொல் நடுவில் மெய்மயக்கம் இல்லாத தனி உயிர் மெய்யாக வரும்போது மற்றொரு வகையாகவும் (பகல்) மெல்லின எழுத்தை அடுத்து வரும்போது (அங்கு) இன்னொரு வகையாகவும் ஒலிக்கப் பெறுகிறது. மேற்கூறிய சொற்களில் ககரம் வரும்போது ஒலி மாறுவதைக் காண்க.

இவ்விதமான ஒலி மாற்றங்கள் மலையாள மொழியின் வல்லின எழுத்துக்களைப் பயன்படுத்தும் போது வழக்கத்தில் இருந்தாலும், அம்மொழியில் பயன்படுகிற பல்வேறு வடமொழிச் சொற்களை வட மொழியில் உச்சரிப்பது போலவே உச்சரிப்பார்கள். இக்கலப்பினால் தமிழ்ச் சொற்களைப் பேசும் போதும் படிக்கும் போதும் எழுதும் போதும் தங்கள் வீட்டுமொழியில் இயல்பாக அமைந்துள்ள ஒலி மாற்றங்களைத் தமிழில் பயன்படுத்துவதா அல்லது வடமொழிச் சொற்களை எழுதுவது போலவே ஒலிக்கிற முறைப்படித் தமிழ்ச் சொற்களை ஒலிப்பதா என்ற தடுமாற்றம் ஏற்படும்.

எடுத்துக் காட்டாக, பயம், விதவை என்ற தமிழ்ச் சொற்களை மலையாளத்தை வீட்டுமொழியாகக் கொண்ட குழந்தை bhaயம் என்றும், vidhaவை என்றும் தங்களுடைய பேச்சில் பயன்படுகிற வட சொல்லின் உச்சரிப்பைப் போலவே உச்சரிக்கலாம்.

மலையாள மொழியில் 'ஞ'வின் பயன்பாடு மிகுதியாகும். தமிழிலுள்ள 'ந' வில் தொடங்கும் சொற்கள் பெரும்பாலும் மலையாளத்தில் 'ஞ' வில் தொடங்கும். சான்றாக ஞான் 'நான்' ஞண்டு 'நண்டு' இது மலையாளத்தை வீட்டு மொழியாகக் கொண்ட குழந்தைகளுக்கு 'ந' வரும் தமிழ்ச் சொற்களைப் பேசும் போதும், படிக்கும் போதும், எழுதும்போதும் இடையீடு செய்யலாம்.

இதே போன்று தமிழில் 'ஞ்ச' என்ற ஒலி இணைகள் அமைந்த சொற்கள் மலையாளத்தில் 'ஞ்ஞ' என்ற இணை பெற்றுவரும். சான்றாக ஊஞ்ஞல் 'ஊஞ்சல்' கஞ்ஞி 'கஞ்சி' மஞ்ஞ 'மஞ்சள்' இதனால் தமிழில் 'ஞ்ச' என்ற ஒலி இணைவரும் சொற்களை 'ஞ்ஞ' என உச்சரிக்கும் நிலை மலையாளத்தை வீட்டுமொழியாகக் கொண்ட குழந்தைகளுக்கு ஏற்படலாம்.

தமிழின் 'ங்க' என்ற ஒலி இணை மலையாளத்தில் 'ங்ங' வாக அமைகிறது. இதனால் மலையாளத்தை வீட்டுமொழியாகக் கொண்ட குழந்தைகள் முருங்கை, மாங்காய் போன்ற தமிழ்ச் சொற்களை முருங்ங, (முரிங்க) மாங்ங என்று வீட்டுமொழி மலையாளத்தைப் போன்று கூறலாம்.

இதேபோன்று தமிழிலுள்ள '-ற்ற-' '-ன்ற-' '-த்த-' போன்ற ஒலி இணைகள் மலையாளத்தில் முறையே '-த்த-' '-ந்ந-' '-ச்ச-' என்று பெரும்பாலும் வருகின்றன. இதனால் மலையாளத்தை வீட்டுமொழியாகக் கொண்ட குழந்தைகள் தமிழிலுள்ள நெற்றி, குற்றம் போன்ற சொற்களை நெத்தி, குத்தம் என்றும், கன்று, நன்றி போன்ற சொற்களை கந்து, நந்நி என்றும், படித்த, கடித்த போன்ற சொற்களை படிச்ச, கடிச்ச என்றும் கூறலாம். தமிழை வீட்டுமொழியாகக் கொண்ட குழந்தைகளும், பேச்சுவழக்கின் செல்வாக்கால் மேற்கண்டவாறு தமிழ்ச் சொற்களைக் கூறலாம்.

தமிழில் 'ந' 'ன' ஆகிய இரண்டு எழுத்துகளும் சொற்களில் வரும் முறையில் வேறுபாடு கொண்டுள்ளன 'ந' சொல் முதலிலும் 'த' வின் முன்னும் வரும். 'ன' மற்ற இடங்களில் வரும். மலையாளத்தை வீட்டுமொழியாகக் கொண்ட குழந்தைகள் தமிழில் 'ன' வருமிடங்களில் 'ந' வையும் 'ந' வருமிடங்களில் 'ன' வையும் மாற்றி எழுதி விடலாம்.

## புணர்ச்சி விதிகளில் வேறுபாடு

தமிழில் 'ஆ' வில் முடியும் சொற்களுக்குப் பின் ஏதாவது உயிரெழுத்தில் தொடங்கும் சொற்கள் வந்தால் இவற்றிற்கிடையில் 'வ' தோன்றும். ஆனால் மலையாளத்தில் இவ்விடங்களில் யகர உடம்படுமெய்யும் பெற்று வருவதால்

(அம்மா + இடம்) அம்மாவிடம் என்பதை **அம்மாயிடம்** என்றும் (பேனா + ஆல்) **பேனாவால்** என்பதை **பேனாயால்** என்றும் மலையாளத்தை வீட்டுமொழியாகக் கொண்ட குழந்தைகள் தமிழைப் பேசும் போதும் எழுதும் போதும் பயன்படுத்தக் கூடும்.

தமிழில் லகரத்தில் முடியும் சொற்களுக்கு முன் வல்லின எழுத்தில் தொடங்கும் சொற்கள் வந்தால் லகரம் றகரமாக மாறுவதும், ளகரத்தில் முடியும் சொற்கள் அதே சூழ்நிலைகளில் டகரமாக மாறுவதும் நடைபெறும். இம்மாற்றங்கள் மலையாள மொழியில் ஏற்படுவதில்லை. இதனால் மலையாளத்தை வீட்டுமொழியாகக் கொண்ட குழந்தைகள் 'மயிற்பீலி', 'கற்சுவர்', 'முட்செடி', 'வாட்படை', போன்ற தமிழ்ச் சொற்களை முறையே 'மயில்ப்பீலி', 'கல்ச்சுவர்', 'முள்ச்செடி', 'வாள்ப்படை' என்று எழுதக்கூடும்.

அக்குழந்தை, அச்சிலை, அத்தட்டு, இப்புத்தகம், இம்மரம் போன்ற சொற்களில் சுட்டெழுத்திற்குப் பின் மெய்யெழுத்து இரட்டிப்பதைக் காணலாம். மலையாளத்தில் சுட்டெழுத்துகள் ஆ, ஈ என்று நெடிலாக இருப்பதால் மெய்யெழுத்து இரட்டிப்பதில்லை. வீட்டுமொழியின் இச்செல்வாக்கால் மலையாளத்தை வீட்டு மொழியாகக் கொண்ட குழந்தை தமிழிலும் மெய்யெழுத்து இரட்டிக்காது எழுதும் வாய்ப்பு உள்ளது.

புளி + மரம் : புளியமரம், ஆல் + மரம் : ஆலமரம் என்று தமிழில் எழுதுகிறோம், ஆனால் மலையாளத்தில் இவற்றிற்கிடையே எதுவும் சேர்ப்பதில்லை. இதனால் இருமொழியக் குழந்தைகள் **புளிமரம், ஆல்மரம்** என்று தமிழில் எழுதும் வாய்ப்புள்ளது.

## சொல்லிலக்கண வேறுபாடுகள்

தமிழில் உயர்திணை படர்க்கைப் பன்மை **அவர்கள்**, என்றும் மரியாதை ஒருமை **அவர்** என்றும் வர மலையாளத்தில் **அவர்** என்பதே பன்மையைக் குறித்து வருகிறது. இதனால் மலையாளத்தை வீட்டு மொழியாகக் கொண்ட குழந்தைகள் தமிழில் **அவர்கள்** வரும் இடங்களில் **அவர்** என்றும் **அவர்கள்** வரும் இடங்களில் **அவர்கள்** என்றும் தடுமாறிப் பயன்படுத்தலாம்.

தமிழில் எதிர்மறை வினையெச்சம் 'ஆமல்' விகுதி பெற்றுவரும், ஆனால் மலையாளத்தில் 'ஆத்த' விகுதி பெற்று வரும். இதனால் **போகாமல்** என்பதை **போகாத்த** என்று பயன்படுத்தலாம்.

தமிழில் 'போ' என்ற வினை வரும்போது பெயர்ச்சொல் நான்காம் வேற்றுமை உருபை (—கு) ஏற்றுவர மலையாளத்தில் ஏழாம் வேற்றுமை உருபு (—இல்) ஏற்று வருவதால் மலையாளத்தை வீட்டு மொழியாகக் கொண்ட குழந்தைகள் **நீ வீட்டில் போ** என்று பேசவும் எழுதவும் கூடும். இதே போன்று 'கேள்' என்ற வினை தமிழில் வரும்போது பெயர்ச் சொல் ஏழாம் வேற்றுமை உருபு இடம் பெற்று வர மலையாளத்தில் 'ஓடு' உருபு பெற்று வருகிறது.

இதனால் **முருகனிடம் கேள்** என்று தமிழில் வருவதை **முருக னோடு கேள்** என்று பயன்படுத்தலாம்.

மலையாளத்தில் 'ன்'—ல் முடியும் பெயர்ச் சொற்கள் 'றே' என்ற ஆறாம் வேற்றுமை உருபு பெறும். ஆனால் தமிழில் 'உடைய' உருபு இங்கு பயன்படுகிறது. இவ்வேறுபாட்டினால் **வேலனுடைய** என்று தமிழில் வருவதை **வேலன்றே** (வேலன்டே) என்று மலை யாளத்தை வீட்டு மொழியாகக் கொண்ட குழந்தைகள் பயன்படுத் தலாம். தமிழில் பெயரடைகள் பெயர்ச்சொல்லோடு 'ஆன' விகுதி சேர்த்து (அழகு +ஆன) அழகான என்று உருவாக்கப்படுகிறது. ஆனால் மலையாளத்தில் 'ஆய' விகுதி சேர்த்தோ 'உள்ள' சேர்த்தோ உருவாக்கப் படுகிறது. இதனால் மலையாளத்தை வீட்டு மொழியாகக் கொண்ட குழந்தைகள் தமிழிலும் **அழகாய** என்றோ, **அழகுள்ள** என்றோ பெயரடைகளைப் பயன்படுத்தலாம்.

தமிழில் வினைச்சொல்லோடு அல் விகுதி சேர்க்கப் படுவதால் பெயர்ச்சொற்கள் உருவாக்கப்பட அதே சொற்கள் மலையாளத்தில் 'அம்' விகுதி சேர்த்து உருவாகின்றன.

எடுத்துக்காட்டாக

| மலையாளம் | தமிழ் |
|---|---|
| திருத்தல் | 'திருத்தம்' |
| சாவல் | 'சாவு' |
| தடுக்கல் | 'தடுப்பு' |

இதனால் மலையாளத்தை வீட்டு மொழியாகக் கொண்ட குழந்தைகள் மேற்காட்டிய தமிழ்ச் சொற்களைப் பிழையாகக் கூறவோ எழுதவோ செய்யலாம்.

**சொற்றொடரில் வேறுபாடுகள்.**

தமிழில் வாக்கியத்தின் எழுவாய்க்கும் பயனிலைக்கும் பால் எண் இயைபு காணப்படும்.

நான் வந்தேன்
அவன் வந்தான்
அவள் வந்தாள்
அவர்கள் வந்தனர்

ஆனால் மலையாளத்தில் பால் எண் இயைபு விகுதி இல்லாததால் மேற்காட்டிய தமிழ் வாக்கியங்களை

நான் வந்து
அவன் வந்து
அவள் வந்து
அவர்கள் வந்து

என்று பிழையாகக் கூறவோ எழுதவோ செய்யலாம்.

தமிழில் பெயரே பயனிலையாக அமைந்த வாக்கியங்கள் உள்ளன

அவன் கண்ணன்
அவன் நல்லவன்
அது அவனுடையது

ஆனால் மலையாளத்தில் இது போன்ற வாக்கியங்கள் 'ஆண' என்ற வினை கொண்டுதான் முடியும். இதனால்

அவன் கண்ணன் ஆண
அவன் நல்லவன் ஆண
அது அவனுடையது ஆண

என்று தமிழிலும் பேசக்கூடும் எழுதக்கூடும்.

**சொற்களில் வேறுபாடுகள்**

மலையாளம் தமிழோடு அதிக நெருக்கமுடைய மொழி ஆதலால் சொற்களில் அதிக ஒற்றுமை காணப்படும். ஆனால் சில சொற்கள் ஒரே உருவமுடையதாக இருந்தாலும் வேறு பொருளில் இரண்டு மொழிகளிலும் பயன்படுத்தப்படுவதும், பொருள் ஒன்றாக இருந்தாலும் சொற்களின் உருவம் சிறிது மாறுபட்டு காணப்படுவதும் உண்டு.

பொருள் மாற்றம் உள்ள சொற்கள்.

| மலையாளம் | தமிழ் |
| --- | --- |
| வெள்ளம் | தண்ணீர் |
| பனி | காய்ச்சல் |
| தணல் | நிழல் |
| குட்டி | சிறுவன்சிறுமி |
| சுண்டு | உதடு |
| நாடு | சொந்த ஊர் |
| வலி | இழு |
| மதி | போதும் |
| உணர் | தூங்கி எழுந்திரு |
| அழி | கழற்று |
| ஒழி | ஊற்று |
| கீற் | கிழி |

உருவில் மாறுபாடுடைய சொற்கள்

| | |
| --- | --- |
| வியாழம் | வியாழன் |
| கதகு | கதவு |
| நீந்தல் | நீச்சல் |
| செய்யல் | செயல் |
| தெங்ங | தென்னை |
| உழுந்த | உளுந்து |
| கீழில் | கீழே |
| கேறு | ஏறு |

இதனால் மலையாளத்தை வீட்டுமொழியாகக் கொண்ட குழந்தைகள் மேற்கூறிய சொற்களைத் தமிழில் குழப்பமாக பயன் படுத்தலாம்.

மலையாளத்தில் உறவுமுறைச் சொற்கள் தமிழிலிருந்து வேறு பட்டிருந்தாலும் **அச்சன்** 'தந்தை', **சேச்சி** 'அக்காள்', **அணியன்** 'தம்பி' போன்ற தங்கள் வீட்டுமொழிச் சொற்களைத் தமிழிலும் மலையாளத்தை வீட்டுமொழியாகக் கொண்ட குழந்தைகள் பயன் படுத்தலாம்.

வீட்டுமொழியான மலையாளத்திலும் வெளியுலகப் பேச்சுத் தமிழிலும் ஒரு பொருளைக் குறிக்க ஒரே வடமொழிச் சொல்லைப் பயன்படுத்துகிற நிலையைக் காண்கிறோம்.

சான்றாக 'வரலாறு' என்ற பொருளைக் குறிக்கப் பேச்சுத் தமிழில் 'சரித்திரம்' என்ற சொல்லைப் பயன்படுத்துகிறோம். இதே சொல்லை வீட்டுமொழியான மலையாளப் பேச்சிலும் இருமொழியக் குழந்தை பயன்படுத்தும். வீட்டுமொழி மலையாளப் பேச்சிலும் வெளியுலகத் தமிழ்ப் பேச்சிலும் இணைந்து இச்சொல் பயன்படுவதால், தமிழை எழுதும்போது இச்சொல்லைப் பயன்படுத்தலாம் என்று இருமொழியக் குழந்தை நினைக்கலாம். ஆயின் அவ்வாறு எழுதுவது, பள்ளித் தமிழ்க் கல்வியில், தூய தமிழை பயன்படுத்த வேண்டும் என்ற நிலையில், பிழை எனக் கருதப்படுகிறது. இதே போன்று நிறையச் சொற்கள் உண்டு.

## ஆசிரியர் நினைவிலிருத்த வேண்டிய சில குறிப்புகள்

1. மலையாளத்தை ஆசிரியர் ஓரளவாவது தெரிந்து வைத்திருக்க வேண்டும். (மலையாளத்தை வீட்டுமொழியாகக் கொண்ட குழந்தைகள் வகுப்பில் இருந்தால்)

2. தமிழும், மலையாளமும் எழுத்தில், சொல்லில், வாக்கியத்தில் வேறுபடும் இடங்களை அறிந்திருக்க வேண்டும்.

3. இவ்வேறுபாடுகளை மனத்திற் கொண்டு, கற்பிக்கும் போது கவனம் செலுத்த வேண்டும்.

4. மலையாளத்தை வீட்டுமொழியாகக் கொண்ட குழந்தைகளுக்கு தமிழின் எழுத்தில், சொல்லில் வாக்கியத்தில் ஏற்படும் இடர்ப்பாடுகளைத் தொகுத்துக் கொள்ளவும்.

—o—

## 9. தமிழும் சௌராட்டிரமும்

பட்டுநூல் நெசவில் புகழ் பெற்று, சௌராட்டிரத்தை வீட்டு மொழியாகக் கொண்டவர்கள் பெருமளவில் மதுரை, பரமக்குடி, கும்பகோணம், சேலம் போன்ற இடங்களில் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் வெளியுலகில் தமிழ்மொழியையும் வீட்டில் சௌராட்டிர மொழியையும் சிறுவயதிலிருந்தே பேசி வருகின்றனர்.

சௌராட்டிர மொழி ஆரிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது. இதனால் இம்மொழி ஒலிகளிலும், சொல்லிலக்கணத்திலும், வாக்கிய அமைப்பிலும், சொற்களிலும் தமிழிலிருந்து வேறுபட்டுக் காணப் படுகிறது.

### ஒலிகளில் வேறுபாடுகள்

உயிரெழுத்து ஒலிகளில் எகர ஏகார வேறுபாடு இல்லாமல் இரண்டிற் கும் இடைப்பட்ட ஒலியை தம் வீட்டு மொழியான சௌராட்டிர மொழியில் கேட்டுணர்ந்து வருவதால் சௌராட்டிரத்தைத் வீட்டு மொழியாகக் கொண்ட குழந்தைகள் தமிழிலும் இவ்வேறுபாட்டை உணராது ஒன்றை எழுதும் இடத்தில் இன்னொன்றை மாற்றி எழுதி விடலாம்.

எடுத்துக்காட்டாக, 'கெடுதி'யை கேடுதி என்றும் 'தேக்கம்' என்ற சொல்லை தெக்கம் என்றும் பேசலாம் எழுதலாம்.

இதே போன்று ஒ கரத்திற்கும் ஓ காரத்திற்கும் சௌராட்டிர மொழியில் அதிக வேறுபாடு இல்லாததால் சௌராட்டிரத்தை வீட்டு மொழியாகக் கொண்ட குழந்தைகள் தமிழில் ஒ கரம் வரு மிடங்களில் ஓ காரத்தையும் ஓ காரம் வருமிடங்களில் ஒ கரத்தையும் மாற்றி எழுதிவிடலாம். எடுத்துக்காட்டாக மோதிரம் என்ற சொல்லை மொதிரம் என்றும் கோடையை கொடை என்றும் பேச லாம், எழுதலாம்.

தமிழில் க, ச, ட, த, ப என்னும் வல்லின ஒலிகள் உண்டு. சௌராட்டிர மொழியில் ஒவ்வொரு வல்லினத்திற்கும் நான்கு ஒலி கள் உள்ளன. இதனால் சௌராட்டிர மொழியை வீட்டு மொழி யாகக் கொண்ட குழந்தைகள் தமிழ்ச் சொற்களிலுள்ள ஒலிகளையும்

தங்கள் வீட்டுமொழியிலுள்ள வல்லினத்தின் எழுத்து போல் பிழையாக ஒலிக்கலாம். மேலும் **தங்கம்** என்ற தமிழ்ச் சொல்லை **தங்க்கம்** என்றோ **சொந்தம்** என்ற தமிழ்ச் சொல்லை **சொந்த்தம்** என்றோ (பார்க்க : தமிழும், தெலுங்கும்) அழுத்தமாக உச்சரிக்கலாம்.

தமிழின் 'ர', 'ற' வுக்கு இணையாக சௌராட்டிரத்தில் 'ர' மட்டுமே உள்ளதால் சௌராட்டிரத்தை வீட்டுமொழியாகக் கொண்ட மாணவர்கள் தமிழில் ர, ற வரும் சொற்களில் மாற்றி எழுதவோ பேசவோ செய்யலாம்.

சௌராட்டிர மொழியில் இல்லாததால் சௌராட்டிரத்தை வீட்டுமொழியாககக் கொண்ட குழந்தைகள் 'ழ' வரும் தமிழ்ச் சொற்களில் 'ல' அல்லது 'ள' ஒலியைப் பதிலீடு செய்து பேசவோ எழுதவோ செய்யலாம். பத்து, நண்டு போன்ற சொற்களில் குற்றியலுகரமாக ஒலிக்க வேண்டிய 'து', 'ரு' வை சௌராட்டிரத்தை வீட்டு மொழியாகக் கொண்ட குழந்தை முற்றியலுகரமாக ஒலிக்கலாம்.

தமிழில் 'க' (மற்றும் ககர உயிர் மெய்கள்) சொல்லின் இடையில் தனித்து வரும்போது 'ஹ' என்ற ஒலிப்புப் பெறுகிறது. தமிழில் கிரந்த எழுத்தில் 'ஹ' என்ற எழுத்து இருப்பதால் தமிழில் 'க' ஒலி 'ஹ' ஒலிப்புப் பெறும் எல்லா இடங்களிலும் 'ஹ' என்ற கிரந்த எழுத்தைப் பயன்படுத்தும் எண்ணம் சௌராட்டிரத்தை வீட்டு மொழியாகக் கொண்ட குழந்தைகளுக்கு ஏற்படலாம். இதேபோல் மற்றொரு கிரந்த எழுத்தான 'ஸ' வையும் ('ச' விற்கும் பதில்) பயன்படுத்த நினைக்கலாம். எடுத்துக் காட்டாக,

மகன் என்பதற்குப், பதில் மஹன் என்றும் பாசி என்பதற்குப் பதில் பாஸி என்றும் எழுதலாம்.

## சொல்லிலக்கண வேறுபாடுகள்

தமிழ் மொழியில் 'நாம்' 'நாங்கள்' என்ற இரு தன்மைப் பன்மைகள் உள்ளன. சௌராட்டிர மொழியில் 'அமி' என்ற ஒரு தன்மைப் பன்மை மட்டுமே இருப்பதால் நாம், நாங்கள் என்ற இரு சொற்களுக்குமே 'நாம்' என்ற சொல்லையே பயன்படுத்தலாம்.

தமிழ் மொழியில் ஆண்பால், பெண்பாலுக்கென்று தனித்தனி படர்க்கைச் சுட்டு பெயர்கள் உள்ளன. ஆனால் சௌராட்டிர மொழியில் ஆண்பால், பெண்பால் இரண்டுக்கும் 'தெனா' என்ற

ஒரே சுட்டுப் பெயர் பயன்படுகிறது. இதனால் சௌராட்டிரத்தை வீட்டு மொழியாகக் கொண்ட மாணவர்கள் தமிழில் **அவள் கண்ணன்** என்றோ **அவன் செல்வி** என்றோ பிழையாகப் பயன்படுத்தலாம்.

தமிழில் அஃறிணை ஒருமைச் சுட்டுப் பெயராக 'அது' என்ற சொல்லும் பன்மைச் சுட்டுப் பெயராக 'அவை' என்ற சொல்லும் பயன்பட, சௌராட்டிர மொழியில் **'தெல்ல'** என்ற ஒரே சொல் ஒருமைக்கும், பன்மைக்கும், பயன்படுவதால் இவ்விருமொழிக் குழந்தைகளுக்கு தமிழில் அது, அவை பயன்படும் இடங்கள் பிரச்சினைக்குரியதாக அமைந்து ஒன்றுக்கொன்று மாற்றிப் பயன் படுத்தலாம்.

தமிழில் வரும் இது, இந்த என்ற சுட்டுப் பெயரும், சுட்டு அடையும் சௌராட்டிரத்தில் 'யே' என்ற ஒரே சொல்லால் குறிக்கப் பெறுவதால், சௌராட்டிரத்தை வீட்டுமொழியாகக் கொண்டுள்ள குழந்தைகள் **இந்தப் பேனா என்னுடையது** என்று வருமிடத்தில் **இது பேனா என்னுடையது** என்று பிழையாகப் பயன்படுத்தலாம்.

தமிழில் ஒரு, ஒன்று வேறுபாடும் ஒரு, ஓர் வேறுபாடும் உள்ளது போல் சௌராட்டிரத்தில் இல்லாமையால் இவ்விருமொழியக் குழந்தைகளுக்கு இவை வருமிடங்கள் குழப்பமாக அமைந்து இவற்றில் பிழை செய்யும் வாய்ப்பு நேரிடுகிறது. எடுத்துக்காட்டாக ஒரு பூனையை ஒன்று பூனை என்றுச் சொல்லலாம், எழுதலாம்.

மேலும் நூறு என்ற எண்ணுப் பெயர், சௌராட்டிரத்தில் **ஒண்டெஸோ** என்று வருதலால் தமிழிலும் ஒன்று நூறு அல்லது ஒரு நூறு என்று பயன்படுத்தலாம்.

இரண்டாம் வேற்றுமைக்கும் நான்காம் வேற்றுமைக்கும் சௌராட்டிர மொழியில் 'கொ' என்ற ஒரே உருபு பயன்படுத்தப்படுவதால் தமிழில் இரண்டாம் வேற்றுமை வருமிடங்களில் நான்காம் வேற்றுமை உருபைப் பயன்படுத்தக் கூடும். எடுத்துக்காட்டாக

**என்னை அடிக்கிறான்** என்பதை **எனக்கு அடிக்கிறான்** என்று சொல்லலாம் எழுதலாம்.

**சொற்றொடர்களில் வேறுபாடுகள்.**

சௌராட்டிர மொழியில் எழுவாய் ஆண்பால் ஒருமையாகவோ, அஃறிணை ஒருமையாகவோ பன்மையாகவோ, எதுவாக இருந்தாலும் பயனிலை ஒன்றாகவே அமைகிறது. சான்றாக **'அவெஸ்'**

என்ற வினைப் பயனிலை **'வந்தான்'** **'வந்தது'** **'வந்தன'** என்ற மூன்றையும் குறித்து நிற்கும். எழுவாயிலிருந்துதான் பயனிலை எதைத்குறித்து நிற்கிறது என்பதை அறிய முடியும்.

| **சௌராட்டிரம்** | **தமிழ்** |
| --- | --- |
| ராமொ அவெஸ் | ராமன் வந்தான் |
| மஜ்ஜிரி அவெஸ் | பூனை வந்தது |
| மஜ்ஜிரின் அவெஸ் | பூனைகள் வந்தன |

இதனால் சௌராட்டிரத்தை வீட்டு மொழியாகக் கொண்ட குழந்தைகள் தமிழில் எழுதும் போது **கண்ணன் வந்தது** என்றோ **பூனைகள் வந்தது** என்றோ பிழையாகப் பயன்படுத்தலாம்.

மேலும் தமிழில் 'அவன்' எழுவாயாக வந்தால் பயனிலை 'வந்தான்' என்றும் 'அவர்' எழுவாயாக வந்தால் பயனிலை 'வந்தார்' என்றும் வரும், ஆனால் சௌராட்டிரத்தில் 'அவன்' அல்லது 'அவர்' என்று எதுவாக இருந்தாலும் இரண்டிற்கும் பயனிலை ஒன்றே.

ராமொ அவஸ் (ராமன் வந்தான்)
போ அவஸ் (அப்பா வந்தார்)

இதனால் இருமொழியக் குழந்தைகள் தமிழில் 'அப்பா வந்தான் என்று மரியாதைக் குறைவுபட எழுதும் போக்கு ஏற்படலாம்.

**சொற்களில் வேறுபாடுகள்**

தமிழ்ச் சொற்களைப் போன்று சௌராட்டிரத்தில் ஒரு சில சொற்கள் உருவத்தில் ஒன்றாயிருந்தாலும் பொருள் மாறுபட்டிருக்கும். தமிழ்ச் சொற்கள் போன்ற சில சொற்கள் அதே பொருளுடன் சௌராட்டிரத்தில் காணப்பட்டாலும், அவற்றின் வடிவம் சிறிது மாறுபட்டிருக்கும். இதனால் இருமொழியக் குழந்தைகள் தமிழைக் கற்கும் போது சொற்களைத் தவறாகப் பேசலாம், படிக்கலாம், எழுதலாம். சான்றாக 'ஆடு' என்ற சொல் சௌராட்டிரத்தில் 'எட்டு' என்ற எண்ணைக் குறிக்கிறது, 'குண்டு' என்ற சொல் 'பிழை' என்ற பொருளில் வருகிறது. 'கெட்டு'– கட்டில் 'மமி'– மாமி, 'மமொ'– மாமா 'திரிதம்'– திருத்தம், 'மாணவு'– மாணவன் 'தொள்ஸி'– துளசி போன்ற சொற்கள் ஒலிப்பில் சிறிது மாறுபட்டு வருகின்றன. ஆனால் ஓரளவு உருவ ஒற்றுமையைப் பார்த்து அவற்றை அப்படியே தமிழில் பயன் படுத்தலாம்.

வீட்டு மொழியிலுள்ள உறவு முறைச் சொற்கள் மனதில் ஆழமாகப் பதிந்து விட்டிருப்பதால் தமிழ்ச் சொற்கள் நினைவுக்கு வராத நிலையில், சௌராட்டிரத்தை வீட்டுமொழியாகக் கொண்ட குழந்தைகள் தமிழிலும் தங்கள் வீட்டுமொழியிலுள்ள உறவு முறைச் சொற்களைப் பயன்படுத்தும் வாய்ப்பு உள்ளது.

| சௌராட்டிரம் | தமிழ் |
|---|---|
| போ | அப்பா |
| அம்போ | அம்மா |
| ஸஸீ | மாமியார் |
| ஸொஸீரா | மாமனார் |
| நன்பெய்ன் | தங்கை |
| நன்பை | தம்பி |
| பெய் | அக்காள் |
| பெய்ல் | மாணவி |

**ஆசிரியர் நினைவிலிருத்த வேண்டிய சில குறிப்புகள்**

1. சௌராட்டிரத்தை ஆசிரியர் ஓரளவாவது தெரிந்திருக்க வேண்டும். (சௌராட்டிரத்தை வீட்டுமொழியாகக் கொண்ட குழந்தைகள் வகுப்பில் இருந்தால்.)

2. தமிழும் சௌராட்டிரமும் எழுத்துகளில், சொற்களில், சொல்லிலக்கணத்தில், வாக்கியத்தில், எவ்வாறு வேறுபடுகின்றன என்பதை அறிந்திருக்க வேண்டும்.

3. இவ்வேறுபாடுகளை மனத்திற் கொண்டு கற்பிக்கும் போது கவனம் செலுத்த வேண்டும்.

4. இருமொழியக் குழந்தைகள் தங்கள் பேச்சிலும் எழுத்திலும் படிப்பிலும் பயன்படுத்தும் சௌராட்டிர மொழியின் செல்வாக்கைத் தொகுக்கவும்.

—o—

# 10. தமிழும் உருதுவும்

உருது ஆரிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழி. இது இந்தியா முழுவதும் பரவலாகப் பேசப்படுகின்றது. தமிழ் நாட்டில் பத்து லட்சத்திற்கு மேற்பட்டவர்கள் உருது பேசுகின்றனர். குறிப்பாக வட ஆர்க்காடு, சென்னை, தர்மபுரி மாவட்டங்களில் உருதுவை அதிகம் பேசுகின்ற மக்கள் வாழ்கிறார்கள் (பார்க்க: இயல் ஒன்றிலுள்ள பட்டியல்). உருதுவை வீட்டுமொழியாகக் கொண்டுள்ள குழந்தைகள் பள்ளியில் தமிழைப் பயிலும்பொழுது அவர்களின் வீட்டுமொழி குறுக்கிடும். தங்களை அறியாமலே தங்கள் வீட்டு மொழி அமைப்புகளைத் தமிழ்மொழியில் பயன்படுத்துவர். அப்படிச் செய்யும் பொழுது தமிழும் உருதுவும் அமைப்புகளில் வேறுபடுகின்ற இடங்களில் பிழைகள் நேரக்கூடும்.

இவ்வாறு நேரும் இடையீடுகளை மற்ற பிழைகளிலிருந்து பிரித்தறியும் திறன் ஆசிரியர்க்கு வேண்டும். ஏனெனில் இடையீடுகளை நீக்கவோ அல்லது வராமல் தடுக்கவோ வேண்டுமானால் அவற்றின் காரணம் தெரியவேண்டும். எனவே உருதுவை வீட்டுமொழியாகக் கொண்டுள்ள குழந்தைகளுக்குத் தமிழ் பயிற்றுவிக்கும் ஆசிரியர் உருது தமிழிலிருந்து வேறுபடும் இடங்களை அறிந்திருப்பது நல்லது. அவ்வாறு வேறுபடும் இடங்கள் சிலவற்றை இங்குக் காண்போம்.

**ஒலிகளில் வேறுபாடுகள்**

1. எழுத்துத் தமிழில் ல, ள, ழ என்ற மூன்று ஒலிகள் உள்ளன. உருதுவில் 'ல' ஒலி மட்டுமே உள்ளது. இதனால் உருதுவை வீட்டு மொழியாகக் கொண்டுள்ள குழந்தைகள் தமிழ் பயிலும்போது ல, ள, ழ மூன்றிற்கும் 'ல' வையே ஒலிக்கக் கூடும். எடுத்துக் காட்டாக,

| | | |
|---|---|---|
| வலை | — | வலை |
| களை | — | கலை |
| மழை | — | மலை |

2. எழுத்துத் தமிழில் உள்ள ர, ற ஆகிய இரு ஒலிகளுக்கும் இணையாக உருதுவில் ர, ற இருந்தாலும் 'ற' வின் ஒலிப்பு வேறு

படலாம். இதனால் உருதுவை வீட்டுமொழியாகக் கொண்டுள்ள குழந்தைகள் தமிழில் 'ற' வருமிடங்களிலும் 'ர'வையே ஒலிக்கவும் எழுதவும் கூடும்.

(எ-டு) அறை — அரை
மறம் — மரம்
நிறுத்து — நிருத்து

3. தமிழில் க, ச, ட, த, ப ஆகியவை சொல்லில் மெல்லின ஒலிகளான ங, ஞ, ண, ந, ம, ன ஆகியவற்றிற்குப் பின் வரும்பொழுது, வேறுவகையாக ஒலிக்கப்படும் (பார்க்க : தமிழும் தெலுங்கும்)

ஆனால் உருதுவில் அவை க, ச, ட, த, ப என்றவாறே ஒலிக்கப் பெறலாம். இதனால் உருதுவை வீட்டுமொழியாகக் கொண்டுள்ள குழந்தைகள் தமிழில் மெல்லின ஒலிகளுக்குப் பின்னும் க, ச, ட, த, ப என்றவாறே ஒலிக்கக் கூடும், எடுத்துக்காட்டாக.

மாங்க்காய்
மஞ்ச்சள்
மண்ட்டை
பந்த்து
பாம்ப்பு

4. க, ச ஆகிய ஒலிகள் தமிழில் இரு உயிர் ஒலிகளுக்கு இடையில் வரும்பொழுது ஹ, ஸ என ஒலிக்கப்படும். எடுத்துக்காட்டாக,

பகல் (பஹல்)
வாசல் (வாஸல்)

உருதுவில் இரு உயிர் ஒலிகளுக்கு இடையிலும் க, ச ஆகியவை க, ச என்றே ஒலிக்கப்பெறும். இதனால் தமிழிலும் இரு உயிர் ஒலிகளுக்கு இடையே உருதுவை வீட்டுமொழியாகக் கொண்டவர்கள் க, ச என்றே ஒலிக்கக் கூடும். எடுத்துக்காட்டாக,

பக்கல்
வாச்சல்

5. தமிழில் க், ச், ட், த், ப் ஆகியன சொற்களின் இறுதியில் வராது. உருதுவில் வரும். எடுத்துக் காட்டாக,

ஏக் 'ஒன்று'
பாஞ்ச் 'ஐந்து'
கிதாப் 'புத்தகம்'

இதனால் உருதுவை வீட்டுமொழியாகக் கொண்டுள்ள குழந்தைகள் தமிழில் சொற்களின் இறுதியில் வரும் 'உ' ஒலியை விட்டுவிட்டுக், ச், ட், த், ப் களில் முடியுமாறு ஒலிப்பர்.

கொக் (கொக்கு)

மச் (மச்சு)

பாட் (பாட்டு)

பத் (பத்து)

**சொல்லிலக்கணத்தில் வேறுபாடுகள்.**

1. தமிழில் தன்மைப் பன்மை இடப்பெயர்கள் இரண்டு உள்ளன. 'நாம்' (உளப்பாட்டுத் தன்மைப் பன்மை) என்பது யாரிடம் சொல்கிறோமோ அவரைச் சேர்த்தும், 'நாங்கள்' (உளப்படாத் தன்மைப் பன்மை)என்பது அவரை நீக்கியும் பொருள்படும். உருதுவில் இவ் வேறுபாடு இல்லை எடுத்துக் காட்டாக,

நாம் போவோம்

ஹம் ஜாங்கே

நாங்கள் போவோம்

இதனால் உருதுவை வீட்டுமொழியாகக் கொண்டுள்ள குழநதைகள் தமிழில் நாம், நாங்கள் இரண்டையும் தவறாகப் பயன்படுத்தக் கூடும். எடுத்துக் காட்டாக,

நீ போ, நாங்கள் பேச மாட்டோம் — நீ போ, நாம் பேச மாட்டோம்.

உன்னை எங்களுக்குப் பிடிக்கவில்லை — உன்னை நமக்குப் பிடிக்கவில்லை

2. தமிழிலும் உருதுவிலும் நான்காம் வேற்றுமை 'கு' ஆகும். ஆனால் தமிழில் இது பெயர்ச் சொல்லோடு சேரும்பொழுது சில மாற்றங்கள் நிகழும்.

இராமன்+கு — இராமனுக்கு

இராமனுக்குக் கொடு

உருதுவில் எவ்வித மாற்றமும் நிகழாது.

ராமன்+கு — ராமன்கு

ராமன்கு தோ (இராமனுக்குக் கொடு)

இதனால் உருதுவை வீட்டுமொழியாகக் கொண்டுள்ள குழந்தைகள் தமிழ் பயிலும்பொழுது தங்கள் வீட்டுமொழியில் இருப்பது போலவே தமிழிலும் எவ்வித மாற்றமும் இல்லாமல் பயன்படுத்தக் கூடும். எடுத்துக் காட்டாக,

இராமன்கு கொடு,
நகரம்கு போ,
வீடுகு வா

3. 'ஒன்று' என்ற முதல் எண்ணுப்பெயர் பெயர்ச் சொல்லுக்கு அடையாக வரும்பொழுது தமிழில் 'ஒரு' என்று மாறும். எடுத்துக் காட்டாக,

ஒரு புத்தகம்
ஒரு மரம்

ஆனால் உருதுவில் முதல் எண்ணுப்பெயர் 'ஏக்' (ஒன்று) பெயர் அடையாக வரும்பொழுதும் மாறுவதில்லை.

ஏக் கித்தாப் (ஒரு புத்தகம்)
ஏக் குர்ச்சி (ஒரு நாற்காலி)

இதை மனத்துள் கொண்டு உருதுவை வீட்டுமொழியாகக் கொண்டுள்ள குழந்தைகள் தமிழில் பின்வருமாறு பயன்படுத்தக் கூடும்.

ஒன்று புத்தகம்
ஒன்று மரம்

## சொற்றொடர்களில் வேறுபாடுகள்

1. தமிழில் தன்மை, முன்னிலை, படர்க்கை விகுதிகள் இறந்த காலத்திற்கு வெவ்வேறானவை. (நான் போனேன், நீ போனாய், அவன் போனான்) ஆனால் உருதுவில் தன்மை ஒருமை விகுதியும் படர்க்கை ஒருமை ஆன்பால் விகுதியும் ஒன்றே.

| | |
|---|---|
| நான் போனேன் | மை கயா |
| அவன் போனான் | ஓ கயா |

இதனால் உருதுவை வீட்டுமொழியாகக் கொண்டுள்ள குழந்தைகள் தமிழ் பயிலும்பொழுது

நான் போனான் என்றோ
அவன் போனேன் என்றோ சொல்லக் கூடும்

2. தமிழில் பெயரும் பெயரும் சேர்ந்து வினை இல்லாமலேயே தொடர் அமையலாம். எடுத்துக் காட்டாக,

அது மரம்
நான் பையன்

ஆனால் உருதுவில் இவ்வாறு அமையாது. வினை கட்டாயம் இடம்பெற வேண்டும். எடுத்துக் காட்டாக,

ஒ பல் ஹே (அது பழம்)
ஒ மேஜ் ஹே (அது மேஜை)

இதனால் தமிழிலும் உருதுவை வீட்டுமொழியாகக் கொண்டுள்ள குழந்தைகள் வினைச் சொல்லைச் சேர்த்துப் பயன்படுத்தக் கூடும்.

அது பழம் ஆகும்
அது மேஜை ஆகும்

**சொற்களில் வேறுபாடுகள்**

உருதுவை வீட்டுமொழியாகக் கொண்டுள்ள குழந்தைகள் தமிழ் பயிலும்பொழுது தமிழ்ச் சொற்களை அறியாவிட்டால் அவற்றிற்குப் பதில் உருதுச் சொற்களைப் பயன்படுத்தக் கூடும் சில சமயங்களில் இவ்வாறு செய்வதால் தவறாகப் பொருள் புரிந்து கொள்ளவும் நேரும். சான்றாக

மூக்கில் ரத்தம் வருகிறது என்பதை

நாக்கில் ரத்தம் வருகிறது என்று கூறுவர். ஏனெனில் உருதுவில் மூக்கிற்கு 'நாக்' என்ற சொல் பயன்படுகிறது.

உருதுவை வீட்டுமொழியாகக் கொண்டுள்ள குழந்தைகள் பள்ளிக்கு வரும்முன் பெற்றிருக்கின்ற தமிழ் அறிவுக்குத் தகுந்தவாறு அவர்களின் தமிழில் உருதுவின் இடையீடு அமையும். இருமொழியக் குழந்தைகளின் பிழைகளுக்குக் காரணம் அவர்களின் வீட்டுமொழி யான உருதுவா ? என்பதை இக்கட்டுரையில் காட்டியவாறு ஒப் பிட்டுக் கண்டுபிடித்து அவற்றை நீக்கவும் நேராவண்ணம் தடுக்க வும் முயற்சிக்க வேண்டும். (பல பயிற்சிகளைப் '**பிழை தொகுத் தலும்' நீக்கலும்**என்னும் இயலில் பார்க்க).

**ஆசிரியர் நினைவிலிருத்த வேண்டிய சில குறிப்புகள்**

1. உருதுவை ஓரளவாவது அறிந்திருக்க வேண்டும்.
(உருதுவை வீட்டுமொழியாகக் கொண்ட குழந்தைகள் வகுப்பில் இருந்தால்)

2. தமிழும் உருதுவும் எழுத்தில், சொல்லில், சொல்லிலக்கணத்தில், வாக்கியத்தில் வேறுபடும் இடங்களை அறிந்திருக்க வேண்டும்.

3. இவ்வாறு வேறுபடும் இடங்களை மனத்திற் கொண்டு தமிழ் கற்பிக்கும் போது கவனம் செலுத்த வேண்டும்.

4. இருமொழியக் குழந்தைகள் தங்கள் பேச்சிலும், படிப்பிலும் எழுத்திலும் பயன்படுத்தும் உருதுச் செல்வாக்கைத் தொகுக்கவும்.

—o—

# 11. தமிழும் மராத்தியும்

இப்பகுதியில் மராத்தியை வீட்டுமொழியாகக் கொண்டுள்ள குழந்தைகள் தமிழைக் கற்கும் போது ஏற்படுகின்ற இடையீடுகளைப் பார்க்கலாம். மராத்தி மொழி ஆரியமொழி குடும்பத்தைச் சேர்ந்தது. மராத்தி பேசுவோர் சென்னை, வடஆர்க்காடு, தஞ்சை மாவட்டங்களில் அதிகம் வாழ்கின்றனர். (பார்க்க : இயல் ஒன்றிலுள்ள பட்டியல்) மேலும் பாவைக் கூத்து, பொய்க்குதிரை, சோதிடம் போன்ற கலைகளில் ஈடுபட்டு தமிழ்நாடெங்கும் பரவலாக வாழ்கின்றனர்.

மராத்தியை வீட்டுமொழியாகக் கொண்ட குழந்தைகள் தங்கள் வீட்டுமொழியின் சொற்கள், வாக்கியங்கள் போன்றவற்றைத் தமிழ் பயிலும் போது பயன்படுத்தலாம். இதனால் வீட்டு மொழியாகிய மராத்தியும் தமிழும் எந்தெந்த அமைப்புகளில் வேறுபடுகிறதோ அவை மாணவர்க்கு இடர் தரக்கூடும். எனவே இரு மொழிகளையும் ஒப்பிட்டு, அவை அமைப்பில் வேறுபடும் இடங்களை ஆசிரியர் கண்டு, அங்கு ஏற்படும் பிழைகளை ஊகிக்க வேண்டும். (பார்க்க : பிழை தொகுத்தலும் நீக்கலும்.)

**ஒலிகளில் வேறுபாடுகள்**

தமிழில் ந, ன என்பன ஒலிப்பிலும் எழுத்திலும் வேறுபட்டுள்ளன. ஆனால் மராத்தியில் ஒலிப்பில் இருந்தாலும் எழுத்தில் தனியாக எழுதப்படுவதில்லை.

தமிழில் ந, ன என்பன ஒலிப்பிலும் எழுத்திலும் வேறுபட்டுள்ளன. ஆனால் மராத்தியில் ஒலிப்பில் இருந்தாலும் எழுத்தில் தனியாக எழுதப்படுவதில்லை.

**ஒலிகளில் வேறுபாடுகள்.**

இதனால் மராத்தியை வீட்டு மொழியாகக் கொண்டுள்ள குழந்தைகள் தமிழில் 'ந' வரும் இடங்களில் 'ன' வைப் பயன்படுத்தக் கூடும். எடுத்துக்காட்டாக

பந்து—பன்து
நாய்—னாய்
நீளம்—னீளம்

2. எழுத்துத் தமிழில் ல, ள, ழ என்ற மூன்று ஒலிகள் உள்ளன. மராத்தியில் ல, ள என்ற இரண்டு ஒலிகள் மட்டுமே உள்ளன. எனவே மராத்தியை வீட்டு மொழியாகக் கொண்டுள்ள குழந்தைகள் தமிழில் 'ழ' விற்குப் பதில் 'ல' அல்லது 'ள' வைப் பயன்படுத்தக் கூடும். எடுத்துக்காட்டாக

பழம்—பலம் அல்லது பளம்

வாழ்வு—வால்வு அல்லது வாள்வு

3. எழுத்துத் தமிழின் ர, ற என்ற இரண்டு ஒலிகளுக்கு இணையாக மராத்தியில் 'ர' என்ற ஓர் ஒலி மட்டுமே உள்ளது. இதனால் 'ற' விற்குப் பதிலாக 'ர' வைப் பயன்படுத்தக் கூடும். எடுத்துக்காட்டாக

அறம்—அரம்
தறி—தரி
போகின்றான்—போகின்ரான்

4. தமிழ் மொழியில் க, ச, ட, த, ப ஆகியவை சொல்லில் மெல்லின ஒலிகளான ங, ஞ, ண, ந, ம, ன ஆகியவற்றிற்குப் பின் வரும்பொழுது ஒலிப்பில் மாற்றம் ஏற்படுகிறது. (பார்க்க : தமிழும் தெலுங்கும்) எடுத்துக் காட்டாக, தங்கம், பஞ்சு, வண்டி, சந்து, அன்பு.

ஆனால் மராத்தியில் அவை க, ச, ட, த, ப என்றே ஒலிக்கப் பெறும். எடுத்துக் காட்டாக,

பாங்க்குர் 'பறவை'
சொண்ட்டி 'இஞ்சி'
தன்த்து 'தந்தம்'
அம்ப்பில் 'கஞ்சி'

இதனால் மராத்தியை வீட்டுமொழியாகக் கொண்டுள்ள குழந்தைகள் தமிழ்ச் சொற்களை படிக்கும் பொழுது மெல்லின ஒலிகளுக்குப் பின்னும் க, ச, ட, த, ப என்றவாறே ஒலிக்கக் கூடும். எடுத்துக் காட்டாக

தங்க்கம்
பஞ்ச்சு
வண்ட்டி
சந்த்து
அன்ப்பு

5 க, ச ஆகிய ஒலிகள் தமிழில் இரு உயிர் ஒலிகளுக்கு இடையில் வரும்பொழுது ஹ, ஸ, என்று ஒலிக்கப் பெறும்.

மராத்தியில் இரு உயிர் ஒலிகளுக்கு இடையிலும் க, ச ஆகியவை க, ச என்றவாறே ஒலிக்கப்பெறும்.

மாக்கடு 'குரங்கு'
பாச்சு 'ஐந்து'

இதனால் தமிழிலும் இரு உயிர்களுக்கு இடையில் க, ச ஆகியவற்றை க, ச என்றவாறே ஒலிக்கக் கூடும். எடுத்துக்காட்டாக

மக்கன் 'மகன்'

பாச்சம் 'பாசம்'

## சொல்லிலக்கணத்தில் வேறுபாடுகள்

1. தமிழில் நாம், நாங்கள் எனும் இரண்டு உண்டு. மராத்தியில் தன்மைப் பன்மை இடப் பெயர் ஒன்றுதான் உண்டு.

நாம் போகிறோம்
ஹமி ஜாத்தாம்
நாங்கள் போகிறோம்

இதனால் மராத்தியை வீட்டுமொழியாகக் கொண்டுள்ள குழந்தைகள் தமிழில் நாம், நாங்கள் இரண்டையும் தவறாகப் பயன்படுத்தக் கூடும். எடுத்துக் காட்டாக,

வா நாம் போவோம் — வா நாங்கள் போவோம்
இவர்கள் எங்கள் அப்பா — இவர்கள் நம்ம அப்பா
நீ எங்களுக்கு வேண்டாம் — நீ நமக்கு வேண்டாம்

2. இரண்டாம் வேற்றுமைக்கும் நான்காம் வேற்றுமைக்கும் தமிழில் தனித்தனி உருபுகள் உள்ளன.

நான் கோட்டையைப் பார்க்கிறேன்.
நான் கோட்டைக்குப் போகிறேன்.

ஆனால் மாரத்தியில் இரண்டு வேற்றுமைகளுக்கும் உருபு ஒன்றே.
மி கில்லாலா தேக்குத்தே (நான் கோட்டையைப் பார்க்கிறேன்)
மி கில்லாலா ஜாத்தே (நான் கோட்டைக்குப் போகிறேன்)

இதனால் மராத்தியை வீட்டுமொழியாகக் கொண்டுள்ள குழந்தைகள் தமிழைக் கற்கும் போது இரண்டு வேற்றுமைகளையும் மாற்றிப் பயன்படுத்தக் கூடும்.

எடுத்துக் காட்டாக,

அவன் என்னைக் கேட்கிறான் என்பதை
அவன் எனக்குக் கேட்கிறான் என்று பேசலாம், எழுதலாம்.

3. தமிழைப் போலல்லாமல் மராத்தியில் 'போனால்' அமைப்புக்கும் 'போகட்டும்' அமைப்புக்கும் ஒரே விகுதிதான் பயன்படுத்தப்படுகிறது.

அவன் **போனால்** நான் வருவேன் — தனோ **ஜெவுந்தே** மியேயின்
அவன் **போகட்டும்** — தனோ **ஜெவுந்தே**

இதன் காரணமாகத் தமிழில், 'போனால்' என்பதற்குப் 'போகட்டும்' என்பதை மராத்தியை வீட்டுமொழியாகக் கொண்டுள்ள குழந்தைகள் பயன்படுத்தக் கூடும்.

நீ வந்தால் நான் போவேன் — நீ வரட்டும் நான் போவேன்.
நான் போனால் நல்லது — நான் போகட்டும் நல்லது.

**சொற்றொடர்களில் வேறுபாடுகள்**

தமிழில் எதிர்காலத்தில் ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் ஆகியவற்றிற்கு வேறுவேறு விகுதிகள் உள்ளன.

அவன் வருவான் — அவள் வருவாள் — அது வரும்
மராத்தியில் ஒரே விகுதியே மூன்று பால்களுக்கும் வரும்.

தனோ ஜெ**யில்** (அவன் வருவான்)
தின ஜெ**யில்** (அவள் வருவாள்)
தே ஜெ**யில்** (அது வரும்)

இதனால் மராத்தியை வீட்டுமொழியாகக் கொண்டுள்ள குழந்தைகள் தமிழ் பயிலும்பொழுது, எதிர் காலத்தில் மூன்று விகுதிகளில் ஏதேனும் ஒன்றை மட்டும் மூன்றுக்கும் பயன்படுத்தக் கூடும்.

எடுத்துக் காட்டாக,

அவன் வருவான் — அவள் வருவான் — அது வருவான்
அவன் வருவாள் — அவள் வருவாள் — அது வருவாள்
அவன் வரும் — அவள் வரும்—அது வரும்

**சொற்களில் வேறுபாடுகள்**

மராத்தியை வீட்டுமொழியாகக் கொண்டுள்ள குழந்தைகள் தமிழில் சில பொருளுக்குச் சொற்கள் தெரியாவிடில் அவ்விடங்களில் மராத்திச் சொற்களைப் பயன்படுத்தக் கூடும். மேலும் சில வட

மொழிச் சொற்கள் இரண்டு மொழிகளிலும் பயன்படுத்தப் படுகின்றன. தமிழில் அவற்றைத் தமிழ் ஒலிப்படுத்தி பயன் படுத்துவது மரபு. ஆனால் மராத்தியை வீட்டுமொழியாகக் கொண்டுள்ள குழந்தைகள் தமிழிலும் மராத்தியில் போலவே அவற்றைப் பயன்படுத்தக் கூடும். இதையும் தவிர்க்கச் செய்ய வேண்டும்.

**ஆசிரியர் நினைவிலிருத்த வேண்டிய சில குறிப்புகள்**

1. மராத்தியை ஓரளவாவது அறிந்திருக்க வேண்டும்.

(மராத்தியை வீட்டுமொழியாகக் கொண்ட குழந்தைகள் வகுப்பில் இருந்தால்)

2. மராத்திக்கும் தமிழுக்கும் இடையிலான வேறுபாடுகளை ஓரளவாவது தெரிந்திருக்க வேண்டும்.

3. எழுத்துகளில், சொற்களில், சொல்லிலக்கணத்தில் வாக்கியத்தில் வேறுபடும் இடங்களை மனத்திற் கொண்டு தமிழ் கற்பிக்கும் போது கவனம் செலுத்த வேண்டும்.

4. இருமொழியக் குழந்தைகள் தங்கள் பேச்சிலும், படிப்பிலும், எழுத்திலும் பயன்படுத்தும் மராத்திச் செல்வாக்கைத் தொகுக்கவும்.

—o—

## 12. கேட்டல் திறன் வளர்த்தல்

கேட்டல் ஓர் உட்கொள்ளும் திறன். வீட்டுமொழி வழக்கையே கேட்டறிந்த இக்குழந்தைகளுக்குத் தமிழ் மொழியில் கேட்டல் திறனை வளர்த்துக் கொள்வதன் வழிதான் ஆசிரியர் மாணவர் உரையாடல் எளிதாக நடைபெற முடியும். ஆகவே, இக்குழந்தைகளிடம் தமிழில் கேட்டல் திறனைச் செம்மையாக வளர்ப்பது ஆசிரியரின் தலையாய கடமையாகிறது.

கேட்டல் திறன் செம்மையாக அமைந்தால்தான் மற்ற திறன்களும் செறிவாக அமையும். பேசுதல் திறன் சிறப்பாக அமைய கேட்டல் திறன் அடிப்படையாகிறது. நிறைய கேட்கக் கேட்கத்தான் சொற்களஞ்சியம் பெருகுகிறது. அதன்வழி பேச்சு தங்கு தடையின்றி அமையும். இருமொழியக் குழந்தைகளின் கேட்டல் திறன் அவர்தம் வீட்டுமொழி வழக்கைப் பெரிதும் சார்ந்திருக்கிறது. இளவயது குழந்தைகளுடைய உலகம் பொதுவாக வீடு என்று அமைவதால் இவர்கள் பெரும்பாலான நேரங்களில் வீட்டுமொழியையே கேட்கிறார்கள். பள்ளியில் தமிழாசிரியரிடமிருந்தும் மற்ற ஆசிரியர்களிடமிருந்தும் தமிழை வீட்டுமொழியாகக் கொண்ட குழந்தைகளிடமிருந்தும் தமிழைக் கேட்கிறார்கள். எல்லாக் குழந்தைகளையும் போலவே இவர்களிடமும் தங்கள் வீட்டுமொழியிலானாலும் சரி பள்ளியில் கற்கிற தமிழ் மொழியிலானாலும் சரி பேசுதல் திறனை விடக் கேட்டலுக்கே அதிக வாய்ப்பிருக்கும். ஆகவே, ஆசிரியரும் இக்கேட்டல் திறனை மேலும் வளர்க்க முயலவேண்டும். அதாவது நிறையத் தமிழில் பேசி மாணவர்களைக் கேட்கச் செய்ய வேண்டும். அவ்வாறு பேசும்பொழுது புதிய எளிய சொற்களை கேட்டவுடன் எளிதில் புரிந்து கொள்ளுமாறு பேச்சில் பயன்படுத்த வேண்டும். இருமொழியக் குழந்தைகள் முதன்முதலில் தாங்கள் கேட்குந் தமிழ்ச் சொற்களை வாக்கியம் பயன்பட்டுள்ள சூழ்நிலையின் மூலந்தான் புரிந்து கொள்வார்கள். அதாவது, தனித்த நிலையில் ஒரு சொல்லின் பொருள் சரியாகத் தெரியாவிட்டாலும் அது பயன்படும் இடத்திற் கேற்றவாறு புதிய சொல்லின் பொருளைப் புரிந்து கொள்கிறார்கள். ஆகவே, புதிய சொல்லைப் பல்வேறு பொருள் தரும் வாக்கியங்களில் தங்கள் பேச்சில் திருப்பித் திருப்பிப் பயன்படுத்தினால் அவற்றின் பொருளைப் புரிந்து கொள்வது எளிதாக இருக்கும். மேலும் இவ்வாறு சொற்களைப் பயன்படுத்தும் பொழுது வீட்டுமொழியில்

பயன்படும் பொருள்களையே பள்ளி மொழியான தமிழில் வாக்கியங் களில் அமைத்தால் புரிந்து கொள்வது இன்னும் எளிதாக இருக்கும். எடுத்துக் காட்டாக, எவ்வெப் பொருளைத் தங்கள் வீட்டுமொழியில் பெற்றோரும் மற்றோரும் சொல்லிக் கேட்கிறார்களோ அவ்வப் பொருளைப் பள்ளித் தமிழ் வாக்கியங்களில் தமிழ்ச் சொல்லால் தந்தால் கருத்தும் எளிதில் கிடைக்கும், தமிழ்ச் சொற்களையும் வாக்கியங்களையும் எளிதில் கற்றுக்கொள்வார்ள்.

மாணவர் ஒவ்வொருவரையும் கதை கூறல், நிகழ்ச்சி கூறல் போன்ற வகையில் ஏதாவது ஒன்றைப் பேசச் செய்வதன் மூலம் மற்ற மாணவர்களைக் கேட்கச் செய்தும் அவர்களின் கேட்டல் திறனை வளர்க்கலாம், தமிழையும் மாணவரின் வீட்டு மொழியையும் தெரிந்த வேறு வகுப்பு மாணவரையோ ஆசிரியரையோ அழைத்து வந்து தமிழிலும் வீட்டுமொழியிலும் மாறி மாறி அதே கதையைச் சொல்லவைக்கலாம்.

எவ்வெவ்விடங்களில் தமிழும் வீட்டுமொழியும் வேறுபடு கின்றதோ அவ்வெவ்விடங்களைக் கேட்குந்திறனுக்குப் பயன்படுத்து தல் வேண்டும். எடுத்துக் காட்டாக 1. ஒலிப்பு 2. சொற்கள் 3. வாக்கிய அமைப்பு போன்ற இடங்களில் இருமொழியக் குழந்தை யின் வீட்டுமொழி தமிழ் மொழியிலிருந்து வேறுபடலாம். ஆகவே வீட்டுமொழியோடு வருகின்ற குழந்தைகளுக்குத் தமிழ் ஒலிகளையும், சொற்களையும், வாக்கியங்களையும் கேட்க வாய்ப்பளித்தல் வேண்டும்.

ஒலிப்பு சரியாக அறியப்பட்டிருந்தால்தான் ஒருவர் பேசுவது மற்றொருவருக்குச் சரியாகக் கேட்கும். இருமொழியக் குழந்தைகளின் வீட்டுமொழிச் சொற்களின் ஒலிகளிலிருந்து தமிழ் எழுத்து வழக்குச் சொற்களின் ஒலிகளை வேறுபடுத்தி அறியும் வகையில் ஒலிகளைக் கேட்கும் பயிற்சி அளித்தல் தேவையாகிறது. மலையாளம் போன்ற ஒரு சில மொழிகளைத் தவிர பிறவற்றில் தமிழிலுள்ள, ழ-ள-ல, ற-ர, ந-ன போன்ற ஒலிகளுக்கு இடையிலான வேறுபாடு காணப் படுவதில்லை. ஆகவே, பிற ஒலிகளோடும் அவை பொருளுள்ள சொற்களில் அமைகிறவாறு ஒலித்துக் காட்ட வேண்டும். அவ்வாறு ஒலித்துக் காட்டியபின் அச்சொற்களில் வரும் ஒலிகளை வேறுபடுத்திக் கேட்குந் திறனை வளர்க்க வேண்டும். இவ்வொலிகள் அமைந்த சொற்பட்டியல் அமைத்து இச்சொற்களில் ஒலிவேறு பட்டால் பொருள் மாறுபடுவதை மாணவர் உணரச் செய்ய வேண்டும். இவ்வொலிகள் அமைந்துள்ள சொற்களைக் கொண்ட வாக்கியங்களைக் கேட்கச் செய்வதன் மூலமும், இவற்றிற்கு நிறையக்

கேட்டெழுத்துத் தருதல் மூலமும் தமிழ் ஒலிகளைச் செம்மையாகக் கேட்டு அடையாளம் காண உதவலாம். ஒலிநயம் மிக்க பாடல்களை ஒவ்வொரு மாணவராகப் பாடச் செய்து மற்றவர்களைக் கவனமாகக் கேட்கச் செய்யலாம். பாடல்கள், தேசிங்குராசன் பாட்டு போன்ற கதை நிகழ்ச்சிப் பாடல்களாக இருந்தால் மாணவரை ஆர்வமுடன் கேட்கும் நிலையை ஏற்படுத்தும். இப்பாடல்கள் குழந்தைகளுக்குப் பழக்கமான எளிய சொற்களையும் வாக்கிய அமைப்புகளையும் கொண்டதாக இருப்பின் நலம்.

சிறுசிறு கதைகளைக் கூறிக் கேட்கச் செய்வதால் மாணவரின் கேட்கும் திறனை வளரச் செய்யலாம். கதைகளைக் கூறும்போது குரல் ஏற்றத் தாழ்வுடனும் நடிப்புடனும் கூறுதல் வேண்டும். ஆசிரியர் கூறுவதோடு மாணவர் ஒவ்வொருவரையும் சிறுசிறு கதைகளைக் கூறச் செய்வதன் மூலமும் கேட்டல் திறனை வளர்க்கலாம். இதனால் புதிய புதிய சொற்களையும் மாணவர் அறிந்து கொள்ள வழி ஏற்படுகிறது.

ஆசிரியர் பாடத்தைத் தாம் படிக்கும் போது மாணவரைக் கவனமாகக் கேட்கச் செய்வதன் வழியும் கேட்டனரா என்பதை அவ்வப்போது சிறுவினாக்கள் விடுப்பதன் வழியும் அவர்களை விழிப் போடு கேட்கச் செய்யலாம்.

பாடநூல் தவிர, செய்திகளை அமைதியாகவும், ஆர்வமுடனும் கேட்கும் திறமையை வளர்த்தல், குழந்தைகளின் வீடு, ஊர், விலங்கு, திருவிழா போன்றவற்றைச் சுவைபட ஆசிரியர் கூறுவதன் வழி மாணவரை ஆர்வமுடன் கேட்கச் செய்யலாம்,

ஆசிரியரும் பிறரும் கூறுவதைச் சரியாகக் கேட்டு அதன் பொருளை உணர்ந்து நடத்தல் மாணவர்க்குத் தேவையாகும். பாடத்தைப் படி, எழுந்து நில் போன்ற கட்டளை வாக்கியங்களைக் கூறி அவற்றின் பொருளை உணர்ந்து கொண்டு செயலில் ஈடுபடச் செய்யலாம்.

மாணவரை இடைவெளி விட்டு நிற்கவைத்து ஒரு மாணவன் காதில் மறைவாக ஒரு செய்தியைக் கூறி அவன் இன்னொருவனிடமும், அவன் இன்னொருவனிடமும் வரிசையாகச் சொல்லச் செய்யலாம்.

**கேட்குந்திறனை பாதிப்பவை**

ஆசிரியரும், உடனிருக்கும் மாணவரும் கூறுவதைக் கவனமாகக் கேட்கும் போதுதான் கேட்டல் திறன் செம்மையாக வளர்கிறது. வகுப்பறையில் மாணவர் மனத்தை அலையவிடாமல் கவனச் சிதை

வின்றி கேட்கும்மாறு பார்த்துக்கொள்ள வேண்டும். சொற்களில் அமையாது தனித்த ஒலி காதில் விழுவது, ஆசிரியர் கூறுவதில் தெளிவின்மை கவர்ச்சியின்மை போன்ற தேவையற்ற செயல்கள் மாணவரின் கவனத்தைச் சிதறச் செய்யும். மாணவர்க்குப் புரியாத சொற்களைக் கூறுதல், மாணவரின் செவிப்புலன்குறை முதலியவை மாணவர்களின் கேட்டல் திறனுக்குத் தடையாக இருக்கும் என்பதை ஆசிரியர் அறிந்து கொள்ளுதல் வேண்டும். இக்குறள் பலவாறாக அமையலாம். ஒலிகளை ஒன்றிற்குப் பதில் இன்னொன்றாகக் கேட்டல் — இது பொருளைத் தவறாகப் புரிந்து கொள்ளச் செய்யும், கட்டளையைச் சரிவரக் கேட்காததால் தவறாகச் செய்தல், உணர்ச்சி ஒலிக்குறிப்புகளைச் சரிவரப் புரிந்து கொள்ளாதிருத்தல், முழுவாக்கியத்தையும் கேட்டு உட்கொள்ளும் இயல்பு இல்லாததால் அரைகுறையாகவே பொருளை உணர்தல் முதலியன.

மாணவரின் காதில் வழூஉச் சொற்களும் கொச்சைச் சொற்களும் விழாதவாறு, ஆசிரியர் பேசும்போது எச்சரிக்கையுடனிருந்து தெளிந்த ஒலிப்புடன் உச்சரித்து மாணவர்க்கு முன்மாதிரியாகத் திகழ வேண்டும்.

மேற்கூறிய கருத்துகளைக் கவனத்திற் கொண்டு ஆசிரியர் இருமொழியக் குழந்தைகளின் கேட்டல் திறனில் குறைகளைத் திருத்துவதில் தனிக்கவனம் செலுத்த வேண்டும். இவர்கள் வகுப்பறையில் எழுத்துத் தமிழில் பேசுவதைக் கேட்டுப் புரிந்து கொள்ளவும், வெளியுலகில் பொதுப் பேச்சுத் தமிழில் பேசுவதைக் கேட்டு புரிந்து கொள்ளவும் பயிற்சி அளிக்க வேண்டும். இப்பயிற்சிகளை மேலே கண்ட **தமிழும் தெலுங்கும், தமிழும் கன்னடமும், தமிழும் மலையாளமும், தமிழும் சௌராட்டிரமும், தமிழும் உருதும், தமிழும் மராத்தியும்** இயல்களில் கூறப்பட்ட இடர்ப்பாடுகளை மனத்திற் கொண்டு அமைக்கப் பெறவேண்டும். அதாவது இடர்ப்பாடுகள் தரும் ஒலிகளையும், எழுத்துகளையும், சொல் இலக்கண மற்றும் சொற்றொடர் இலக்கணக் கூறுகளையும் அதிக அளவு ஆசிரியர் தம் பேச்சில் அமைகிறவாறு பேச வேண்டும். இது இடர்ப்பாடுகளைத் தரும் கூறுகளை மீண்டும் மீண்டும் கவனத்துடன் கேட்டு உணர மாணவர்க்குத் துணை செய்யும். இக்கூறுகளை தனித்தனியே பயிற்சிக்குக் கொடுப்பதைவிட பாடப் பொருளோடு பொருந்துமாறு பேசினால் தமிழ் மொழியில் ஏற்படும் இடர்ப்பாடுகள் கேட்டுணரும் திறனில் குறைய வழி உண்டு. அதாவது எவ்வளவுக்கு முடியுமோ அவ்வளவுக்கு ஆசிரியர் மாணவர்களிடம் தமிழிலே பேசினால் மட்டும் போதாது. அவ்வாறு அவர்கள் பாடப்பொருளைப் பேசிக் கற்றுத் தரும்போது இடர்பாடு தருகின்றவற்றை மீண்டும் மீண்டும் பேசிக் கேட்டுணரச் செய்ய வேண்டும்.

## ஆசிரியர் நினைவிலிருத்த வேண்டிய சில குறிப்புகள்

1. கேட்டல் திறன் ஓர் உட்கொள்ளுத்திறன் என்பதை அறிந்திருத்தல்.

2. கேட்டல் திறனின் இன்றியமையாமையை அறிந்திருத்தல்.

3. வகுப்பிலுள்ள இருமொழியக் குழந்தைகளுக்கு தமிழில் அமைந்திருக்கும் கேட்டல் திறனை அறிந்திருத்தல்.

4. இருமொழியக் குழந்தைகள் தமிழ் ஒலிகளைக் கேட்டு அடையாளங்காண உதவுதல்.

5. கேட்டல் திறனை வளர்க்கத் தேவையான பயிற்சிகளைக் கொடுக்க அறிந்திருத்தல்.

6. மாணவர்களுக்குக் கவனச் சிதைவு நேராதவாறு வகுப்பறைச் சூழலை உருவாக்க அறிந்திருத்தல்.

7. இருமொழியக் குழந்தைகள் எழுத்துத் தமிழில் பேசுவதைப் புரிந்து கொள்ளவும், பொதுப்பேச்சுத் தமிழில் பேசுவதைப் புரிந்து கொள்ளவும். ஆசிரியர் அவ்விரண்டிலும் பேசிக் கேட்டுணர வைக்க வேண்டும்.

—o—

## 13. பேசுதல் திறன் வளர்த்தல்

தமிழை வீட்டுமொழியாகக் கொண்ட குழந்தைகள் பள்ளிக்கு வரும்போது தமிழில் ஓரளவு பேசுந்திறனோடு வருகின்றனர். ஆனால் இருமொழியக் குழந்தைகள் தமிழில் பேசத் தெரிந்தும் தெரியாமலும் வரலாம். ஆசிரியர், இருமொழியக் குழந்தைகளின் இந்நிலையைக் கருத்திற் கொண்டு மாணவரின் பேசுதல் திறனை வளர்த்தல் தேவையாகிறது.

அடிப்படை மொழித்திறன்களான கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் முதலியவற்றுள் முக்கியமானதும், மற்றத்திறன்களுக்கு அடிப்படையாக அமைவதும் பேசுதல் திறனாகும். பேச்சு செம்மை யாக அமைந்திருந்தால் படித்தல், எழுதுதல் திறன்கள் செம்மையாக அமையும் மொழிகற்பித்தலின் நோக்கம் மாணாக்கரை நன்றாக பேச, படிக்க, எழுதப் பயிற்சி அளிப்பதேயாகும். இதில் படிப்பின் முதல் நிலை பேச்சாகும்.

மனிதன் தன் உள்ளக் கருத்துகளைப் பேசுவதன் வாயிலாகப் பிறர் அறிய வெளியிடுகின்றான். இவனால் இதனை **'வெளியிடுந்திறன்'** என்று கூறுவர். கேட்பவர் சரியாகப் புரிந்து கொள்ளும் வகையில் தெளிவாகப் பேசுவது சிறப்புடையது. ஆகவே ஆசிரியர் இரு மொழியக் குழந்தைகளைச் செம்மையாகப் பேசுவவற்குப் பயிற்சி அளித்தல் தேவையாகிறது.

தமிழ்நாட்டில் ஒரு சிறு கிராமத்தையோ சிறு நகரத்தையோ எடுத்துக்கொண்டால் ஒவ்வொரு சமூகத்தினருக்கும் ஒரு தெரு உண்டு. ஒவ்வொரு சமூகத்தினரும் ஒவ்வொரு வகையான சமூகப் தமிழைப் பயன்படுத்துகின்றனர். வீட்டில் வேறுமொழியைத் பேசுகின்ற சமூகத்தினரும் தங்கள் தங்கள் சமூகத்திற்கே உரிய தமிழைப் பேசுகின்றனர். மேலும் அக்கிராமத்திற்கே அல்லது அச்சிறு நகரத்திற்கே உரிய வட்டாரத் தமிழும் வழக்கில் இருந்து வருகிறது. பிற மொழியை வீட்டு மொழியாகக் கொண்டவர் களிடத்தில் இன்னொரு வகைத் தமிழும் தங்கள் சமூகத் தமிழோடு இரண்டறக் கலந்து பயன்பட்டு வருகின்றது. இந்தத் தமிழில் அவர்களுடைய வீட்டுமொழியின் சாயல் அதிக அளவு இருக்கக் கூடும். அவர்கள் வெளியுலகில் தமிழைப் பேசும் போது இந்தச் சாயல்

குறைந்து பிற சமூகத்தினரைப் போலவே தங்கள் சமூகத்தை மட்டும் சுட்டிக் காட்டும் தமிழ் வகையைப் பயன்படுத்துவார்கள். பள்ளி யில் பயிலவரும் இருமொழியக் குழந்தை தன் வீட்டு மொழியில் ஓரளவு பேசுதல் திறனைப் பெற்றிருக்கும். அதே போன்று இக் குழந்தை தன் சமுதாயத்தினர் பேசும் தமிழிலும் ஓரளவு பேசுந் திறனைப் பெற்றிருக்கும். மிகச் சிறு குழந்தையாக இருப்பதாலும் அதற்கு உலகத் தொடர்பு குறைவாக இருப்பதாலும் இக்குழந்தை பேசும் அதனுடைய சமூகத் தமிழ் வயதானோர் பேசுவதைப் போன்று விரிவாக அமையாது. மேலும் தன்னோடு ஒத்தவயதைச் சார்ந்த தமிழை வீட்டுமொழியாகக் கொண்ட குழந்தையின் பேசுதல் திறனைப் போலவும் அமையாது. அதாவது, அதற்குத் தெரிந்திருக் கும் தமிழ்ச் சொற்களும் சொற்களைப் பயன்படுத்தி வாக்கியங் களைத் தக்கவாறு அமைக்குந்திறனும், அடுத்தடுத்து வாக்கியங் களைப் பொருளுக்கேற்றவாறு உருவாக்குந் திறனும், நீளமான வாக் கியங்களை உருவாக்கிப் பயன்படுத்துந் திறனும் மற்றும் சரியான வாக்கிய இசையோடு பேசுகின்ற திறனும், பொருத்தமான விரை வோடும் வினயத்தோடும் பேசுகின்ற திறனும் தமிழில் குறைந்தே காணப்படும். இவற்றை நிறைவுக்குக் கொண்டு வருவது தமிழ் மொழி ஆசிரியரின் கடமையாகும்.

**பேச்சுச் சூழலைக் கொடுத்தல்**

தமிழை வீட்டுமொழியாகக் கொண்ட குழந்தைகளைவிட பிற மொழியை வீட்டுமொழியாகக் கொண்டுள்ள குழந்தைகள் பேசு வதற்கு அச்சப்பட்டோ தயக்கங் காட்டியோ தம் எண்ணத்தை வெளியிடாமலிருப்பர். இத்தகைய குழந்தைகளிடம், அவர்களின் வீட்டார்களுடைய பெயரைக் கேட்டோ, வீட்டு விலங்குகள் பற்றிக் கேட்டோ அவர்களுடைய அச்சத்தைப் போக்கலாம். வீட்டுமொழி யின் பாதிப்பால் இவர்கள் பேசும் தமிழ் கொச்சையாகவோ, குறை யுடையதாகவோ இருக்கலாம். முதலில் இக்குறையை மிகைப் படுத்தாது, அவர்கள் பேசும் முறையிலேயே அனுமதித்து விட்டு, பின்னர் படிப்படியாக அவர்கள் பேச்சைச் செம்மைப்படுத்த முயலலாம். தமிழை வீட்டுமொழியாகக் கொண்ட குழந்தைகளுடன் இவ்விருமொழியக் குழந்தைகளை உரையாடச் செய்தும், குழு விளையாட்டில் ஈடுபடும் போது உரையாடச் செய்தும், ஒரு மாணவன் எளிய கதை ஒன்றைச் சொல்ல, அதை இவர்களைக் கேட்கச் செய்து திரும்பிக் கூறச் செய்தும் இவர்களின் பேச்சைச் செம்மைப்படுத்தலாம். எல்லையோரப் பகுதிப் பள்ளிகளில் தமிழ் ஆசிரியரும் மாணவர்களுடைய தமிழைத் துணையாகக் கொண்டு விளையாட வேண்டியிருக்கும். அத்துடன் இப்பள்ளிகளில் பிற பாடங்களைக் கற்பிக்கிற ஆசிரியர்களின் தமிழ் ஒத்துழைப்பும் கட்டாயம் பயன்படுத்தப்பட வேண்டும்.

**பேச்சொலிகளை உணர்தல்**

பேச்சு செம்மையாக விளங்க, ஒலிகளின் ஒலிப்பு சரியாகவும் தெளிவாகவும் அமைந்திருக்க வேண்டும். இருமொழியக் குழந்தைகளின் பேச்சு தங்கள் வீட்டுமொழியின் பாதிப்பால் தமிழ் ஒலிப்பு நிலை சரியாக அமையாமலிருக்கலாம். இதற்காக ஆசிரியர் அவர்களுடைய வீட்டுமொழியிலிருந்து வேறுபடுகின்ற தமிழ் ஒலிகளுக்குச் சிறப்புப் பயிற்சி தரவேண்டும். இதற்குத் **தமிழும் தெலுங்கும் தமிழும் கன்னடமும், தமிழும் மலையாளமும், தமிழும் சௌராட்டிரமும் தமிழும் உருதும், தமிழும் மராத்தியும், ஒலிகளையும் வரிவடிவங்களையும் கற்பித்தல்** என்னும் இயல்களைப் பார்க்கவும்.

பேச்சொலிகளை உணர்தலுக்கு ஒலிகளைத் தனித்தனியாகவும் கூட்டெழுத்தில் சேர்த்தும் ஒலிக்கக் கற்றுத் தருவது தேவையாகும். குறில்–நெடில் வேறுபாடு, லகர, ளகர, ழகர வேறுபாடு, ரகர றகர வேறுபாடு, னகர, ணகர, நகர, ஞகர வேறுபாடு முதலியவற்றின் ஒலிப்பினை மாணவர் அறியுமாறு கற்பிக்க வேண்டும்.

**நாபிறழ் பயிற்சி**

நா மடங்கியும், நீண்டும், மேல் அண்ணத்தை ஒற்றியும் வருடியும், கீழ் அண்ணம், பல், இதழ் இவற்றோடு ஒன்றுதல் போன்ற பல பயிற்சிகள் மூலம் எழுத்துகளை அவற்றின் பிறப்பிட ஒலிகளோடு குழந்தைகள் ஒலிப்பதற்குப் பயிற்சி தரவேண்டும். அதாவது, மேற்கூறிய தமிழ் ஒலிகளை ஒலிக்கும்போது தம்முடைய வாயுறுப்புகள் எவ்வாறு இயங்குகின்றன என்பதை ஆசிரியர் முதலில் தெரிந்து கொண்டு பின்னர் மாணவர்களுக்கு அவற்றைச் சுட்டிக் காட்டியும் தொட்டுக் காட்டியும் பயிற்சி தரவேண்டும்.

எடுத்துக் காட்டு

ழ — ள, ல — ள, ர — ற, ன — ண

போன்ற எழுத்துகளின் வேறுபாடுகளை இணை இணையாகவும் சொற்களில் அமைத்தும் நாபிறழ் பயிற்சி மூலம் தெளிவு படுத்தலாம்.

**சொற்களைச் சரியாக உச்சரிக்கச் செய்தல்.**

பல எழுத்துகள் சேர்ந்த சொற்களை அவற்றிற்குரிய ஒலிப்போடு ஒலிக்கும் போதுதான் அவை உணர்த்தும் பொருளைக் கேட்பவர் முழுமையாக உணரமுடியும்.

எடுத்துக்காட்டு

பலம்—பழம் கலம்—களம் வெல்லம்—வெள்ளம்
கொல்க—கொள்க வால்கள்—வாழ்க

போன்ற சொற்களை ஆசிரியர் சரியான பொருள் உணர்ச்சியோடு ஒலித்துக் காட்டி, ஒலி வேறுபாட்டினால் பொருள் மாறுபடுவதை மாணவர் அறியச் செய்ய வேண்டும்.

மாணவன் தன் பெயர், தன் பெற்றோர் பெயரைக் கூறச் செய்தல் உறவு முறைச் சொற்களைக் கூறச் செய்தல், மூலம் அவன் பேச்சில் காணப்பெறும் ஒலிப்புப் பிழைகளைக் கண்டறிந்து உடனுக்குடன் திருத்தலாம்.

எடுத்துக்காட்டு

| | |
|---|---|
| சம்முவொ(ம்) | சண்முகம் |
| எச்சிமி அல்லது லெச்சுமி | இலக்குமி |
| ஆயி/அம்மெ/ஆத்தாமி | அம்மா |
| சேச்சி/தங்கி/தங்கச்சி | தங்கை |

அடுத்து பேச்சுவழக்குச் சொற்களுக்கு ஏற்ற திருந்திய எழுத்து வழக்குச் சொற்களுக்குப் பயிற்சி அளிக்கலாம்.

| | | |
|---|---|---|
| வெல | விலை | |
| ஒசரம் | உயரம் | |
| மத்த | மற்ற | |
| மூனு | மூன்று | |
| அஞ்சு | ஐந்து | |
| தேங்கா | தேங்காய் | |
| அவ | அவள் | போன்றவை |

**புணர்ச்சி நிலையில்**

| | |
|---|---|
| மயில் + பீலி | மயிற்பீலி |
| கடல் + கரை | கடற்கரை |
| வாள் + கள் | வாட்கள் |
| முள் + கள் | முட்கள் |

இம்மாற்றங்கள் பேச்சு வழக்கில் இல்லை என்றாலும் எழுத்து வழக்கில் வருவது போன்ற புணர்ச்சி மாற்றங்களைத் திருந்திய பேச்சில் ஏற்றுக் கொள்வதால் பின்னர் எழுதும் போது எளிமையாக இருக்கும்.

**சொற்றொடர்களைப் பேசவைத்தல்**

எழுத்துகளையும் சொற்களையும் ஒலித்துப் பழகிய குழந்தைகளுக்கு, சிறு சிறு சொற்களைக் கொடுத்துப் பேசப் பழக்க வேண்டும்.

எழுத்துத் தமிழிற்குரிய முறையில் வாக்கியங்களை இலக்கணத்தோடு பேசச் செய்ய வேண்டும்.

*சான்றாக*

பத்து மாடு ஓடிச்சு என்பதை பத்து மாடுகள் ஓடின என்றும்

தங்கச்சி வந்திச்சு என்பதை தங்கை வந்தாள் என்றும் திருத்திக் கூறி வாக்கியங்களைப் பிழையின்றிப் பேசச் செய்ய வேண்டும்.

வாக்கியத்தில் அமைந்துள்ள சொற்களைச் சரியான பொருள் உணர்ச்சியோடு பேசும் போதுதான் பேச்சு சிறப்படைகிறது. மேலும் பேசும்போது ஒரே நிலையில் பேசாது குரல் ஏற்றத் தாழ்வுடன் வினா, வியப்பு, போன்றவை கலந்து பேச வேண்டும். ஆனால் இருமொழியக் குழந்தைகளின் பேச்சு வீட்டுமொழியின் செல்வாக்கால் வாக்கிய இசையில் மாறுபட்டுக் காணப்படும். இதனைக் களைய வினா, வியப்பு, போன்றவை அமைந்த தமிழ்ச் சொற்றொடர்களைக் கொடுத்து இவர்களைப் பேசச் செய்தல் வேண்டும். சிறு சிறு உரையாடல் பகுதிகளைக் கொடுத்து மாணவர்களை உரையாடலில் பங்கேற்க வைத்தலும் சிறப்பாகும். நாம் பேசும் போது வாக்கியங்களில் பேசுகிறோம். இவ்வாக்கியங்கள் வினைமுற்றோ மற்ற பயனிலையோ பெற்று முழுமையாக அமையலாம். அன்றியும் அவை அரைகுறையாகவும் அமையலாம். மேலும், ஒரே வாக்கியத்தை நாம் சொல்லும் போது கூட அவ்வாக்கியத்திலுள்ள தொடர்களுக்கு இடையில் சில நேரங்களில் இடம் விட்டுப் பேசுகிறோம்; சில நேரங்களில் விரைவாகப் பேசுகிறோம். பல சமயங்களில் இடைவிட்டுப் பேசாவிட்டால் நாம் சொல்ல வேண்டிய பொருள் மாறுபட்டு விடும்.
சான்றாக,

அவள், அக்கா வீட்டிற்குப் போனாள்

அவள் அக்கா, வீட்டிற்குப் போனாள்

இவ்வாக்கிய இசை இயல்புகளிலும் இருமொழியக் குழந்தையின் தமிழ், தமிழை வீட்டுமொழியாகக் கொண்ட குழந்தைகளிடமிருந்து மாறுபடலாம். இம்மாறுபாட்டைக் களையவும் பேசுதல் பயிற்சி தரவேண்டும். இருமொழியக் குழந்தைகளின் வாக்கியத்தைச் செம்மை செய்து உரக்க ஆசிரியர் கூற அக்குழந்தைகள் அவரைப் பின்பற்றி உரக்கக் கூறச் செய்யலாம்,

**தமிழ்ச் சொற்களஞ்சியத்தைப் பெருக்குதல்.**

பேச்சு சிறப்புற (திருந்திய) தமிழ்ச் சொற்கள் தட்டுத் தடங்கலின்றி இரு மொழியக் குழந்தைகளின் மனதில் எழ வேண்டும். இருமொழியக் குழந்தைகளின் பேச்சில், அவர்களுடைய வீட்டு மொழி மற்றும் தமிழ்ப் பேச்சு வழக்கின் செல்வாக்கினால் வீட்டு மொழிச் சொற்களும், தமிழ்ப் பேச்சு வழக்குச் சொற்களும் மிகுந்து காணப்படும். வீட்டு மொழிச் சொற்களுக்கேற்ற தமிழ்ச் சொற்களையும், தமிழ்ப் பேச்சு வழக்கிற்கு ஏற்ற திருந்திய தமிழ்ச் சொற்களையும் ஆசிரியர் அவ்வப்போது தந்து மாணவர்களைப் பேசச் சொல்ல வேண்டும்.

எடுத்துக்காட்டு

| | |
|---|---|
| பனி | காய்ச்சல் |
| அச்சன் | தந்தை |
| திருவிஷா | திருவிழா |
| பூச்செ | பூனை |

வீட்டு மொழி வேறுபட்டிருக்கும் இக்குழந்தைகளிடம் தமிழ்ச் சொற்களின் எண்ணிக்கை குறைவாகவே இருக்கும். இக்குழந்தைகளுக்கு ஒரு சில தமிழ்ச் சொற்கள் தெரிந்திருந்த போதிலும் திடீரென்று நினைவுக்கு வராமல் போகலாம். இது ஒரு வகை. ஒரு சில பொருள்களுக்குத் தமிழ்ச் சொற்களே தெரியாமல் இருப்பதால் தட்டுத் தடங்கல் ஏற்படலாம். இது இன்னொரு வகை. மூன்றாவதாக, பேசப்படுகின்ற பொருளே வயது காரணமாகவோ வேறு ஏதாவது ஒரு காரணமாகவோ அவர்களுக்குப் புரியாமல் இருக்கலாம். நான்காவதாக, சில குழந்தைகள் இயல்பிலேயே கூச்சம் உடையவராக இருக்கலாம். அதனாலும் இத்தட்டுத் தடங்கள் ஏற்படலாம். இல்வாறாக, தடைசெய்யும் காரணம் எதுவெனக் கண்டு அதைக் களைய முயற்சி செய்ய வேண்டும்.

இருமொழியக் குழந்தைகளின் பேச்சு வழக்குச் சொற்கள் எழுத்தில் பயன்படாத வட்டாரத்திற்கே உரிய சொற்களாக இருக்குமானால் எழுத்து வழக்குச் சொற்களைத் தரவேண்டும். பொதுவாக தொடக்கப் பள்ளிகளில் பேச்சு வழக்குச் சொற்களைத் திருந்திய வடிவமாக்கி எழுத்துத் தமிழில் தரப்பட்ட சொற்களையே நிறைந்த அளவு பயன்படுத்த வேண்டும்.

**எழுத்துத் தமிழில் பேச வைத்தல்**

இருமொழிய குழந்தைகளுக்கு வகுப்பறையில் எழுத்துத் தமிழில் எழுதப் பயிற்சி அளிப்பதோடு எழுத்துத் தமிழில் பேசவும் பயிற்சி

அளித்தலே ஆசிரியரின் தலையாய கடமை. ஆசிரியரும் திருந்திய எழுத்து வழக்கிலேயே அதிக அளவு பேசி தாம் முன்மாதிரியாக அமைய வேண்டும்.

## அணுகு முறைகள்

இருமொழியக் குழந்தைகள் பேசுதல் திறனைச் செம்மைப் படுத்த, உரையாடல், கலந்துரையாடல், கதை கூறுதல் நடித்துக் காட்டுதல், சிறு சொற்பொழிவு போன்ற உத்திகளைக் கையாளலாம்.

இருமொழியக் குழந்தையைத் தமிழை வீட்டுமொழியாகக் கொண்ட குழந்தையுடன் உரையாடச் செய்வதன் மூலம் இரு மொழியக் குழந்தைகளின் வீட்டுமொழிச் செல்வாக்கைக் குறைக்க லாம். குழந்தைகள் குழுவாகக் கூடிப் பேசும் போது தாங்கள் ஒத்த வயதினராய் இருப்பதால் தயக்கமின்றி, தாங்கள் கண்ட வற்றையும் கேட்டவற்றையும் பேசுவர்.

சிறுசிறு தலைப்புகளில் இருமொழியக் குழந்தைகளைப் பேசச் செய்து அவர்கள் பேசும் போது ஏதாவது வீட்டுமொழிச் சொற்கள், கொச்சைச் சொற்கள் வரின் அவற்றை நீக்கிப் பேசுமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

சொற்பொழிவுகளில் பங்கேற்கும் இருமொழியக் குழந்தை களுக்கு பேச்சு சிறக்க உவமைகள், மரபுத் தொடர்கள் முதலிய வற்றைப் பயன்படுத்துமாறு ஆசிரியர்கள் ஊக்கம் காட்ட வேண்டும். இங்கே அமையும் மரபுத் தொடர்கள் சேவல், பெட்டைக் கோழி போன்றவையும், கீரிப்பிள்ளை, வாழைக்கன்று, ஆட்டுக் குட்டி, பசுவின் கன்று, தென்னம் பிள்ளை போன்றவையுமாகவும் அமைய வேண்டும்.

ஆசிரியர் வகுப்பறையிலிருக்கும் போது தமிழிலும், அவர் இல்லாத போது வீட்டு மொழியிலும் பேசுகிற இயல்பு பெரும்பாலும் இருமொழியக் குழந்தைகளிடம் காணப் பெறும். ஆசிரியர் இல்லாத வேளைகளிலும் தமிழிலேயே பேச இவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

ஆசிரியர், பெற்றோர் போன்றவர்களிடம் இருமொழியக் குழந் தைகள் எவ்வாறு பேசுவதென்பதைக் கற்றுக் கொடுக்க வேண்டும். ஆசிரியரைக் காணும் போது ''ஐயா, வணக்கம்'' என்று கூறும் பண் பாட்டு முறைகளைக் கற்று கொடுத்தல் தேவையாகிறது.

**ஆசிரியர் நினைவிலிருத்த வேண்டிய சில குறிப்புகள்.**

1. மற்ற மொழித் திறன்களோடு பேசுந் திறனுக்குள்ள தொடர்புகளை அறிந்திருக்க வேண்டும்.

2. இருமொழியக் குழந்தைகளின் பேசுதல் திறன் வளர்ச்சியை அறிந்திருக்க வேண்டும்.

3. பேச்சுச் சூழலை மாணவர்க்குக் கொடுக்க அறிந்திருக்க வேண்டும்.

4. இருமொழியக் குழந்தைகள் முதலில் பேசும் போது இடர்ப்பாடு தருகின்ற தமிழ் ஒலிகளையும், சொற்களையும் சொற்றொடர்களையும் அவற்றிற்கேற்ற இயல்புகளுடன் வெளியிடுமாறு பயிற்சி அளிக்க வேண்டும்.

5. இருமொழியக் குழந்தைகளிடம் தமிழ் சொற்களஞ்சியத்தைப் பெருக்க அறிந்திருக்க வேண்டும்.

6. இருமொழியக் குழந்தைகளை எழுத்துத் தமிழில் பேச வைக்க வேண்டும்.

7. இருமொழியக் குழந்தைகளிடம் பேசுதல் திறனை வளர்க்க சில அணுகு முறைகளை அறிந்திருக்க வேண்டும்.

8. தமிழில் பேசும் போது கடைப் பிடிக்க வேண்டிய பண்பாட்டு முறைகளை மாணவர் அறியச் செய்ய வேண்டும்.

—o—

## 14. படித்தல் திறன் வளர்த்தல்

எழுத்து வடிவில் உள்ளதை வாய்விட்டோ வாய்க்குள்ளோ படித்துப் பொருளுணர்தலே படித்தல். அதாவது படித்தலில் இரு வகைகளுண்டு. (1) வாய்விட்டு உரக்கப் படித்துப் பொருள் அறிந்து கொள்ளுதல். (2) வாய்க்குள்ளே படித்துப் பொருள் அறிந்து கொள்ளுதல்.

இருமொழியக் குழந்தைகளுக்குத் தொடக்க காலத்தில் வாய் விட்டு உரக்கப் படிப்பதற்கு நிறைய பயிற்சி கொடுக்க வேண்டும். ஏனென்றால் இருமொழியக் குழந்தைகளின் வீட்டுமொழியிலுள்ள ஒலிகளும் தமிழ் மொழியிலுள்ள ஒலிகளும் வேறுபட்டிருக்கலாம். தமிழ் மொழியில்காணும் மெய்யொலிகளில் வல்லின மெய்யொலி களான க, ச, ட, த, ப ஆகியவை ஒன்றுக்கு மேற்பட்ட ஒலிப்புத் தன்மைகளைக் கொண்டுள்ளன. ஆனால் வரிவடிவில் இவற்றின் பல்வேறுபட்ட ஒலிப்புத் தன்மைகளைக் குறிக்க ஒரேயொரு வரிவடிவம்தான் பயன் படுத்தப்படுகிறது. (காண்க : தமிழும் தெலுங்கும்) இத்தகைய அமைப்பை இருமொழியக் குழந்தைகள் வாய்விட்டு உரக்கப் படிப்பதால் தான் எளிதில் உணர்ந்து கொள்ள முடியும். மேலும், இத்தகைய ஒலிப்பு வேறுபாடுகளைச் சொற் பயிற்சி தருவதன் மூலம் உணர்த்த வேண்டும்.

மாணவர்களின் நிறை குறைகளைக் கண்டறிந்து தக்கப் பயிற்சிகளை ஆசிரியரே தயாரிக்கலாம்.

### படித்தலின் தன்மைகள்

வாய்விட்டு உரக்கப் படிப்பதால் இருமொழியக் குழந்தை களுக்குப் பல நன்மைகள் கிடைக்கின்றன. அவைகளாவன ; (1) ஒலிகளின் ஒலிப்பு முறைமையைப் பற்றி அறிய முடிகிறது ; (2) சொற்கள் வாக்கியங்களில் தரும் பொருளைத் தானும் உணர்ந்து அவற்றைச் சரிவரப் பயன் படுத்துவதால் பிறரையும் உணரச் செய்ய முடிகிறது. (3) படித்து பொருளுணர முடிகிறது ; (4) உட்கருத்தைப் பற்றி அறிய முடிகிறது ; (5) சொற்க ளஞ்சியத்தைப் பெருக்க உதவுகிறது.; (6) படித்தவற்றை நினைவு கூர்தல்.; (7) மாணவர்களின் வீட்டுமொழியிலுள்ள ஒலிகளுக்கும் தமிழ் மொழியிலுள்ள ஒலிகளுக்கும் இடையே காணும் ஒற்றுமை வேற்றுமைகளை அறிய முடிகிறது.

வீட்டுமொழியும் தமிழ்மொழியும் வேறுபடும் இடங்களில் இரு மொழியக் குழந்தைகள் படிக்கும் போது இடர்ப்பாடுகளைச் சந்திக்க நேரிடலாம். இருமொழியக் குழந்தைகள் படித்ததை நன்கு உணர்ந்து கொண்டனரா என்பதை அறிய இரு வழிமுறைகளை ஆசிரியர் கையாளலாம். படித்தல் திறனை வளர்க்கப் பாடங்களின் அமைப்புக்குத் தகுந்தவாறு ஒவ்வொரு பாடத்துடனும் ஏற்ற வினாக்களை உருவாக்கி அவ்வினாக்களுக்கு இருமொழியக் குழந்தைகள் விடை சொல்லும்படிச் செய்ய வேண்டும். இம்முறை பெரும்பாலும் ஒலிகளின் ஒலிப்பு முறையையும் அவற்றின் பண்புத் தன்மைகளையும் அறிந்து கொள்ளப் பயன்படும். இரண்டாவதாக, எழுதும்படிச் செய்து எழுதிய விடைகளைத் திருத்திக் கண்டுணரலாம். (இதை நான்காம், ஐந்தாம் வகுப்புகளில் கடைப்பிடிக்கலாம்) இவ்வாறு செய்வது இருமொழியக் குழந்தைகளின் நினைவாற்றலையும் எழுதுந்திறனையும் அறிந்து கொள்ளப் பயன்படும்.

முதல் வகுப்பில், தமிழொலிகளை ஒலிப்பதற்காக பயிற்சி அளிக்கும் வகையில் பாடங்கள் அமைந்திருக்கின்றன. எனவே இரு மொழியக் குழந்தைகளின் ஒலிப்பு இடர்ப்பாடுகளுக்குத் தக்கவாறு படிப்பதற்குப் பயிற்சி அளிக்க வேண்டும். சில சொற்கள் வீட்டு மொழியிலும் தமிழ்ப் பேச்சு வழக்கிலும் ஒன்றாக இருந்தால் இரு மொழியக் குழந்தை தான் பேசுவது போன்றே எழுத்துத் தமிழ்ச் சொல்லையும் படிக்கும். அதாவது ஒன்றிரண்டு எழுத்துகளை விட்டு விட்டுப் படிக்கும். இதைக் களைவதற்குப் பயிற்சி தர வேண்டும்.

தமிழில் பேசும் போது ஒருவகை ஒலிப்பைப் பயன்படுத்தினாலும் படிக்கும் போது இன்னொரு வகையில் படிக்கும்படி இருமொழியக் குழந்தைக்குப் பயிற்சி அளிக்க வேண்டும்.

வீட்டிலும் வெளியிலும் தமிழைப் பயன்படுத்துகின்ற குழந்தைகளுக்கு இது எளிதில் கைவரலாம். ஆனால் பிற மொழியை வீட்டு மொழியாகப் பேசுகின்ற குழந்தை இன்னும் தமிழ்ப் பேச்சைச் சரிவரக் கைவரப் பெறாததாக இருக்கலாம். இதைக் குறைப்பதற்கு எடுத்துக் காட்டுகள் தரவேண்டும். எடுத்துக் காட்டாக

1. ‘ராமன்’ என்று பேசினாலும் ‘இராமன்’ என எழுதியதை இராமன் என்றே படிக்க வேண்டும்.

2. ‘குழந்தை’ எனும் சொல்லைக் ‘குழந்தெ’ எனச் சொன்னாலும் ‘குழந்தை’ என்றே படிக்க வேண்டும். (பெரும்பாலானவர்கள் மெய் + ஐ உயிர்மெய் எழுத்துகளை மெய் + எ என்றே படிப்பதைக் காணலாம்).

3. 'குடை' எனும் சொல்லைக் 'கொடை' என்று சொன்னாலும் குடை' என்றே படிக்க வேண்டும்.

4. 'அம்மா', 'மாமா', போன்ற சொற்களின் இறுதி உயிரை இரண்டு மாத்திரை அளவு ஒலித்துப் படிக்க வேண்டும் (பேசும் போது அதன் ஒலிப்பளவு குறைந்தாலும்).

5. 'அவன்', 'மகன்' போன்ற சொற்களின் 'ன்' நாம் பேசும் போது முழு னகரமாக ஒலிக்கா விட்டாலும் படிக்கும் போது அவன் என்பதை முழுக்க ஒலிக்க வேண்டும். கடையெழுத்து குறுக்க மாவதைத் தவிர்க்க வேண்டும்.

சொற்களை எழுத்துகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் பட்டியல் செய்து கொள்ளலாம். ஓரெழுத்துச் சொற்கள் முதலிலும் ஈரெழுத்துச் சொற்களைப் பின்னாலும் என்றவாறு படிக்கக் கொடுக்கலாம்.

## படித்தல் திறனில் காணும் குறைபாடுகள்

படித்தல் திறனில் காணும் குறைபாடுகளை இருபெரும் பிரிவு களால் பிரித்துணரலாம். (1) மொழியிலுள்ள ஒலிகளின் ஒலிப்புத் தன்மையைப் பற்றித் தெளிவாக மாணவர்களுக்கு எடுத்துரைக் காதது ; (2) ஒலி வடிவில் காணும் பண்பினை வரிவடிவில் தெளி வாக எடுத்தியம்பாதது. இவற்றால் ஏற்படும் குறைபாட்டினைக் களைய ஆசிரியர் நல்ல முறையில் இருமொழியக் குழந்தைகளுக்கு ஒலிப்புப் பயிற்சி அளிக்க வேண்டும்.

சொற்களுக்கெனத் தனிப் பொருண்மை இலக்கணப் பண்புகள் உள்ளன; ஆனால் அச்சொற்கள் வாக்கியங்களில் அமையும் போது அவை மாறுபட்டோ அல்லது மாறுபடாமலோ வரலாம்.

## பயிற்சிகள்

பாடங்களைக் கற்பிக்கும் போது பின்வரும் பயிற்சிகளைத் தரலாம்.

1. எழுத்துக் கூட்டிப் படிக்கப் பயிற்சி அளித்தல்.

2. தனித் தனிச் சொல்லாகப் படிப்பதை விட்டு விட்டுத் தொடர் தொடராகப் படிக்கப் பயிற்சி அளித்தல்.

3. வாய்க்குட் படிப்பதைக் கீழ் வகுப்புகளில் தவிர்த்து வாய்விட்டுப் படிக்கப் பயிற்சி அளித்தல்.

4. பாடங்களில் காணும் எழுத்துகள், ஒலிகள், சொற்கள், சொற்றொடர்கள் போன்றவற்றை அறிய வினாக்கள் உள்ள பயிற்சிகளைத் தருதல்.

5. பாடங்களில் கூறும் பொருளை/கருத்தை அறிந்து கொள்ளப் பயிற்சிகள் தரலாம்.

படித்தல் திறனை இருமொழியக் குழந்தைகளிடம் வளர்க்க ஆசிரியர் பின்வருபவற்றை மேற்கொள்ளலாம்.

1. குறில் நெடில் எழுத்துகளை ஒலிக்கும் போது அதன் மாத்திரை அளவு குறையாமல் ஒலித்துக் காட்ட வேண்டும்.

2. வீட்டுமொழியிலிருந்து வேறுபடும் தமிழ் ஒலிகளை அவை பிறக்கும் இடத்தைச் சுட்டிக்காட்டி ஒலித்துக் காட்ட வேண்டும்.

3. சொற்களில் எழுத்துகள் இடத்திற்கேற்ப ஒலிவேறு படுதலை நன்கு ஒலித்து உணரச் செய்ய வேண்டும்.

4. இருமொழியக் குழந்தைகளின் வீட்டுமொழி ஒலிகளுக்கும் தமிழ் மொழியிலுள்ள ஒலிகளுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகளைத் தெளிவாக உணரச் செய்ய வேண்டும்.

5. சொற்களை எழுத்துக் கூட்டிப் படிக்கும் போது கூட மெய் எழுத்துகளில் நிறுத்திப் படிப்பதைக் காட்ட வேண்டும் (கண்ணா – டி எனப் படிப்பதில்லை. கண் – ணாடி என்றே படிக்கிறோம்.)

படித்தல் மறைமுகமாக மாணவர்களுக்கு நினைவாற்றலையும் படைப்பாற்றலையும் வளர்க்கப் பயனுள்ளதாக அமைந்திருக்க வேண்டும்.

**ஆசிரியர் நினைவிலிருத்த வேண்டிய சில குறிப்புகள்.**

1. படித்தலின் வகைகளை அறிந்திருக்க வேண்டும்.

2. படித்தலால் ஏற்படும் நன்மைகளை அறிந்திருக்க வேண்டும்.

3. இருமொழியக் குழந்தைகளின் படித்தல் திறனில் காணும் குறைபாடுகளை அறிந்திருக்க வேண்டும்.

4. இருமொழியக் குழந்தைகளின் படித்தல் திறனை வளர்க்கத் தேவையான பயிற்சிகளை அறிந்திருக்க வேண்டும்.

5. இருமொழியக் குழந்தைகள் படிக்கும் போது ஏற்படுகின்ற பிழைகளைத் தொகுக்கவும்.

# 15. எழுதுதல் திறன் வளர்த்தல்

மொழிக்கு இருவடிவங்கள் உள்ளன. அவை ஒலிவடிவம் வரிவடிவம் என்பன. இவற்றில் வரிவடிவம் எழுதுதல், படித்தல் திறன்களுக்கு அடிப்படையாகும். படித்தல் திறனுக்கு வரிவடிவத்தை உணர்ந்து கொண்டால் மட்டும்போதும். ஆனால் எழுதுதல் திறனுக்கு வரிவடிவத்தை உணர்வதோடு அதை வரைவதற்குரிய திறனும் வேண்டும்.

## எழுதும்முன்

வரிவடிவம் கற்பிக்கும் முன்பு மாணவரின் எழுதும் உறுப்புகளாகிய கை, விரல், தசைநார்கள் முதலியவற்றைத் தக்க முறையில் பழக்க வேண்டும். நேர்கோடு, படுக்கைக் கோடு, சாய்வுக் கோடு, அரைவட்டம், வட்டம் போன்றவற்றை வரையச் செய்ய வேண்டும். புளியங்கொட்டை, சிறுகற்கள், குச்சிகள் போன்றவற்றால் வரிவடிவங்களை உருவாக்கி விளையாடச் செய்யலாம். பிறகு ஆசிரியர் எழுதி அவற்றின் மீது மாணவரை எழுதப் பயிற்சி அளிக்க வேண்டும்.

## பயிற்சி

பயிற்சி, பார்த்து எழுதுதல், கேட்டு எழுதுதல் என இரு வகைப்படும். பார்த்து எழுதும் பயிற்சியில் தொடக்கத்தில் பயிற்சி ஏட்டில் முதல் வரியில் தனித்தனி எழுத்துகளாகவும் பின்னர் ஓரெழுத்து ஒரு மொழி, ஈரெழுத்து ஒருமொழி, மூவெழுத்து ஒருமொழி என்றவாறும் அவற்றின் பின் சிறுதொடர், பெரும் தொடர் என்றவாறும் அவற்றின் பின் வாக்கியங்கள் பெரிய வாக்கியங்கள் என்றவாறும் பார்த்து எழுதும் பயிற்சியை அமைக்க வேண்டும். அவற்றைப் பார்த்து மற்றவரிகளில் எழுதுமாறு செய்ய வேண்டும். அப்படி எழுதும் போது மேல்வரியிலிருந்து எழுதிக் கொண்டு வராமல் கீழிருந்து எழுதுமாறு செய்தால் எழுத்து நன்கு அமையும். ஒவ்வொரு வரியில் எழுதும் போதும் ஆசிரியர் எழுதியதையே பார்த்து எழுதச் செய்ய வேண்டும்.

இப்பயிற்சிக்குப் பின்பு பாடநூலைப் பார்த்து எழுதும் பயிற்சியைத் தொடங்கலாம். நடத்தப்பட்ட உரைநடைப் பாடத்தின் ஒரு பகுதியைத் தினமும் பயிற்சி ஏட்டில் எழுதிவரச் செய்ய

வேண்டும். எழுதும் போது மாணவர் சொல்லிக் கொண்டே எழுதினால் கையெழுத்து திருந்துவதுடன் பிழை நீக்கி எழுதவும் படிக்கவும் பொருள் புரிந்து கொள்ளவும்பயிற்சி பெறுவர்.

**எழுதும் முறை**

1. எழுத்துகளைத் தனித்தனியாக எழுத வேண்டும்.

2. எழுத்துக்கு எழுத்து அதிக இடைவெளி இருத்தல் கூடாது. ஆனால் சொல்லுக்குச் சொல் இடைவெளி விட வேண்டும்.

3. எழுத்தின் வடிவம் சிறிதும் பெரிதுமாய் இருத்தல் கூடாது.

4. அதிகமான நீட்டல், குறுக்கல், தேவையில்லாத சுழிகள் ஆகியவை நீக்கப் படல் வேண்டும்.

5. வரி கோணாமல் இருக்க வேண்டும்.

ஒரு சில இருமொழியக் குழந்தைகள் தொடக்க நிலைப் பள்ளி யின் பிந்திய வகுப்புகளில் சேரும் பொழுது தங்கள் வீட்டு மொழி யின் வரிவடிவ அமைப்பைத் தெரிந்து கொண்டிருக்கக் கூடும். இக் குழந்தைகள் தமிழ் வரிவடிவத்தைக் கற்கும் போது தங்கள் வீட்டு மொழியின் வரிவடிவ இடையீடு ஏற்படலாம். (பார்க்க **மொழி இடையீடு** என்னும் இயல்). இந்த இடையீடுகளை ஆசிரியர் அடையாளம் கண்டு கொண்டு அவற்றை நீக்கப் பின்வருமாறு செய்ய லாம். மாணவனின் கையைப் பிடித்துக் கொண்டு எழுதுவித்தல், மாணவனைத் தாம் எழுதிய பெரிய எழுத்தின் மேல் பலமுறை எழுத வைத்தல், மாணவன் எழுதியதற்கும் ஆசிரியர் எழுதியதற்கும் இடையேயுள்ள பிழையைச் சுட்டிக் காட்டி நீக்குதல், வரிவடிவம் எழுதும் போது ஏற்படுகிற கை அசைவைச் சுட்டிக் காட்டுதல், எழுத்துகளை பார்த்து எழுதுவித்தல். பொதுவாகவே, ஆசிரியர்கள் ஒவ்வொரு மாணவனும் ஒவ்வொரு எழுத்தையும் எழுதும் போது எவ்வகை அசைவைக் கொண்டிருக்கிறான் என்று கவனித்து அவ் வசைவு தமிழ் வரிவடிவ அசைவிற்கு மாறாக இருக்குமென்றால் அதை நீக்க வேண்டும்.

**கேட்டெழுதும் பயிற்சி**

ஆசிரியர் கூறுவதைக் கேட்டு ஏட்டில் எழுதும் பயிற்சி கேட் டெழுதும் பயிற்சி எனப்படும். இப்பயிற்சியால் மற்றவர் கூறுவதைக் கேட்டல், கேட்டவற்றை மனத்தில் வைத்தல், மீண்டும் நினை விற்குக் கொண்டுவந்து எழுதுதல்' ஆகிய திறன்கள் வளரும். கேட்ட ஒலியையும் முன் கூட்டியே அறிந்துள்ள எழுத்தையும் இணைத்து

எழுதப் பயிற்சி தரும். மேலும், ஒலிப்பு வேறாக இருந்த போதும் அதற்குரிய எழுத்து ஒன்றே என்ற அறிவையும் நினைவு நிலையிலே தரும்.

எல்லா வரிவடிவங்களையும் அவற்றின் ஒலி வேறுபாடுகளையும் மாணவர் உணர்ந்திருந்தால்தான் அவர்களால் சரியாகக் கேட்டு எழுத முடியும். ஆசிரியரும் ஒலிப்புப் பிழையின்றித் தெளிவாகச் சொல்ல வேண்டும். ஆனால் தமிழில் ஒரு சில எழுத்துகளை நாம் அவற்றிற்குரிய ஒலிப்போடு ஒலிப்பதில்லை. எடுத்துக்காட்டாக, தந்நகரத்தையும், நன்னகரத்தையும் கூறலாம். அவற்றை போன்று இடையின ரகரத்தையும் வல்லின ற கரத்தையும் கூறலாம். மேலும், ழகர, ளகர, வேற்றுமை கூடப் பலரின் தமிழ்ப் பேச்சில், ஒலிப்பில் வேறுபட்டுக் காணப்படா. இவ்வாறு வேறுபட்டுக் காணப்படா விட்டாலும் பொருள் வேற்றுமைக்காக இவ்வெழுத்துகள் தமிழில் பயன்படுகின்றன, எடுத்துக் காட்டாக, வெந்நீர், பன்னீர், அரம், அறம், கரை, கறை, கலை, களை, கழை.

ஒரு சில ஆசிரியர்களுக்கு இவ்வெழுத்துகளை வேறுபடுத்தி ஒலிக்கிற திறன் இயல்பாகவே அமைகிறது. பலருக்கு இத்திறனை முயன்று பெற வேண்டியிருக்கிறது. இன்னும் பலருக்கோ இத்திறன் வராமலேயே இருக்கிறது. சொற்களை எழுதும் போது, இவ்வெழுத்துகள் அச்சொற்களுக்குப் பொருள் வேற்றுமை தருவதால் மாணவர்களுக்குச் சரியான எழுத்துக் கூட்டலைக் கற்றுத் தர வேண்டும். மேற்கூறிய ஒலிக் கோவைகளுக்குள் பல ஆசிரியருடைய பேச்சில் வேறுபாடு இல்லாததால் இருமொழியக் குழந்தைகள் மறம் என்று ஆசிரியர் கூறும்போது மரம் என்றும் காலை என்பதை காளை என்றும் கழை என்பதை களை என்றும் வெந்நீர் என்பதை வென்னீர் என்றும் எழுதலாம். இவ்வாறு எழுத்தில் வேறுபடுகின்ற சொற்களைக் கற்பிக்கும் போது அச்சொற்களின் பொருளையும் மனத்திலிருத்த வேண்டும். வேறு பல சொற்களில் குறில் நெடில் எழுத்துகளை கூட்டி எழுதுவதில் குழப்பம் ஏற்படலாம். இதைத் தவிர்ப்பதற்கு அகரம், ஆகாரம், இகரம், ஈகாரம் என்றவாறும் அனா ஆவன்னா, இனா, ஈயன்னா என்றவாறும் பயன்படுகின்ற எழுத்து முறை ஒலிப்பை சொல்லின் எழுத்துகளைக் கூட்டப் பயன்படுத்தலாம். அதாவது, பாச்சா என்ற சொல்லை எழுத்துக் கூட்டுவதற்குப் பாவன்னா, இச்சன்னா, சாவன்னா என்று எழுத்துக் கூட்டிச் சொல்லலாம், சொல்லியவாறே எழுதலாம். லகர ளகர ழகர வேறுபாடுகளை எழுத்தில் கொண்டு வருவதற்கு ஒரு சுழி லகரம் இரண்டு சுழி ளகரம் சிறப்பு ழகரம் என்ற வாய்பாடு வழக்கத்தில்

இருக்கிறது. ரகர றகர வேறுபாடுகளுக்கும் மெல்லின எழுத்துகளின் வேறுபாடுகளுக்கும் கூடத் தனித்தனி வாய்பாடுகள் வழக்கத்தில் இருக்கின்றன.

இவற்றையும் சரியான ஒலிப்புகளையும், ஒலிகளுக்குள்ள வேற்றுமைகளையும் எழுத்துக் கூட்டலுக்காகக் கற்பிப்பதற்கு பயன்படுத்துவதில் தவறு இல்லை. ஆனால், அடைய வேண்டிய குறிக்கோள் இவ்வுதவிகள் இல்லாமலேயே, ஒலிப்பளவிலேயே சரியான ஒலிப்புகளையும், ஒலிகளுக்குள்ள வேற்றுமைகளையும் மற்ற எந்த உதவியும் இல்லாது கைவரப் பெறுவதேயாகும். அதனால் மேற்கூறிய வழக்கத்தில் இருப்பவற்றையே முழுக்க முழுக்க பயன்படுத்தக் கூடாது. ஒரு வகுப்பிலிருந்து இன்னொரு வகுப்பிற்கு வரவர மாணவர்கள் அவ்வுதவிகளை உதறிவிட்டு ஒலிப்பையே சார்ந்து நிற்கும் நிலைக்கு வரவேண்டும்.

இப்பயிற்சிக்கு ஏற்கனவே கற்பித்த உரைநடைப் பகுதியைத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஓரளவு பயிற்சி கொடுத்த பின் புதிய பகுதியைக் கொடுக்கலாம்.

ஆசிரியர் ஒரு தொடரை நிறையத் தடவை திருப்பித் திரும்பிக் கூறுதல் கூடாது. அப்படிச் செய்தால் மாணவரின் கேட்டுணரும் பழக்கம் தடைபடும். தொடர் முழுவதும் கேட்ட பின்னரே எழுதத் தொடங்க வேண்டும் எனத் தொடக்கத்திலேயே மாணவருக்குச் சொல்லிவிட வேண்டும். இருப்பினும் மாணவர் பாதி எழுதிக் கொண்டிருக்கும் நிலையில் மீண்டும் ஒரு முறை கூறலாம். அது மட்டுமல்லாது, தொடக்க நிலையில் தொடர்களைப் பகுதி பகுதியாகக் கூறுவது நல்லது. தொடக்க நிலையின் இறுதியில் முழுத் தொடரையும் ஒலித்த பின்பு எழுதச் செய்ய வேண்டும்.

### பிற முயற்சிகள்

மாணவரிடம் நல்ல கையெழுத்து எழுதும் பழக்கம் வளர நன்றாக எழுதும் மாணவரை ஆசிரியர் வகுப்பறையிலேயே பாராட்ட வேண்டும். கையெழுத்துப் போட்டிகள் நடத்திப் பரிசு கொடுக்கலாம். தேர்வுகளில் கையெழுத்துக்குத் தனி மதிப்பெண் வழங்கலாம்.

### தாமே எழுதுதல்

முதல் இரண்டு வகுப்புகளில் மாணவர் ஓரளவு சொற்களையும் அவற்றை எழுதவும் அறிந்து கொள்வர். எனவே, தாமே எழுதும் பழக்கத்தை மாணவரிடம் ஏற்படுத்த மூன்றாம் வகுப்பில் தொடங்கலாம். பல இரு மொழியக் குழந்தைகளுக்குத் தாமே எழுதும்

பழக்கம் கைவருவது கடினமாகத் தோன்றலாம். இதை முன் கூட்டியே ஆசிரியர் எதிர்பார்த்து அவர்களின் மேல் தனிக் கவனம் செலுத்தி ஊக்குவிக்க வேண்டும். 1. படம் பார்த்துக் கதை எழுதுதல் 2. சிறு கடிதம் எழுதுதல், கட்டுரை எழுதுதல் போன்றவற்றைத் தமிழை வீட்டுமொழியாகக் கொண்ட குழந்தைகளை விட அதிக மாகத் தரவேண்டும். தாமே எழுதும் பழக்கத்தைத் தாமே படித்து உணர்கிற திறனோடு சேர்த்து வளர்க்க வேண்டும். பொதுவாகச் சொன்னால், தாமே படித்து உணர்கிற திறன் வளரவளரத் தாமே எழுதுகிற திறனும் வளருவதற்கு ஏது உண்டு. இரு மொழியக் குழந்தைகளுக்குத் தமிழில் தாமே படித்துணர்கிற திறனை ஊக்கு வித்தால் தாமே எழுதுகிற திறன் வளர்வதற்கு வாய்ப்பு உண்டு.

முதலில் சிறிய தலைப்புகள் கொடுத்து அவற்றைப் பற்றி எழுதச் சொல்ல வேண்டும். ஐந்து தொடர்கள் எழுதினாலே போதும். தலைப்புகள் விலங்குகள், பறவைகள், வீடு, ஊர் பற்றி இருக்கலாம். தாமே எழுதும் திறனை வளர்க்க நான்காம் ஐந்தாம் வகுப்புகளில் கடிதங்கள், கட்டுரைகள் எழுதச் செய்யலாம்.

**பிழைகள்**

மாணவர்கள் தாமே எழுதும் போது பல்வேறு விதமான பிழைகளைச் செய்வர். (பார்க்க : **பிழை தொகுத்தலும் நீக்லும்**)

1. ஒலி வேறுபாடுகளைத் தெளிவாக உணராததால் சொற்களைத் தவறாக எழுதுவர். வழி — வளி/வலி.

2. வரிவடிவ வேறுபாடு அறியாமையால் ஓர் எழுத்திற்கு பதில் மற்றொரு எழுத்தை எழுதுவர். ஐயா — ஜயா

3. கவனக் குறைவால் மெய்யெழுத்துக்குப் புள்ளியிடாமலும் துணை எழுத்தை விட்டு விட்டும் சில எழுத்துகளுக்குக் கீழ்கோடு இடாமலும் எழுதுவர். பலர்—பலா, கோடி—கேடி, ஏடு—எடு.

4. பேசுவதைப் போலவே சொற்களின் இறுதியில் வரும் மெய் யெழுத்துகளை விட்டு விட்டு எழுதுவர். அவள் போனாள் — அவ போனா, வருகிறான் — வர்ரான்.

5. தாமே முன்னரே அறிந்த வீட்டில் பேசும் கொச்சைச் சொற்களை யும், வீட்டுமொழிச் சொற்களையும், தமிழ் கிளைமொழிச் சொற் களையும் எழுதுவர். (பார்க்க : **தமிழின் இருவழக்கு நிலை**).

எடுத்துக் காட்டாக

| | |
|---|---|
| குருத | (குதிரை) |
| மொக்க | (பெரிய) |
| பனி | (காய்ச்சல்) |
| பூச்ச | (பூனை) |
| மாயி | (அம்மா) |

மேலும் வீட்டில் பேசுவது போலவே தொடர்களையும் அமைப்பர்.

எடுத்துக் காட்டாக

தங்கை போனாள் — தங்கை போச்சு.

இவ்வாறான பிழைகளை மாணவர் செய்யாதவாறு தடுத்தும், அப்படிச் செய்யும் போது அவற்றைத் திருத்தியும் நன்கும் எழுதும் பயிற்சி அளிக்க வேண்டும்.

**நிறுத்தக் குறிகள்**

நிறுத்தக் குறிகள் பொதுவாக எழுவாய் செயப்படு பொருள், பயனிலை, அடைச் சொற்கள், தொடர்களின் பொருள், ஒரு தொடர் இன்னொரு தொடரோடு இணையும் போது ஏற்படும் பொருள் மற்றும் புணர்ச்சி மாற்றங்கள் முதலியவற்றின் அடிப் படையிலேயே தமிழில் பயன்படுகின்றன. இருமொழியக் குழந்தைகள் மேற்சொன்ன இலக்கண இயைபுகளில் குறை உடையவர்களாகக் காணப்படலாம். ஆகவே நிறுத்தக் குறிகளைப் பயன்படுத்தக் கற்றுத் தருவது என்பது இருமொழியக் குழந்தைகளின் தமிழ் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவும்.

நிறுத்தக் குறிகளைக் கற்றுத் தந்து, அவை வருமிடங்களை விளக்கிப் பின்பு குறியீடுகள் ஏதும் இல்லாத பத்தியைக் கொடுத்து மாணவரைத் தகுந்த இடங்களில் குறியிடச் செய்து பயிற்சியளிக்க வேண்டும். இதை நான்காம் வகுப்பில் தொடங்கலாம். மேலும் பாடப் பகுதியில் வரும் பத்திகளை ஆசிரியர் வாய்விட்டுப் படித்துப் பிறகு மாணவரை நிறுத்தக் குறிகளுக்குத் தக்கவாறு படிக்கும் படி செய்து, பயிற்சியளிக்க வேண்டும்.

**ஆசிரியர் நினைவிலிருத்த வேண்டிய சில குறிப்புகள்**

1. எழுதுவதற்கு முன் என்னென்ன பயிற்சியளிக்க வேண்டும்.

2. எழுதும் முறைகளைப் பற்றி அறிந்திருக்க வேண்டும்.

3. கேட்டெழுதும் பயிற்சி பற்றி அறிந்திருக்க வேண்டும்.

4. எழுதுதல் திறனை வளர்க்க வேண்டிய பிற முயற்சிகளை அறிந்திருக்க வேண்டும்.

5. மாணவர்கள் தாமே எழுதும் போது செய்யக் கூடிய பிழைகளையும் நிறுத்தக் குறிகளைப் பயன்படுத்தவும் அறிந்திருக்க வேண்டும்.

## 16. ஒலிகளையும், வரிவடிவங்களையும் கற்பித்தல்

**தமிழொலிகள்**

தமிழில் பேச்சுத் தமிழ் மற்றும் எழுத்துத் தமிழ் என்று இரு வழக்குகள் உண்டு. இவற்றைப் பற்றி விரிவாக ஐந்தாம் இயலில் பார்த்தோம். சுருக்கமாகச் சொல்லப் போனால் இரண்டிற்கும் இடையே ஒற்றுமையும் உண்டு; வேற்றுமையும் உண்டு. எடுத்துக் காட்டாக பேச்சு வழக்கில் 'ழகர' ஒலியும்; 'ள' கர ஒலியும் ஒன்றாக ஒலிக்கப் பெறுகின்றன. ஆனால் அவ்வொலிகள் எழுத்து வழக்கில் ஒவ்வொன்றும் தனித்தனியாகத் தெளிவாக ஒலிக்கப்படுகின்றன எழுதப்படுகின்றன. இத்தகைய வேறுபாடுகளை மாணவர்கட்குத் தெளிவாக எடுத்துக் கூற வேண்டும். தமிழிலுள்ள 'க', 'ச', 'ட'; 'த', 'ப' என்னும் வல்லின எழுத்துகள் இடத்திற்கு இடம் ஒலி மாறுவதை முன்பே பார்த்தோம். (பார்க்க : **தமிழும் தெலுங்கும்**)

மாணவர்களின் வீட்டுமொழியில் காணும் ஒலிகளுக்கும் தமிழ் ஒலிகளுக்கும் உள்ள ஒற்றுமைகளையும், வேற்றுமைகளையும், செய் முறைப் பயிற்சியின் மூலம் விளக்கிக் கூறலாம். விளக்கங்களுடன் கூடிய பயிற்சிகளையும் தயாரிக்கலாம்.

**வரிவடிவங்கள்**

தமிழிலுள்ள எழுத்துகளை அவற்றின் வரிவடிவ அமைப்பு ஒற்றுமையின் அடிப்படையில் பத்துக் குழுக்களாகப் பகுத்துணரலாம். கீழ்க்காணும் அட்டவணையில் இப்பத்து குழுக்களைக் காணலாம்.

1. ட, ப, ய, ம, ழ
2. ா, ஈ, ர, ச, க, த
3. ந, ங
4. அ, ஆ, இ
5. எ, ஏ, ரு, ே+,
6. ெ+, வ, ல
7. ள, ன, ண, ை
8. ஒ, ஓ, ஔ

9. உ, ஊ,

10. ற, ஐ,

வேற்றுமொழிச் சொற்களைத் தமிழில் எழுதுவதற்காக உள்ள கிரந்த எழுத்துகள் இன்னொரு குழுவாகும்.

11. ஸ, ஹ, ஷ, ஜ, க்ஷ, ஸ்ரீ

வரிவடிவ அமைப்பில் சிறு சிறு மாற்றங்களைச் செய்வதால் பல ஒலிகளின் எழுத்துகளைப் பெறலாம். வரிவடிவ அமைப்பில் உள்ள ஒற்றுமையைப் பயன்படுத்தி நாம் கற்பித்தால் குழந்தைகள் விரைவில் எழுத்துகளைக் கற்றுக் கொள்ளுவதுடன், சில சொற்களையும் உடன் கற்றுக் கொள்ள இயலும். கற்கும் காலத்தை வீணாக்காமல் ஒரே சமயத்தில் இரு செயல்களை விரைவாகக் கற்றுக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது. எளிமையுடன் கற்கும் ஆர்வத்தை ஏற்படுத்தலாம். இவ்வாறு சில சொற்களைக் கற்று அச்சொற்களைக் கொண்டே சிறு சிறு வாக்கியங்களையும் கற்றுக்கொள்ளும் சூழ்நிலையும் மாணவர்கள் அடைவார்கள். இதனால் எழுதுந் திறன் தொடர்ச்சியாக வளர்ச்சி பெறுவதைக் காணலாம். சான்றாக, முதற் குழுவிலுள்ள வரிவடிவங்களைக் கற்பித்த உடனே சிறு சிறு சொற்களைக் கற்பிக்கலாம்.

ட, ப, ய, ம, ழ

படம்; பட்டம், மடம், மட்டம்

பயம்; மயம், பழம்

இதே போன்று இரண்டாம் குழுவிலுள்ள வரிவடிவங்களைக் கற்பித்த உடன், சில சொற்களைக் கற்பிக்கலாம்.

ா, ஈ, ர, ச, க, த

ஈ, ஈரம், பார், சரம், தாகம், கபம்

காகம், பாசம், பக்கம், மச்சம்

ஈழம், ஈயம், தா, சாரம் போன்றவை

| | |
|---|---|
| படம் பார் | ஈச்சம் பழம் தா |
| பட்டம் பார் | மரம் பார் |
| ஈ பார் | ஈழம் பார் |
| காய் தா | காகம் பார் |

சிறு சொற்களையும் அச்சொற்களினால் ஏற்படும் வாக்கியங் களையும் கற்றுக் கொடுப்பதுடன் அவற்றின் பொருளையும் கற்றுக் கொடுக்கலாம். இருமொழியக் குழந்தைகள் அவர்களாகவே பல புதிய சொற்களையும் புதிய வாக்கியங்களையும் உருவாக்க வழி முறை ஏற்படுத்தலாம். இதனால் மாணவர்களின் எழுத்தாற்றல் விரைவாகவும், தெளிவாகவும் வளர்ச்சி பெறும்.

முதல் வகுப்பு முதல் மூன்றாம் வகுப் ‡ முடிய உள்ள மாணவர்களுக்குப் படிப்படியாக வரிவடிவப் பயிற்சியளிக்க வேண்டும். 1. எழுத்தையும் அதற்குரிய இடத்திற்கேற்ற ஒலி வேறுபாட்டையும் கண்ணால் கண்டும் காதால் கேட்டும் அறிவால் உணரச் செய்ய வேண்டும். 2. வாயால் சொல்லியும் கையால் எழுதியும் கற்கச் செய்ய வேண்டும். 3. உயிர், மெய், உயிர்மெய் எழுத்துகளை நெடுங்கணக்கு வரிசைப்படுத்தப் பயிற்சி அளிக்க வேண்டும். 4. நெடுங்கணக்கு வரிசைப்படி ஒலிக்கப் பயிற்சி அளிக்க வேண்டும். 5. வரிவடிவங்களை தனித்தும், சொற்களில் அமைத் தும் அவற்றின் வடிவம் சிதையாது தெளிவாக எழுதும் பயிற்சியளிக்க வேண்டும். 6. அழகு குன்றாது விரைந்தெழுதப் பயிற்சியளிக்க வேண்டும். 7. முதல் மூன்று வகுப்புகளிலும் எழுத்துக் கூட்டி ஒலித்துக் கொண்டே எழுதப் பயிற்சி அளிக்க வேண்டும். 8. ஆசிரி யர் கவனமுடன் எழுத்துகளையும் சொற்களையும் முன்மாதிரியாக ஒலிக்க வேண்டும், எழுத வேண்டும்.

இப்பயிற்சிகள் எல்லாம் இருமொழியக் குழைந்தைகளுக்கு மிகவும் பயன் தரும்.

ஆசிரியர்கள் சொல்வதைக் கேட்டும் ஆசிரியர்கள் எழுதுவதைப் பார்த்தும் மாணவர்கள் வரிவடிவப் பயிற்சியைப் பெறுவதால், இப்பயிற்சிகளால் கேட்டல் திறனும், பேசுதல் திறனும் வளர வழியுண்டு.

உரிய ஒலியுடன் எழுத்துகள் சொற்களில் வருவதைப் படித்துக் கருத்துணர் திறன் பெறுவதால் படித்தல் திறனும் மிகுகின்றது.

இருமொழியக் குழந்தைகள் வீட்டுமொழி வரிவடித்தை அறிந் திருந்தால் அதன் இடையீடு இருக்கும். அதைக் களையவும் பயிற்சி கள் அளிக்க வேண்டும். (பார்க்க : **மொழி இடையீடு**)

பின்வரும் தமிழ்ச் சொற்களைப் பாருங்கள் :

மரம், மறம், கரை, கறை, நாடு, மனம் இருமொழியக் குழந்தைகள் 'மரத்'திற்குப் பதில் 'மறம்' என்றும் 'கரை'க்குப் பதில் 'கறை' என்றும் 'நாடு' என்பதற்கு 'னாடு' என்றும் 'மனம்'

என்பதற்குப் பதில் 'மநம்' என்றும் எழுதலாம். அவ்வாறு அவர்கள் எழுதுவதில் இச்சொற்களின் ஒலிப்பை மட்டும் கவனித்தோம் என்றால் தவறு இருக்காது. ஆனால் இவற்றை எழுதும் பொழுது மரம், மறம், கரை, கறை, நாடு, மனம் என்றே எழுதுவது மரபு. இதை மனத்தில் கொள்ள பயிற்சிகள் தரவேண்டும். ஒன்று பொருள் வேற்றுமையைச் சுட்டிக் காட்டிப் பயிற்சி தருவது. இன்னொன்று பார்த்துப் பார்த்து சொல்லின் எழுத்துக் கூட்டலை மனத்திலிருத்து வது அதாவது, பார்வை வழியாக மனப்பாடம் செய்வது, மூன்றாவ தாக, கேட்டெழுத்துப் பயிற்சியில் இச்சொற்களைப் பொருள் தரும் வாக்கியங்களிலோ, இணை இணையாகத் தருவதாலோ இவ் வேற்றுமையை மனத்திலிருத்த முயலலாம். இவ்வரிவடிவப் பிழை தமிழை வீட்டுமொழியாகக் கொண்ட மாணவர்களாலும் செய்யப் படுகின்றது. இருப்பினும் இருமொழியக் குழந்தைகளிடத்தில் அதிக அளவு காணப்படுகிறது.

பிறகு குறிப்பிட்ட வரிவடிவப் பிழைகளுக்குத் **தமிழும் தெலுங்கும், தமிழும் கன்னடமும், தமிழும் மலையாளமும், தமிழும் சௌராட்டிரமும், தமிழும் உருதுவும், தமிழும் மாரத்தியும்** எனும் இயல்களைப் பார்க்கவும்.

**மாதிரிப் பயிற்சிப் பட்டியல்**

1. **கீழ்க்காணும் சொற்களில்**

   ட 'ப' எனும் எழுத்துகளைக் குறியிடுக.

   பழம், படம், பட்டம்

2. **கொடுத்துள்ளவற்றை உரக்கப் படித்து மூன்று முறை எழுதுக**

   படி ———— ———— ————

   ஈயம் ———— ———— ————

   ஆழம் ———— ———— ————

   ஐந்து ———— ———— ————

3. சொற்களை முழுமையாக்கக் கீழே கொடுக்கப் பட்டுள்ள எழுத்துகளிலிருந்து சரியான எழுத்துகளைத் தேர்ந்தெடுத்துக் கோடிட்ட இடங்களை நிரப்புக.

   **ன், ல், ழ்**

   கீ —　　　　　　மே —

   நா —

4. 'வெட்கம்' என்ற சொல்லின் இரண்டாவது எழுத்து என்ன என்பதை எழுதி ஒலித்துக் காட்டுக.

5. கீழே கொடுக்கப்பட்டுள்ள எழுத்தைப் போன்ற எழுத்தைக் கட்டத்திலுள்ளவற்றிலிருந்து தேர்ந்தெடுத்து வட்டமிடுக.

ஈ

| | |
|---|---|
| ர | ஈ |

6. மாதிரியில் கொடுத்துள்ளது போன்று கோடிட்ட இடங்களை நிரப்புக.

ச் + ஏ = சே
க் + ஐ = —
ப் + இ = —
ட் + உ = —
ன் + ஓ = —

7. சொற்களை முழுமையாக்க வலது பக்கத்தில் கொடுத்துள்ள பொருளை நோக்கிச் சரியான எழுத்துகளைத் தேர்ந்தெடுத்துக் கோடிட்ட இடங்களை நிரப்புக.

(1) ஆ — 'நதி'
(2) அ — சி 'உணவுப் பொருள்'
(3) யா — 'இசைக் கருவி'

**ஆசிரியர் நினைவிலிருத்த வேண்டிய சில குறிப்புகள்.**

1. தமிழின் ஒலிகளைப் பற்றி அறிந்திருக்க வேண்டும்.

2. தமிழ் ஒலிகளுக்கேற்ற வரிவடிவங்களைப் பற்றி அறிந்திருக்க வேண்டும்.

3. வரிவடிவ அமைப்பு ஒற்றுமையின் அடிப்படையில் ஒரு வரிவடிவத்திலிருந்து இன்னொரு வரிவடிவத்தை உருவாக்க அறிந்திருக்க வேண்டும்.

4. இருமொழியக் குழந்தைகளுக்கு வரிவடிவப் பயிற்சி அளிக்க அறிந்திருக்க வேண்டும்.

5. இருமொழியக் குழந்தைகளுக்கு வரிவடிவங்களில் ஏற்படுகின்ற இடர்ப்பாடுகளைத் தொகுக்கவும்.

## 17. சொற்களைக் கற்பித்தல்

ஒருவர் அறிந்திருக்கும் சொற்களின் அளவைப் பொறுத்தே அவரின் மொழியறிவு மதிப்பிடப்படுகின்றது. வெறும் சொற்களை அறிந்திருப்பதோடு நேரத்திற்கும் இடத்திற்கும் தகுந்தாற் போல அவற்றைப் பயன்படுத்துகின்ற அறிவையும் பெற்றிருப்பது இன்னும் சிறப்பைத் தரும் இதற்கு முதற்படியாவது தொடக்க நிலைப்பள்ளியே

மாணவர் பள்ளிக்கு வரும்போது நிறையச் சொற்களை அறிந்து வருவர். படிக்கும் திறனையும் எழுதும் திறனையும் கீழ் வகுப்புகளில் கற்பிக்கும் போதே சொற்களையும் கற்பித்து மாணவர்களின் சொற் கோவையைப் பெருக்க வழி செய்ய வேண்டும்.

இருமொழியக் குழந்தைகள் முதல் வகுப்பிற்கு வரும் போது முன்னர் கூறியது போலத் தமிழ்ச் சொற்களை அறிந்தும் அறியாமலும் பள்ளிக்கு வரலாம். இக் குழந்தைகளுக்குத் தமிழ்ச் சொற்கள் தெரியாத நிலையில் ஆசிரியருக்கு அக்குழந்தைகளின் வீட்டு மொழி தெரிந்திருந்தால் நல்லது. முழுவதுமாகத் தெரிந்திராவிட்டாலும் ஓரளவு அடிப்படைச் சொற்களையாவது தெரிந்து கொள்வது நல்லது.

ஒரு சில பகுதிகளில், குறிப்பாக எல்லையோரப் பகுதிகளில் நிறைய பொருள்களுக்கும் வினைகளுக்கும் தமிழ்ச் சொற்களைப் பள்ளிக்கு வரும்போது இருமொழியக் குழந்தைகள் அறிந்து கொண்டு வருவதில்லை. அவர்களுக்குச் சொற்களைக் கற்பிக்கும் போது ஆசிரியர் அவர்களின் வீட்டுமொழியில் பொருளைக் கூறவேண்டியது வரும். அவர்களிடம் கவனம் செலுத்தி மற்ற மாணவர்களின் தமிழ் மொழி அறிவு நிலைக்குக் கொண்டு வரவேண்டும் தமிழ் அறிந்த குழந்தைகளோடு தமிழில் கலந்துரையாடி விளையாட வைக்க வேண்டும். மொழி தெரியாத காரணத்தால் ஒதுங்கி விடுகின்ற குழந்தைகளையும் நாம் பள்ளியில் பார்க்கலாம். அது மொழி வளர்ச்சியைத் தடை செய்யும் என்பதால் தமிழ்ச் சொற்களைக் கற்றுக் கொள்ள நிறைய வாய்ப்பளிக்க வேண்டும்.

இதில் ஆசிரியர் இரண்டு பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டியது வரும். தமிழே அறியாத குழந்தைகளுக்குத் தமிழ்ச் சொற்களை வகுப்பில் கற்பிக்கும் போது அது எழுத்து வழக்குச் சொற்களாகத்

தான் இருக்கும். அச்சொற்களை-பாடநூலில் வரும் அச்சொற்களை மட்டும் கற்பிப்பதோடு நிறுத்தி விடக் கூடாது. வகுப்பறையிலும் வகுப்பறைக்கு வெளியேயும் பேசுவதற்கேற்ற பேச்சுத் தமிழ்ச் சொற்களையும் கற்பிக்க வேண்டும். சான்றாக, வகுப்பறையில் நிறைய, மிக நன்றாக, போன்ற சொற்கள் வரும் போது பேச்சு வழக்கில் ரொம்ப, நல்லா, எனப் பேச வேண்டிய நிலையை நினைவிலி நிலையிலேயே அவர்கள் கற்றுக் கொள்ளுமாறு செய்ய வேண்டும். அதாவது. எழுத்துத் தமிழ் இப்படி இருக்கின்றது எனக் குறிப்பிடத் தேவையில்லை.

'அன்னை', 'பெற்றோர்', போன்ற எழுத்து வழக்குச் சொற்களை எழுத்து வழக்கில் பயன்படுத்தக் கற்பித்தால் சிறப்பாக அமையும். பேசுவதற்கென இவற்றிற்கு இணையான சொற்களைப் பயன்படுத்தச் செய்ய வேண்டும். புதிதாகக் கற்க வருகின்ற குழந்தையை அச்சப்படுத்தி விடக் கூடாது.

மேலும் இருமொழியக் குழந்தைகளுக்கு இன்னும் தமிழ்ச் சொல்லில் அறிமுகம் அதிகமில்லாத காரணத்தாலும் ஒலிப்பதில் சிரமம் ஏற்படுவதாலும் சொல்லின் நீளத்தை மனத்திற் கொள்ள வேண்டும். நான்கு அல்லது ஐந்து எழுத்துகளுக்கு மேற்படாத சொற்களைக் கற்பிக்க வேண்டும். ஓரெழுத்துச் சொல், ஈரெழுத்துச் சொல் எனப் படிப்படியாகச் சென்று முன் கூட்டியே தெரிந்த சொல்லா, தெரியாத சொல்லா, முன்பே தெரிந்திருந்த சொல் லிருந்து இச்சொல்லை உருவாக்க முடியுமா? போன்றவற்றையும் மனத்திற் கொள்ள வேண்டும்.

எடுத்துக் காட்டாக, படி — படிப்பு, பாடு — பாடல்.

ஒரு சொல்லின் பகுதியோடு வெவ்வேறு பகுதிகளைச் சேர்ப் பதால் பல வகையான சொற்களை உருவாக்கலாம் என்பதை உணர்த்த வேண்டும்.

படி—படிப்பு, படித்தல், படிப்பது

வாழ்—வாழ்வு, வாழ்க்கை, வாழ்வது, வாழ்தல்

போன்ற பெயர்ச் சொல்லாக்கங்களைத் தனியாகக் கற்பிக்காமல் வாக்கிய அமைப்புகளோடு சேர்த்துக் கற்பிக்கலாம். இது இலக்கண உணர்வையும் வளர்க்கும். நினைவிலி நிலையிலேயே மாணவர்கள் புதிய சொற்களைத் தெரிந்த சொற்களிலிருந்து உருவாக்கிக் கொள்ள அறிந்து கொள்வர்.

இதே போன்று இருமொழியக் குழந்தைகளுடைய தமிழ்ச் சொல் பற்றிய முன்னறிவும் அச்சொற்கள் பயன்படுகின்ற எண்ணிக்கையும் சொல்லைத் தெரிந்தெடுத்துக் கற்றுத் தருவதற்குப் பயன் பட வேண்டும்.

குழந்தைகள் அறிந்திரா புதிய சொல்லைப் பயன்படுத்துவதை விட அறிந்த சொல்லைக் கொடுத்துப் பயன்படுத்துவது சிறப்பானது. இரு மொழியக் குழந்தை ஒரு தமிழ்ச் சொல்லை அறிந்திருந்தாலும், அச்சொல் பயன்படும் எல்லாப் பொருள்களையும் அறிந்திருக்க வேண்டியது இல்லை. இவ்வாறு தெரிந்திராத இடங்களையும் பொருளையும் தமிழை வீட்டுமொழியாகக் கொண்டிராத இக் குழந்தைகளுக்குக் கற்றுத் தர வேண்டும். 'எடுத்துக் காட்டாக,

பொருள் என்ற சொல்லுக்கு இரு 'பொருள்கள்' இருக்கின்றன. தேன் ஒரு இனிப்பான **பொருள்**. மொழி என்பதன் **பொருள்** 'சொல்' ஆகும்.

மேலும், சில தமிழ்ச் சொற்கள் பயனில் இருப்பதில்லை, எங்கே யாவது 'தலைகாட்டுவதுண்டு'.

பொதுவாக, நாம் பயன்படுத்தும் சொற்களை இரு வகைகளாகப் பிரிக்கலாம். முதல் வகையில் அமையும் சொற்களை நாம் அடிக்கடிப் பயன்படுத்துகிறோம். அவை எப்போதும் நம் நினைவில் நிற்கும். இவ்வகையை **'எப்போதும் பயன்படுத்தும் சொற்கோவை'** என்று சொல்லலாம். இன்னொரு வகையில் நாம் அடிக்கடி பயன்படுத்தாத சொற்கள் அடங்கும். இச்சொற்கள் எப்பொழுதும் நம் நினைவில் இருக்க வேண்டியது இல்லை. முயன்று நினைவில் கொண்டு வந்து பயன்படுத்துவோம். இவ்வகையை **எப்போதாவது பயன்படுத்தும் சொற்கோவை'** என்று சொல்லலாம்.

இரண்டாம் வகைச் சொற்கள் பாடநூலில் பயன்படுத்தப் பட்டால் மட்டுமே அவற்றை நாம் அறிமுகப்படுத்தலாம். அல்லது எப்போதாவது பயன்படுத்தும் சொற்கோவையில் சேர்க்கக் கொடுக்க லாம். வகுப்பறைக்கு வெளியேயும் பயன்படுத்த உதவும் சொற்களை முதலில் கற்பித்து இருமொழியக் குழந்தைகளின் 'எப்போதும் பயன் படுத்தும் சொற்கோவையில் சேர்க்க வேண்டும்.

தமிழ்ச் சொல்லில் அமைந்துள்ள எழுத்துகளாலும் எழுத்துகளின் சேர்க்கையாலும் ஏற்படுகின்ற இடர்ப்பாடுகளை ஆங்காங்கே களை வதற்குரிய பிழை நீக்கல் வழிகளைக் கையாள வேண்டும்.

எடுத்துக் காட்டாக, வெட்கம், ஆட் , இங்ஙனம், கவிஞர் போன்ற சொற்களைக் கூறலாம். அதாவது, இசைச்சொற்களில் ட்க், ட்சி, ங்ங போன்ற ஒலி இணைகளைக் கற்றுக் கொள்வது இருமொழியக் குழந்தைகளுக்குச் சிரமமாக இருக்கும் இவை வரும் சொற்களைத் தெளிவாக உச்சரித்துக் காட்டிப் பொருளை விளக்க வேண்டும்.

ஆசிரியர் தமிழ்ச் சொற்களைத் தெளிவாக உச்சரிக்க வேண்டும்' இரு மொழியக் குழந்தைகளைத் தனியாகவும், சங்கிலித் தொடராக வும், குழுக்களாகவும் தம்மைப் போலவே ஒலிக்கத் தூண்ட வேண்டும். வாயை எப்படி வைக்க வேண்டும், நாக்கை எப்படி வளைக்க வேண்டும் உதட்டை எப்படி வைக்க வேண்டும். என்பன போன்றவற்றைச் செய்து காட்ட வேண்டும். வீட்டு மொழியிலுள்ள சொல்லோடு ஒப்பிட்டுக் காட்டி ஒலிக்கும் படிச் செய்ய வேண்டும்.

படித்தல் திறன் என்னும் இயலில் கூறியவாறு, சொற்களைக் கற்பிக்கும் போது 'எழுத்துக் கூட்டிப்' படித்துக் காட்ட வேண்டும். சொல்லோடு ஒலிப்பையும் கற்பிக்க வேண்டும். மேற்கூறியவாறு வகைப்படுத்திக் கற்பிப்பதும் ஒலிப்போடு கற்பிப்பதும் வீட்டுமொழி இடையீட்டைத் தவிர்த்துக் கற்றுக்கொள்ள வழி செய்யும்.

சொல்தரும் சூழலின் அடிப்படையில் பொருள் வேறுபடுவதை எடுத்துக் கூற வேண்டும். இவ்வாறு வேறுபடுவதை வாக்கியங்களில் அமைத்துக் காட்ட வேண்டும். சான்றாக,

இராமன் கண்ணனை அடித்தான்.
ஆசிரியர் எனக்கு ஓர் அடி கொடுத்தார்.

'அடி' எனும் சொல் முதல் வாக்கியத்தில் வினைச் சொல்லாக வும் இரண்டாம் வாக்கியத்தில் பெயர்ச் சொல்லாகவும் பயன் படுத்தப்பட்டிருப்பதைக் காண்க.

இதன் பயனாகச் சொற்களஞ்சியம் பெருகும். சொற்களை வாக்கியத்தில் அமைக்கும் திறனும் வளரும். இவ்வாறாக மாணவர் களின் சொல்லாட்சித் திறனை வளர்க்க வேண்டும். இருமொழியக் குழந்தையின் வீட்டுமொழியில் தமிழ்ச் சொல்லின் பொருள் வேறுபடலாம். அவ்வாறு வேறுபடும் சொற்களை தொகுத்து வைத்துக் கொள்வது நல்லது. பாடநூலில் அச்சொற்கள் வரும் போது கூடுதல் கவனத்தோடு கற்பிக்கலாம்.

தமிழில் ஒரு சொல்லைப் பார்க்கும் போது வீட்டுமொழியில் அச்சொல் இல்லாவிட்டாலும் கூட புதியதொரு பொருளில் இரு மொழியக் குழந்தை பயன்படுத்தலாம். 'இந்தப் பொருளில் தமிழில்

பயன்படுத்துவதில்லை' எனப் பெரும்பாலும் ஆசிரியர் இதற்கு விடையளிப்பதைக் காணலாம். இப்பிழையையும் களைய வேண்டும்

இதைப் போன்று தமிழிலும் வீட்டுமொழியிலும் ஒரே சொல் வெவ்வேறு பொருளில் பயன்படுத்தப் படலாம்.

'பிரமாதம்' எனும் சொல் தமிழில் 'வெகு நன்றாக இருந்தது' எனும் பொருளில் வரும். ஆனால், தெலுங்கில் விபத்து, அபாயம் எனும் பொருளில் வருகின்றது.

'அவதி' எனும் சொல் தமிழில் 'கஷ்டம்' 'துன்பம்' எனும் பொருளில் வர, மலையாளத்தில் 'விடுப்பு' எனும் பொருளில் வருகின்றது.

'தீர்' எனும் வினை தமிழில் 'முடிந்தது' எனும் பொருளில் வருகின்றது. கன்னடத்தில் 'இறந்து போ' எனும் பொருளில் வருகின்றது.

ஒலிப்பு ஒற்றுமையுள்ள சொற்களையும் அவற்றின் பொருளையும் கொடுக்க வேண்டும். இதனை இணையாகக் கொடுத்தால் ஒலிப்பு வேறுபாடும், எழுத்துக் கூட்டலும், பொருளும் விளங்கும்.

தமிழின் சிறப்பு எழுத்துகளாக இருக்கின்ற ர, ற, ல, ள, ழ ன, ண போன்றவற்றில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

அரம்—அறம் மனம்—மணம்

மரம்—மறம் அன்னம்—அண்ணம்

வால்—வாள்—வாழ்

ஒரின ஒலிகள் வருகின்ற சொற்களை அடையாளம் கண்டு அவற்றைப் பயிற்சிக்குத் தரவேண்டும். தொழிலாளி, மழலை, வாழ்நாள், வாழ்க, வாழைக்குலை, குரல்வளை

**சில அணுகு முறைகள்**

கீழே கொடுக்கப்பட்டுள்ள அணுகுமுறைகளில் பலவற்றைப் பயன்படுத்தி இருமொழியக் குழந்தைகளுக்குச் சொற்களைக் கற்பிக்கலாம். இவற்றுள் சில பொதுவானவை; பல இருமொழியக் குழந்தைகளுக்காகாக் கூறப்படுபவை.

1. படத்தோடு தொடர்புபடுத்துதல். சொல் குறிக்கும் படத்தைக் காட்டி அதோடு தொடர்புபடுத்த வேண்டும்.

2. பொருளோடு தொடர்புபடுத்துதல். சொல் குறிக்கும் பொருளை வகுப்பறைக்கு எடுத்துச் சென்று அதோடு தொடர்பு படுத்திக் காட்ட வேண்டும்.

3. பொருள் விளக்கம். (1) நட எனும் வினைச் சொல்லை நடந்து காட்டி விளங்க வைத்தல். (2) ஏவுகணை என்றால் அதற்குரிய விளக்கத்தைத் தர வேண்டும்.

4. வாக்கியத்தில் பயன்படுத்துதல். சொற்களின் பொருளைத் தருவதோடு அவற்றை வாக்கியத்திலும் அமைத்துக் காட்டும்படிக் கூற வேண்டும் 'கல்' என்ற வினையின் பொருளைப் 'படி' என்று மட்டும் கூறி நிறுத்தி விடாமல் 'நான் தமிழ் கற்கிறேன். போன்று வாக்கியத்திலும் அமைத்துச் சொல்லச் செய்தல் வேண்டும்.

5. ஒரு பொருள் பன்மொழி. 'சொல்' எனும் வினைக்குக் 'கூறு', 'உரை', 'மொழி', எனப் பலச் சொற்கள் வருவதைப் போன்று பாடத்தில் வரும் சொற்களுக்குப் பல இணைச் சொற்கள் தரலாம்.

6. எதிர்ச் சொல் தருதல். எதிர்ச் சொல் தருதல் அச்சொல்லின் பொருளையும் அதன் எதிர்ச் சொல்லையும் தெரிந்து கொள்ள உதவுகின்றது.

7. ஒரு சொல்லின் இனமான பிற சொற்களையும் தருதல். 'நாள்' எனும் சொல்லைக் கற்பிக்கும் போது காலை, மாலை, பகல், இரவு, முற்பகல், பிற்பகல் எனும் சொற்களையும் கற்பிக்கலாம்.

8. ஒரு சொல் பல பொருள். ஒரே சொல்லுக்குப் பல பொருள் வருமாயின் அப்பொருள்களையும் விளக்கி வாக்கியத்திலும் பயன் படுத்துமாறு செய்ய வேண்டும்.

'படி' எனும் சொல்லைக் கற்பிக்கும் போது,

அவன் படிக்கிறான்.
அவன் படியில் ஏறினான்.
அவன் படியால் அளந்தான்.
மண்டி கீழே படிந்தது.

என மாணவர்களின் அறிவு நிலைக்குத் தகுந்தாற் போலக் கூட்டியோ குறைத்தோ தர வேண்டும்.

9. பகுதியோடு பல விகுதிகளைச் சேர்த்துப் பல சொற்களை உருவாக்குதல். முன்னர் கண்டது போல வினைச் சொல்லாக இருந்தால் அதனோடு பல விகுதிகளைச் சேர்த்துப் பல புதிய சொற்களை உருவாக்கி வாக்கியத்தில் அமைத்துக்காட்ட வேண்டும். சில வேளைகளில் தமிழிலும் வீட்டு மொழியிலும் அடிச் சொல் ஒன்றாக இருந்தாலும் விகுதிகளில் மாற்றம் இருக்கும். இவ்விகுதி மாற்றத்தை உணர்த்துவதற்கு இது பெரிதும் பயன்படும்.

எடுத்துக் காட்டாக

தின் — கன்னடத்தில் இதன் பெயர்ச்சொல் திண்டி ஆனால் தமிழில் தீனி.

10. தொகைச் சொற்கள் குறிப்பிடும் சொற்களை முழுக்கச் சொல்லிப் பொருள் தருதல். தொகைச் சொற்களைக் கற்பிக்கும் போது அவற்றின் பொருளை மட்டும் கொடுப்பதோடு நின்று விடக் கூடாது. சான்றாக,

மூவேந்தர் — சேரன், சோழன், பாண்டியன்.
முத்தமிழ் — இயல்தமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ்.

11. இணையாக வரும் சொற்களைத் தருதல். இவை மேல் வகுப்புகளில்பெரிதும் பயன்படும். உடலும் உயிரும், நகமும் சதையும். இரட்டைக் கிளவி அடுக்குத் தொடர்ச் சொற்கள், உவமை, உருவகங்களைப் பயன்படுத்த இது முதற் படியாகும்.

12. தமிழ்ச் சொல்லின் பொருள் விளங்கக் குழந்தையின் வீட்டு மொழிச் சொல்லைப் பயன்படுத்துதல்.

13. சொல்லின் ஒலிப்பையும் பொருளையும் கற்பித்தல் போதுமானதன்று. அதோடு சொல்லின் இலக்கண வேறுபாடுகளை உணர்த்தி அதைப் பயன்படுத்தும் வழிகளையும் கூற வேண்டும். இலக்கணக் குறிப்பு வரைதல் மேல் வகுப்புக்குரியது என்றாலும் அதற்கான அடிக்கல் கீழ் வகுப்புகளிலேயே இடப்பட வேண்டும்.

பெயர்ச் சொல், வினைச் சொல் வேறுபாட்டை வாக்கியங்களில் பயன்படுத்தும் படிக் கூறி விளக்கலாம். பலவகைச் சொற்களைக் கொடுத்துப் பெயர்ச் சொல், வினைச் சொல், பெயரடை, வினையடை எனப் பலவிதமாக பகுக்கச் சொல்லலாம். முதலில் ஓரிரு சொற்களை ஆசிரியரே வகைப்படுத்திக் கூறினால் பின்னர் மாணவர்களே வகைப்படுத்திக் கொள்வர். இவ்வாறு செய்யப் படுவது நினைவிலி நிலையிலேயே மாணவர்களால் தன்னகப் படுத்தப் படுகின்றன.

14. அகராதி பார்த்தல். அகராதி பார்க்கும் திறனை மூன்றாம் வகுப்பிலிருந்தே தொடங்கலாம். முழு அகராதியையும் கொடுக்காமல் முதலில் எழுத்து வரிசையை அறியச் செய்யலாம். அ, ஆ, இ, ஈ எனத் தொடங்கும் சில சொற்களைக் கொடுத்து வரிசைப் படுத்தச் சொல்லலாம். பின்னர் இரண்டாம் எழுத்தின் அடிப்படையில் வரிசைப்படுத்தச் சொல்லலாம். இவ்வாறு படிப்படியாக அகர வரிசைப் படுத்தச் சொல்லிப் பின்னர் அகராதியில் பொருள் பார்க்கும்படிச் செய்ய வேண்டும்.

15. மொழி விளையாட்டுகள்.

சொற்களைக் கற்பிப்பதற்கு மொழி விளையாட்டுகள் மிகவும் பயன் தரும். கிராமப் புறங்களில் முதல் எழுத்தைச் சொல்லி ஒரு பெயரைச் சொல்லும் விளையாட்டைப் பார்த்திருக்கலாம். இதே போன்று பல விளையாட்டுகளை ஆசிரியரே உருவாக்கிக் காட்டலாம், இது அவர்களின் சொற்களஞ்சியத்தைப் பெருக்கும்.

ஒவ்வொரு வகுப்பிலும் மாணவர்கள் அடைந்திருக்க வேண்டிய சொற்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பது பற்றி ஒரு பட்டியல் இருப்பின் சிறப்பாகும். (பாடநூலின் கடைசி பக்கங்களிலுள்ள சொல்லடைவுகள் பயன் தரும்) இச்சொற்களை மாணவர்கள் அறிந்து கொண்டார்களா என்பதையும் சோதித்துப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

**ஆசிரியர் நினைவிலிருத்த வேண்டிய சில குறிப்புகள்.**

1. இருமொழியக் குழந்தைகள் அறிந்து வரும் தமிழ்ச் சொற்களின் அளவை அறிந்திருத்தல் வேண்டும்.

2. எப்போதும் பயன்படுத்தும் சொற்கோவை, எப்போதாவது பயன்படுத்தும் சொற்கோவை, ஆகியவற்றில் சேர்க்க வேண்டிய சொற்களை அறிந்திருத்தல் நல்லது.

3. புதிய சொற்கள் உருவாகும் முறையை அறிந்திருத்தல் வேண்டும்.

4. இருமொழியக் குழந்தைகளுக்குச் சொற்களைக் கற்பிக்கத் தேவையான உத்திகளை அறிந்திருக்க வேண்டும்.

5. இருமொழியக் குழந்தைகள் சொற்களைக் கற்கும் போது எதிர்ப் படுகின்ற பிரச்சினைகளைத் தொகுக்கவும்.

# 18. செய்யுள் கற்பித்தல்

பாடல்கள் என்றாலே குழந்தைகளுக்கு மிகவும் பிடிக்கும். அதற்குக் காரணம் பாடலில் அமைகின்ற ஓசை நயம், வடிவம், சொற்கள், உட்பொருள் போன்றவை ஆகும். எனவே, மொழிக் கூறுகளை எளிதில் தன்னகப் படுத்திக்கொள்ள பாடல் உதவுகின்றது. ஆசிரியர் பாடிக் காட்டிக் குழந்தைகளைப் பாடச் செய்வது இருபாலருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது. ஒலிப்புப் பயிற்சி, சொற் பயிற்சி, வாக்கியப் பயிற்சி, ஆற்றொழுக்கில் பேசுதல் பயிற்சி, போன்ற பல பயிற்சிகளை ஒருங்கே கொண்டவை பாடல்கள். இவை தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கே இத்துணைப் பயிற்சியைத் தரும்போது இருமொழியக் குழந்தைகளுக்கு எவ்வளவு எளிதாகப் பயிற்சி அளிக்கும் !

செய்யுள் கற்பித்தலால் இருவகை பயன்கள் உண்டு.

1. மொழிப் பயிற்சி 2. இலக்கிய அறிமுகம். சான்றாக,

குள்ள வாத்து வளர்ந்து
பொன்னு முட்டை இடவே
பேராசைப் பட்டான்
வாத்து தன்னைப் பிடித்தான்
கத்தியை எடுத்தான்
கழுத்தை அறுத்தான்
காணோம் முட்டை
காணோம் முட்டை
கதறி அழுதான்.

இது ஒரு கதைப் பாடல். கதையை உரை நடையாகப் படிக்கும் போது கிடைக்கும் ஒலி நயம், சொல் நயம், பொருள் நயத்தை விட இச்சிறிய பாடலால் எத்துணைப் பயன் கிடைக்கிறது.

## மொழிக் கல்வியில் செய்யுளின் இடம்

முதன் மொழியில் செய்யுளைக் கற்பதால் பல வித நன்மைகள் உண்டு. அவற்றில் இரண்டை இங்குப் பார்க்கலாம்.

1, பிறரிடமிருந்து தம்மை வேறுபடுத்திக் காட்டுவதில் மொழி பெரும்பங்கு வகிக்கிறது. ஆனாலும் வேற்றுமைப் படுத்தும் செயலை விட அம்மொழி பேசுவோரை ஒற்றுமைப் படுத்தும் செயலை அம் மொழியின் பாடல்கள் செய்கின்றன.

தமிழ் வாழ்த்தும் முந்திய காலப் பாடல்களும் தாங்கள் சேர்ந்துள்ள சமுதாயத்தைப் பற்றிய எண்ணங்களைத் தோற்றுவிக்கின்றன. ஆனால், மொழிச் சிறுபான்மைக் குழந்தைகள் பள்ளிக்கு வரும் போது ஆற்றில் சேரும் நீரோடைகள் போலத் தங்கள் மொழியையும் பண்பாட்டு கூறுகளையும் தமிழ் ஆற்றில் ஒன்று சேர்த்து ஆற்றின் போக்கில் செல்லும் மனத்திறம் பெற வேண்டும். எனவே, அந்த மனத் திண்மையையும் முதலில் வளர்க்க வேண்டியது ஆசிரியரின் கடமை ஆகும். இதற்கு 'எல்லாம் தமிழ்' (மூன்றாம் வகுப்பு) போன்ற பாடல்கள் மிகவும் பயன்படும்.

தமிழக வரலாற்றில் பழங்காலத்திலும் அண்மைக் காலத்தில் அரசியல், இலக்கியம், கலை போன்றவற்றின் தலைவர்கள் இந்த ஒருமைப்பாட்டை வளர்த்தனர், ஊக்குவித்தனர்.

தாம் கற்கப் போகின்ற மொழியோடு தாமும் ஒன்றாக வேண்டும் என்னும் மனப்பான்மையை மாணவர்கள் வளர்த்துக் கொள்ள ஆசிரியர் உதவ வேண்டும். இதற்கு பாடல்கள் பயன்படும்.

## 2. மொழிப் பற்றை வளர்த்தல்

தாம் யாரென்ற அடையாளம் காணுவதற்கும் மொழிப் பற்றிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. வேற்று மொழியை வீட்டு மொழியாகக் கொண்டவர்களிடத்தில் தமிழ் மொழிப்பற்றை வளர்க்க வேண்டும். தமிழ் நாட்டில் வாழ்கின்ற மற்ற மொழி பேசுகிறவர்களில் பெரும்பாலோர் தங்களைத் தமிழ்ச் சமுதாயத்தோடு இணைத்தே காணுகின்றனர். இதற்கு அவர்கள் தமிழைத் தம் வீட்டுமொழி போன்றே எடுத்துக் கொண்ட மனப்பான்மையே காரணம் ஆகும். ஆகையால், ஆசிரியர், இந்த மனப்பான்மையை வளர்ப்பதற்குப் பெரிதும் துணை நிற்றல் வேண்டும்.

இதைப் போன்றே இருமொழியக் குழந்தைகளின் மன வளர்ச்சிக்கும் தமிழ் மொழி அறிவு வளர்ச்சிக்கும் தேவையான படிகளைப் பாடல்கள் மூலம் ஆசிரியர் கையாள வேண்டும்.

செய்யுள்கள் ஓசையுடன் பாடப் படுவதால் மனத்தைக் கவரும் தன்மையன. இம்மனக் கவர்ச்சி இயல்பைப் பயன்படுத்தி ஒலிகளின் வேற்றுமையைப் பாடல்கள் வாயிலாகக் கற்பிக்கலாம். எடுத்துக் காட்டாக, மூன்றாம் வகுப்பில் வரும் 'சொல்லும் பொருளும்' எனும் பாடலைப் பாருங்கள். இதைப் போன்ற புதிய சொற்களை எதுகை மோனையோடும் கருத்தோடும், கற்றுத் தருவதற்குப் பாடல் பயன் படும். எடுத்துக்காட்டாகப் பெருஞ்சித்திரனாரின் 'முயற்சி' எனும் பாடலைக் கூறலாம். இதில் பல நற்றமிழ்ச் சொற்கள் அமைந் துள்ளன. இச்சொற்களை இரு மொழியக் குழந்தைகள் புதிதாகக் கற்க வேண்டும்.

சில பாடல்களில் பேச்சுத் தமிழ்ச் சொற்கள் நற்றமிழில் வரும். எடுத்துக் காட்டாக, 'புத்து' என்று பேச்சுத் தமிழில் வடிவத்தைக் கொண்டுள்ள சொல், புற்று என ஒரு பாடலில் வருகின்றது. பேசுவதற்கும் எழுதுவதற்கும் இடையேயுள்ள உறவுகளைப் பாடல் மூலம் உணர்வுக்குக் கொண்டுவரலாம். 'எல்லாம் தமிழ்' என்ற தணிகை உலகநாதனின் பாடலில் விலங்குகளின் குரல்களைத் தருகிறார். இக்குரல்கள் இருமொழியக் குழந்தைகளுக்குப் புதியன வாக அமையலாம்.. விலங்குகளின் குரல்களைத் தமிழ் மரபில் கற்றுத்தர இப்பாடல் பயன்படுகின்றது.

தமிழை வீட்டுமொழியாகவும் வெளியுலக மொழியாகவும் கொண்ட குழந்தைகளுக்குக் கொடுக்கப்படுகின்ற பாடல்களின் எண்ணிக்கையை விட இருமொழியக் குழந்தைகளுக்கு கூடுதலான தமிழ்ப் பாடல்கள் கொடுக்கப் பட வேண்டும். உரையாடல் போக்கில் அமையும் பாடல்கள் போன்ற பல வகையான பாடல் களைக் கொடுக்க வேண்டும். அக்குழந்தைகள் தமிழ் மொழியின் அமைப்புகளை நினைவிலி நிலையிலேயே கற்றுக் கொள்ள இவை உதவும்.

### தெரிவு செய்தல்

பாடலைத் தெரிவு செய்யவும் எந்த நிலையில் கற்பிக்கிறோம் என்பதையும்தெரிந்து கொள்ளக் கீழ் வரும் பாடலேணி உதவுகின்றது.

தொடக்க நிலைப் பள்ளி மாணவர்களைப் பொறுத்த வரையில் முதல் இரு படிகளே பொருத்தமாக அமைவதால் ஆசிரியர்கள் அவற்றை மனத்திற் கொண்டு மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டும்.

5 இலக்கிய நடை, பொருள் கோள் உத்திகள், பாடல் கரு, பாடல் அமைப்பு, போன்றவற்றை அறிதல்.

4 உவமைகள், படிமங்கள், குறியீடுகள், போன்றவற்றைப் புரிந்து கொள்ளுதல்

3 படிக்கும் சொல்லைத் தாண்டிய ஓர் உலகத்திற்கு அழைத்துச் செல்தல்

2 (1) பாடலின் ஒலி ஒழுங்கு சொல் ஒழுங்கு, (2) பட்டறிவால் கிடைக்கும் கருவே பாடலில் அமைவது. இவ்விரண்டையும் பாராட்டுதல்

1 பாடலின் ஒலிகள்—பாடலில் கதைகள் இவ்விரண்டையும் அறிந்து மகிழ்தல்.

**புரிந்து கொள்ளும் ஆற்றலை மதிப்பிடுதல்**

பாடலைத் தெரிவு செய்த பிறகு அல்லது பாடநூலிருந்து ஒரு பாடலை எடுத்துக் கொண்ட பிறகு ஆசிரியர், குழந்தைகள் பாடலைப் புரிந்து கொள்ளும் மனப்பக்குவம் அடைந்துள்ளனரா என மதிப்பீடு செய்து கொள்ள வேண்டும்.

1. குழந்தையின் மொழியறிவி நிலையும் சிந்தனை வளர்ச்சி நிலையும் எந்த அளவிற்கு இருக்கின்றது.
2. பாடலை மனப்பாடம் செய்யும் நிலை என்ன ?
3. நலம் பாராட்டும் மனப்பான்மை எவ்வளவு அமைந்திருக்கிறது ?
4. கருப்பொருளைக் குழந்தையால் அறிந்து கொள்ள முடியுமா ?
5. மொழியின் பெரும் அமைப்புகளிலிருந்து சிறிய கூறுகளுக்கு வர முடியுமா ?
6. சிறிய குறிக்கோளிலிருந்து பெரும் குறிக்கோளுக்கு வர முடியுமா ?

**செய்யுளைக் கற்பிக்கச் சில உத்திகள்**

1. ஆசிரியர் உரக்கப் படிக்க வேண்டும் — இரு மொழியக் குழந்தைகளையும் உரக்கப் படிக்கச் சொல்ல வேண்டும்.

2. செய்யுளுக்குரிய ஓசையோடு பாடச் செய்ய வேண்டும். ஒரு சில பாடல்களுக்கு உரிய எளிதான மெட்டுடன் பாடச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

3. செய்யுளிலுள்ள சொற்களைப் பிரித்துப் படிக்கச் செய்ய வேண்டும்.

நற்றா — மரைக் கயத்தில் (மூன்றாம் வகுப்பு) எனப் படிக்காமல் சொற்களை எப்படிப் பிரித்துப் படிப்பது என்பதை அறியச் செய்ய வேண்டும். சான்றாக,

குறுமுயல்/ சிங்கந்/ தன்னைக் /கொன்றது
ஒன்று/ உண்டு/ ஏது/ எனில்

எனக் கோடிட்டுப் பிரித்துக் காட்டிப் படிக்கச் செய்ய வேண்டும்.

4. இருமொழியக் குழந்தையின் வீட்டுமொழிச் சொல்லும் செய்யுளின் தமிழ்ச் சொல்லும் பொருளிலோ வடிவிலோ வேறுபட்டால் அவற்றை அறியும்படிச் செய்ய வேண்டும்.

5. செய்யுளின் பொருள் உணர்ச்சிக்கேற்பக் குரல் ஏற்றத்தாழ்வுடன் படிக்கச் செய்ய வேண்டும்.

6. சரியாக ஒலிக்க இயலாத ஒலிகளுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும்.

7. சொற்களஞ்சியத்தைப் பெருக்க வழி செய்ய வேண்டும் (பார்க்க சொற்களைக் கற்பித்தல்)

8. சுருக்கமான பொழிப்புரை தர வேண்டும்.

9. வரிவடிவத்திற்கும் ஒலி வடிவத்திற்கும் உள்ள தொடர்பினைக் காட்ட வேண்டும்.

10. மேற்கண்ட ஒவ்வொரு பிரிவிலும் ஆசிரியர் உடனுக்குடன் கேள்வி கேட்டு விடை பெற வேண்டும்.

11. சிறிய பாடல்கள் தரும் போது இருமொழியக் குழந்தைகளின் வீட்டுமொழியில் அதே போன்ற பாடல்கள் இருக்கின்றனவா ? எனக் (வீட்டிலும் உறவினரிடமும்) கேட்டுப் பாடச் செய்ய வேண்டும்.

12. பொருள் புரியாத இடங்களில் இருமொழியக் குழந்தையின் வீட்டுமொழிச் சொல்லைத் தர வேண்டும்.

13. வாய் மொழிப் பயிற்சிகள் தர வேண்டும்.

14. நான்காம் ஐந்தாம் வகுப்புகளில் எழுத்துப் பயிற்சியும் கொடுக்க வேண்டும்.

15. பாடலின் சொற்களை மாற்றி இன்னொரு பாடல் எழுதுவதை முதற்படியாகக் கொண்டு புதிய பாடல்களை உருவாக்கச் செய்ய லாம். மூன்றாம் வகுப்பில் வரும் வட்டமான நிலவிது .... பாடலைப் பார்க்கவும். முதலில் ஒரு சொல்லை மாற்றுதல், அடுத்து இன்னொரு சொல் என மாற்றி மாற்றிப் புதிய பாடலாக உருவாக்கச் செய்யலாம்.

வட்டமான நிலவிது;
வானந் தன்னில் உலவுது.
தட்டை யாகத் தெரியுது;
தண்மை ஒலியைச் சொரியுது.

என்ற பாடலை மேகத்திற்காக மாற்றி எழுதலாம்.

வட்டமான முகிலிது;
வானந் தன்னில் உலவுது.
தட்டை யாகத் தெரியுது;
வெண்மை ஒளியைச் சொரியுது.

கீழ் வகுப்புகளில் பாடுவதற்கெனப் பல பாடல்களை ஆசிரியர் தெரிவு செய்து தொகுத்து வைத்துக் கொள்ள வேண்டும். இவை ஒலி நயத்திற்காகவும் கதைக்காகவும், பயிற்சிக்காகவும் என்று பல நோக்கங்களை அடிப்படையாகக் கொள்ளலாம். குழந்தைகளின் வீட்டில் உறவினர் பாடும் வீட்டுமொழிப் பாடல்களைப் பாடச் சொல்லி அவற்றைத் தமிழில் சொல்ல முயற்சி செய்யச் சொல்ல லாம். இதைக் கடைசிக் குறிக்கோளாகக் கொள்ளலாம்.

## ஆசிரியர் நினைவிலிருத்த வேண்டிய சில குறிப்புகள்

1. இரு மொழியக் குழந்தைகளின் தமிழறிவு வளர்ச்சியில் செய் யுளின் பங்கு என்னென்ன என்பதை அறிந்திருக்க வேண்டும்.

2. இரு மொழியக் குழந்தைகளின் தமிழ் மொழி அறிவு நிலையை மதிப்பிட்டுப் பாடல்களைத் தெரிவு செய்ய அறிந்திருக்க வேண்டும்.

3. செய்யுளைக் கற்பிக்கத் தேவையான புதிய உத்திகளையும் பயிற்சிகளையும் அறிந்திருக்க வேண்டும்.

4 இருமொழியக் குழந்தைகளின் வீட்டு மொழியிலிருந்து சில பாடல்களைப் பாடச் செய்து தொகுத்து வைத்துக் கொள்க.

— o —

# 19. உரைநடை கற்பித்தல்

பாடநூற்களில் பெரும் பகுதி உரைநடைக்கு என ஒதுக்கப்பட்டிருக்கிறது. உரைநடையை இருமொழியக் குழந்தைகளுக்கு எவ்வாறு கற்பிப்பது என இங்குப் பார்க்கலாம்.

**பாடத்திட்டத்தில் உரைநடை ஏன் ?**

பள்ளிவரும் குழந்தைகளிடம் தமிழ் மொழியில் கேட்டல், பேசுதல் திறன்கள் இருக்கும். இவற்றை அடிப்படையாகக் கொண்டு மற்ற மொழித்திறன்களை வளர்க்க முயலுவதால் உரைநடைப் பாடங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

இருமொழியக் குழந்தைகள் பள்ளிக்கு வரும்போது தமிழில் கேட்டல், பேசுதல் ஆகிய மொழித்திறன்களைப் பெற்றும் பெறாமலும் வரலாம். அதன் அடிப்படையில் கற்பித்தல் உத்திகளில் மற்றங்கள் தேவை என முன்னரே பார்த்தோம்.

சொல், தொடர், வாக்கியம், பத்தியமைப்பு முழுவடிவம் போன்றவற்றைக் கற்பிப்பதற்கு உரைநடை தேவைப்படுகிறது. இதோடு பேச்சு வழக்கை எழுத்து வழக்கிலிருந்து வேறுபடுத்தவும் உரைநடையே பெரும் உதவி புரிகின்றது.

இவ்விரண்டும் இருமொழியக் குழந்தைகளுக்கும் தேவையானவையே ; ஆயினும் உரைநடை கற்பதால் அவர்களுக்கு இன்னொரு பயனும் கிடைக்கிறது. அதாவது, வீட்டுமொழியிலேயே கூடுதல் அளவு பேசிவருகின்ற இருமொழியக் குழந்தை தமிழில் பேசுவதற்கும் வாய்ப்பைப் பெறுகின்றது. இவ்வாய்ப்பினால் சொற்களை ஒன்றோடொன்று சேர்த்து வாக்கியங்களைத் தெளிவாகத் தங்களுக்குத் தெரிந்த தமிழில் உருவாக்குகிற திறன் வளர்கிறது. மேலும், ஒரு வாக்கியத்தை அடுத்து இன்னொரு வாக்கியத்தைப் பொருத்தமாகப் பேசும் திறமையும் ஏற்படுகிறது. அத்துடன் தமிழ்ச் சொற்களை ஒலிக்கிற பயிற்சியும் கிடைக்கிறது.

**தொடக்கப் பள்ளிகளில் உரைநடை**

பள்ளியின் மற்றப் பாடங்களும் உரைநடையிலேயே அமைந்திருப்பதால் மொழிப் பாடத்தில் உரை நடை செம்மையாகக் கற்பிக்கப்பட வேண்டும் என்பது முக்கியத்துவம் பெறுகின்றது. முதல்

வகுப்பிற்கான உரை நடை என்பது இரண்டாம் வகுப்பில் வேறுபடுகிறது. முதல் வகுப்பில் எழுத்துகளைத் தனியாகவும் சொற்களில் சேர்த்தும் ஒலிப்பது உரைநடையின் முக்கிய குறிக்கோளாகும். அதாவது, சொற்களைத் தனித்தனியாக ஒலிப்பது என்பதே முதல் வகுப்பில் உரைநடை எனப்படுகிறது.

இரண்டாம் வகுப்பில் வாக்கியங்களுக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. மூன்றாம் வகுப்பில் பத்தியமைப்பே உரை நடையாகத் தோன்றுகிறது. நான்காம், ஐந்தாம் வகுப்புகளில் பல பத்திகள் சேர்ந்து பேசப்படுகிற முழுவடிவத்தையும் கொடுப்பது வலியுறுத்தப்படுகிறது. எனவே, இதன் அடிப்படையில் உரைநடை கற்பிப்பது என்பதுவும் வகுப்பிற்கு வகுப்பு வேறுபடுகிறது.

மேற் சொன்ன விளக்கங்களின் அடிப்படையில் பார்க்கும் போது இரு மொழியக் குழந்தைகளுக்கு உரைநடை கற்பிப்பது தமிழை வீட்டு மொழியாகக் கொண்ட குழந்தைகளுக்குக் கற்பிப்பதிலிருந்து வேறுபடுகிறது.

இருமொழியக் குழந்தைகளுக்குக் கற்பிக்கும் போது அவர்களுடைய வீட்டுமொழியறிவை தடுக்க வேண்டியிருக்கிறது. அதோடு தமிழை வீட்டுமொழியாகக் கொண்ட குழந்தைகளின் பேச்சுத் தமிழ் மொழியறிவைத் தடுப்பது போல இருமொழியக் குழந்தைகளிடமும் இதைச் செய்ய வேண்டியிருக்கிறது. இரு மொழியக் குழந்தைகள் பேசுகின்ற அல்லது எழுதுகின்ற தமிழ் வாக்கியத்தின் நீளம் தமிழை வீட்டுமொழியாகக் கொண்ட குழந்தைகள் பேசுகின்ற அல்லது எழுதுகின்ற தமிழ் வாக்கியங்களிலிருந்து வேறுபடும், குறைந்து காணப்படும்.

இருமொழியக் குழந்தைகள் தமிழைப் படிக்கும் போது வாக்கிய இசை வேறுபடுவது இன்னொரு பிரச்சினையாகும். நாம் பேசும் போதும் எழுதியவற்றைப் படிக்கும் போதும் ஒரே இசையுடன் எல்லா வாக்கியங்களையும் படிப்பதில்லை. வினா வாக்கியமாக இருந்தால் வினாவிற்குரிய இசையுடனும் வியப்புணர்வை கொண்டுள்ள வாக்கியங்களை வியப்பு தொனிக்கும் படியும் ஒலிக்கிறோம். இவ்வாறு, கேலிசெய்வதற்கும், ஐயத்தைக் காட்டுவதற்கும், நேரடியாக உணர்ச்சியைக் குறைத்து ஒரு பொருளை வெளிப்படுத்துவதற்கும் பல்வேறு எதிர்மறைப் பொருளைத் தொனிப்பதற்கும் என்றவாறு, அவ்வவ்வாக்கியப் பொருளின் அடிப்படையில் அவ்வவ்வாக்கியத்திற்குரிய இசையுடன் ஒலிக்கிறோம். இவ்வாக்கிய இசையின் இயல்புகள் வட்டாரத்திற்கு வட்டாரம் மாறு

படுகிறது. சிலநேரங்களில் சமூகத்திற்குச் சமூகமும் மாறுபடுகின்றது எனவே, தொடக்க காலத்தில் இருமொழியக் குழந்தைகள் தங்கள் வீட்டுமொழியின் வாக்கியக் குரலிசையை விட்டுவிட்டு பள்ளித் தமிழில் ஏற்றுக் கொள்ளப்பட்ட குரலிசையில் படிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும், இதற்கு உரைநடை பெரிதும் உதவுகின்றது.

## குறிக் கோள்கள்

பாடத் திட்டத்தில் பாடங்களை எவ்வாறு தெரிவு செய்ய வேண்டும் என்பதற்குக் குறிப்புகள் இருக்கின்றன. சான்றாக இயற்கை, புலவர் வரலாறு, கதை, பாடல் என்று வரையறை செய்யப்பட்டிருக்கின்றது. எனவே, இதன் அடிப்படையில் பாடங் களைக் கற்பிப்பதன் குறிக்கோள்களும் அமைகின்றன. ஆசிரியர் பாடத்திட்டத்தைப் பார்த்து அதில் கொடுக்கப்பட்டிருக்கும் குறிக் கோள்களை மனத்திலிருத்திக் கொண்டு பாடத்திற்கான குறிக் கோள்களை வரையறுத்துக் கொள்ள வேண்டும்.

மொழிப் பாடம் ஒரு திறன் பாடம் என்பதால் பாடநூலின் மூலம் எந்தெந்த மொழித் திறன்களை வளர்க்கலாம் என்பதை முன்னரே தெரிந்து கொள்ள வேண்டும். எளியவற்றிலிருந்து கடின மானவற்றிற்கும் தெரிந்தவற்றிலிருந்து தெரியாதவற்றிற்கும் பாடங் கள் அடிமைப்பட்டிருக்கும் விதம், சொற்கள், வாக்கியங்கள், போன்ற வற்றின் அடிப்படையில் பாடங்கள் வரிசைப் படுத்தப் பட்டிருத்தல் பாடப் பொருளின் அடிப்படையில் பாடங்கள் வரிசைப்படுத்தப் பட்டிருத்தல், கலைத்திட்டம் நாட்டின் குறிக்கோள்களை எதிரொளிப்பதாக அமைந்திருத்தல், எழுதுபவரின் மனப்பான்மை, உலகறிவு, திறன், போன்ற இயல்புகளை மனத்திலிருத்திக் கொண்டு ஆசிரியர் தம் குறிக்கோள்களை வரையறை செய்து கொள்ள வேண்டும். ஒரு படத்தின் பொதுவான குறிக்கோள்களை அறிந்து கொண்ட பிறகு இருமொழியக் குழந்தைகளுக்கேயுரிய சிறப்பான குறிக்கோள்கள் என்னென்ன என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும்.

பாடத்தைத் தொடங்குவதற்கு முன் மாணவர்களின் தமிழ் மொழியறிவு நிலை அப்பாடத்தைப் புரிந்து கொள்ள ஏற்ற நிலை யில் இருக்கின்றதா? என முதலில் மதிப்பீடு செய்து கொள்ள வேண்டும். இருமொழியக் குழந்தைகள் தமிழை அறிந்தும் அறியாம லும் பள்ளிக்கு வரலாம். அந்நிலையில் ஆசிரியர் பாடநூலை அவர் களின் தமிழ் மொழியறிவுக்கு ஏற்ற வகையில் எவ்வாறு பயன்படுத்து வது என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

முதல் இரு வகுப்புகளிலும் படம் பார்த்துக் கதை சொல்லுதல் மூலம் அவர்களுக்கு முதலில் தமிழ் மொழியறிவை ஊட்ட வேண்டும். ஆசிரியர் கதையை எளிய தமிழில் கூற வேண்டும். அவர்களையும்

கூறச் செய்ய வேண்டும். முழுவதுமாகத் தமிழில் கூறமுடியவில்லை என்றால் வீட்டுமொழிச் சொற்களையும் சேர்த்துக் கூற அனுமதிக்க வேண்டும். இவ்வாறு அவர்களது தமிழ் மொழியறிவு நிலையைப் படிப்படியாக உரைநடை கற்பதற்கு ஏற்றவாறு ஆயத்தப்படுத்த வேண்டும்.

மாணவர்கள் தமிழில் பேசுவதை ஊக்குவிக்க வேண்டும். ஆசிரியர் இருமொழியக் குழந்தைகளிடம் சிறிது கூடுதல் நேரம் செலவழித்துத் தமிழிலேயே பேச வேண்டும். சில ஏவுதல்களைத் தமிழிலேயே தரவேண்டும். புரிந்து கொள்ளாவிட்டால் அவர்கள் புரிந்து கொள்ளும் வரை வெவ்வேறு வகையாக அந்த ஏவுதல்களைத் தமிழிலேயே சொல்ல வேண்டும். அதாவது, ஒரே செயலைப் பல்வேறு வகையாகத் தமிழில் சொல்லித் தமிழிலேயே புரிய வைக்க வேண்டும். மேலும், இருமொழியக் குழந்தைகள் பல, வகுப்பிலிருந்தால் அவர்களுக்குள் தங்கள் வீட்டு மொழியிலேயே பேசுவதைக் குறைக்க முயல வேண்டும். இவ்வாறு குறைவதற்கு இருக்கைகளை வரிசைப்படுத்துவதும் இருமொழியக் குழந்தைகளத் தமிழ் மட்டுமே பேசும் குழந்தைகளோடு இணையாக அமரச் செய்வதும் விளையாடச் செய்வதும் பயன்தரும்.

### கற்பிக்கும் முறைகள்

கற்பிக்கும் முறைகளும் ஆசிரியர்க்கு ஆசிரியர் வேறு படலாம் எனினும், கீழே கொடுக்கப் பட்டுள்ளவற்றை அடிப்படையாகக் கொண்டு புதியனவற்றையும் சேர்த்துக் கொள்ளலாம்.

1. பாடப் பகுதியைக் கேட்டு அதன் சுருக்கத்தை அறியச் செய்தல். பாடத்தை முதலில் உரக்கப் படித்து அப்பகுதியின் சுருக்கத்தை மாணர்களின் தமிழ்மொழியறிவுக்கு ஏற்றவாறு கூறவேண்டும்.

2. படிக்கும் பகுதியின் சுருக்கத்தைச் சொல்லச் செய்தல். பத்தி பத்தியாகப் படிக்கும் போது அவற்றின் சுருக்கத்தைச் சொல்லச் செய்ய வேண்டும்.

3. படிக்கும் பகுதியின் சுருக்கத்தை எழுதச் செய்தல். நான்காம் ஐந்தாம் வகுப்புகளில் சொல்லச் செய்த சுருக்கத்தை எழுதச் செய்யலாம்.

4. சரியான ஒலிப்போடும் சொல்லழுத்தத்தோடும் படிக்கும் திறனை வளர்த்தல். ஆசிரியர் வாய்விட்டுப் படித்துக் காட்டி மாணவர்களையும் படிக்கச் செய்ய வேண்டும்.

5. நிறுத்தக் குறிகளை மனத்திற் கொண்டு படிக்கும் திறனை வளர்த்தல். சரியான ஒலிப்பு, சொல்லழுத்தத்தோடு நிறுத்தக் குறிகளையும் மனத்திற் கொண்டு படிக்கும் திறனை வளர்க்க வேண்டும். ஆசிரியரே முன்மாதிரியாக அமைய வேண்டும்.

6. பாடப் பகுதியில் வரும் புதிய சொற்களின் பொருளை அறியச் செய்ய வேண்டும். (பார்க்க **சொற்களைக் கற்பித்தல்**)

7. சொற்களஞ்சியத்தைப் பெருக்குதல். இணையான சொற்கள் தந்தும் எதிர்ச் சொல் தந்தும் மாணவர்களின் சொற்களஞ்சியத்தைப் பெருக்கச் செய்ய வேண்டும்.

8 இருமொழியக் குழந்தைகளின் வீட்டுமொழியிலிருந்து வேறுபடும் வாக்கிய அமைப்புகளை அறியச் செய்ய வேண்டும்.

9. அருஞ்சொற்களின் பொருள் அறிய அகராதியைப் பார்க்கும் திறனை வளர்க்க வேண்டும். ஐந்தாம் வகுப்பு முடிக்கும் போது அகராதியைப் பார்க்கும் திறனை அடைந்திருக்க வேண்டும் எனப் பாடத் திட்டம் எதிர் பார்ப்பதால் அத்திறனையும் வளர்க்க வேண்டும் (பார்க்க : **சொற்களைக் கற்பித்தல்**)

10. பாடத்தின் வாயிலாக என்னென்ன செய்திகளை மாணவர்களுக்குத் தருகிறோம் என்பதன் அடிப்படையில் சிறிய சிறிய வாக்கியங்களாகப் பாடப் பொருளை அறியச் செய்ய வேண்டும்.

11. கீழ் வகுப்புகளில் மாணவர்களின் வீட்டுமொழியிலும் விளக்கம் அளிக்கலாம். ஆனால் அதையே கற்பிக்கும் உத்தியாகக் கொள்ளக் கூடாது.

ஒருபத்தியைப் படித்து அதை அவர்களின் வீட்டுமொழியில் மொழி பெயர்த்துக் கூறக் கூடாது. அது உணர்தல் திறனை வளர்க்கும் எனினும் தமிழ் மொழித்திறன்களை வளர்க்காது.

12. கலந்துரையாடல், வருணித்தல், வினாக் கேட்டல், நடித்தல், வீட்டுப் பாடம் தருதல் ஆகியவற்றையும் ஆசிரியர் கையாள வேண்டும்.

இருமொழியக் குழந்தைகள் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய மொழித் திறன்களில் ஆற்றல் பெற வேண்டும் என்பதை மனத்திற் கொண்டு மேற்சொன்னவை தரப்பட்டுள்ளன. ஆசிரியர் தம் வகுப்பின் தமிழ் மொழியறிவுக்கு ஏற்றவாறு இவற்றை மாற்றிக் கொள்ளலாம். இருமொழிச் சொற்களும் வாக்கியங்களும்

கலந்து பயன்படுத்துவதை முதலில் புறக்கணிக்கலாம். போகப் போக இருமொழியக் குழந்தைகள் தாமாகவே முழுக்க முழுக்கத் தமிழுக்கு வரத் தொடங்குவார்கள். இவ்வாறு வராது தாமதமாகும் குழந்தைகளிடம் தனிக்கவனம் செலுத்த வேண்டும்.

தாம் இன்னொரு மொழியைப் படிக்கிறோம் என்பதால் மனச் சோர்வு ஏற்படாமல் இருக்கும்படிப் பார்த்துக் கொள்ள வேண்டும். இருமொழியக் குழந்தைகளின் உடல் வளர்ச்சிக்கும் உள வளர்ச்சிக்கும் காப்புணர்ச்சியை ஏற்படுத்துவது மிக மிகத் தேவையானதாகும்.

## பயிற்சிகள்

இருமொழியக் குழந்தைகளுக்குப் பயிற்சிகள் இன்றியமையாதவையாகும். எனவே, வாய்மொழிப் பயிற்சிகள் என்றும் எழுத்துப் பயிற்சிகள் என்றும் இருவகைகளாகப் பிரித்து கேட்டல், பேசுதல் திறன்களை முதலில் வளர்க்க வேண்டும். இந்த அறிவை அடிப்படையாகக் கொண்டு படித்தல் எழுதுதல் திறன்களை வளர்க்க வேண்டும்.

பாடநூலில் கேள்விகளுக்குப் பதில் எழுதுதல், எதிர்ச் சொல் தருதல், புள்ளியிட்ட இடத்தை நிரப்புதல், போன்ற பயிற்சிகள் இருக்கின்றன. இருமொழியக் குழந்தைகளுக்கு மேலும் பல பயிற்சிகள் தர வேண்டும். எந்தெந்த இடங்களில் அவர்கள் பிழை செய்கிறார்கள் என்பதைக் கண்டறிந்து அதன் அடிப்படையில் பயிற்சிகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும். இரண்டாவதாக, எந்தெந்த இடங்களில் இருமொழியக் குழந்தைகளின் வீட்டுமொழி இடையீடு வருகின்றது என்பதைப் பார்த்து அதன் அடிப்படையிலும் பயிற்சிகளைக் கொடுக்க வேண்டும்.

பயிற்சிகளை அடிப்படையாகக் கொண்டு தேர்வுகளும் தேர்வுகளை அடிப்படையாகக் கொண்டு பயிற்சிகளும் உருவாக்கப்பட வேண்டும்.

பாடநூல் ஒரு கருவியேயன்றி முழுத் துணை அன்று என்பதை மனத்திற் கொண்டு மாணவர்களின் தேவைக் கேற்றவாறு உத்திகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

## ஆசிரியர் நினைவிலிருத்த வேண்டிய சில குறிப்புகள்

1. பாடத் திட்டத்தில் உரைநடை ஏன் அமைந்திருக்கிறது என்பதை அறிந்திருக்க வேண்டும்.

2. தொடக்கப் பள்ளிகளில் உரைநடையின் பங்கு என்ன என்பதைத் அறிந்திருக்க வேண்டும். அதில் இருமொழியக் குழந்தைகளின் தேவை என்ன என்பதையும் அறிந்திருக்க வேண்டும்.

3. குறிக்கோள்களையும் குழந்தைகளின் தமிழ் மொழி அறிவையும் மதிப்பீடு செய்ய அறிந்திருக்க வேண்டும்.

4. கற்பிக்கும் முறைகள் என்னென்ன என்பதையும் பயிற்சிகள் என்னென்ன என்பதையும் அறிந்திருக்க வேண்டும்.

5. எந்த வகுப்பில் இருமொழியக் குழந்தைகள் வீட்டுமொழிச் சொற்களை நிறைந்த அளவு பயன்படுத்துகின்றனர் என்பதைக் கவனித்து எழுதவும்.

6. எந்த வகுப்பில் வீட்டுமொழிச் சொல் குறைந்து காணப்படுகிறது அத்துடன் தம் வீட்டுமொழிச் சொற்களுக்குப் பதிலாகத் தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துவது கூடிக் காணப்படுகிறது என்பதைக் கவனிக்கவும்.

7. ஒவ்வொரு வகுப்பின் பாடநூலிலும் வரும் உரைநடைப் பாடங்களுக்கான சிறப்புக் குறிக்கோள்களை (இருமொழியக் குழந்தைகளுக்கான) எழுதவும்.

—o—

# 20. பிழை தொகுத்தலும் நீக்கலும்

தமிழை வீட்டு மொழியாகக் கொண்ட குழந்தைகள் தமிழைக் கற்கும் போது கூட ஒரு சில இடர்ப்பாடான இலக்கணக் கூறுகள், பயிலுதல் அணுகுமுறைகள், கவனச் சிதைவு, தெரியாமை போன்ற பல காரணங்களால் அவர்களுடைய தமிழில் பிழைகள் ஏற்படலாம். ஆனால் வீட்டுமொழியாகத் தமிழைக் கொண்டிராத குழந்தைகள் தமிழைப் பயிலும் போது மேற் சொன்ன காரணங்களோடு வீட்டு மொழி இடையீட்டாலும் அவர்களுடைய தமிழில் பிழைகள் செய்ய லாம். (இதைப்பற்றி **மொழி இடையீடு** என்னும் இயலில் பார்த் தோம்). பிழைகள் மாணவர்கள் எவ்வாறு கற்றுக் கொண்டு வரு கிறார்கள் என்பதைக் காட்டுவதால் ஆசிரியர் அவற்றைத் திருத்து வதோடு நின்றுவிடக் கூடாது. அவற்றை வேரோடு பிடுங்கி எறியத் தேவையான பிழை நீக்கல் பாடங்களையும் தரவேண்டும். பிழைகள் இரு மொழியக் குழந்தைகள் தமிழைக் கற்றுக் கொண்டு வரும் முறைமையை மட்டுமல்ல ஆசிரியர் எங்கு அதிக கவனம் செலுத்திக் கற்பிக்க வேண்டும் என்பதையும் காட்டுகின்றது.

இருமொழியக் குழந்தைகள் தமிழை முதன் மொழியாகக் கற்றாலும் அவர்களுக்கு அது இரண்டாவதாகப் பயிலும் மொழி என்பதால் பிழைகள் கூடுதலாக ஏற்பட வாய்ப்பு இருக்கின்றது.

### பிழைகள் பாகுபாடு

பிழைகளை அவற்றின் இயல்புக்கேற்ப பல வகைகளாகப் பிரிக்கலாம்.

1. தவறுகளும் பிழைகளும்
2. உட்கொள்ளும் பிழைகளும் வெளியிடும் பிழைகளும்
3. திட்டவட்டத்திற்குள் அடங்கும் பிழைகளும் அடங்காப் பிழைகளும்.

### தவறுகளும் பிழைகளும்

இருமொழியக் குழந்தைகள் தமிழைக் கற்கும் போது ஏற்படுகின்ற வழுக்களைத் தவறுகள் என்றும் பிழைகள் என்றும் இரு வகைகளாகப் பிரித்துக் கொள்ளலாம். கவனச்சிதைவாலோ அல்லது அது போன்ற

வேறு காரணங்களாலோ ஓரிரு இடங்களில் தவறு செய்து விட்டு மற்ற இடங்களில் சரியாக எழுதியிருந்தால் அதைத் தவறு என்று சொல்லலாம். அவற்றைத் திருத்திக் கொடுத்துப் பார்க்கச் சொன்னால் போதும். ஆனால் ஒரே தவற்றை எல்லா இடங்களிலும் செய்திருந்தால் அது பிழையாகும். இவற்றைத் திருத்திக் கொடுப்ப தோடு அப்பிழையை நீக்கித் தேவையான பிழை நீக்கல் பாடங்களை யும் கொடுக்க வேண்டும். எடுத்துக் காட்டாக,

'கடிதம்' என்னும் சொல்லைக் 'காடிதம்' என ஒரு சில இடங் களில் மட்டும் எழுதினால் அது தவறு. ஆனால் கட்டுரை முழுவதும் 'காடிதம்' 'காடிதம்' என எழுதியிருந்தால் அது பிழையாகும்.

நான் அவனுக்கு அடித்தேன்
அவன் பந்துக்கு உதைத்தான்

போன்று எழுதுகிற போது அதைப் பிழை எனக் கொள்ள வேண்டும். ஆரிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்த மொழிகளை வீட்டுமொழி யாகக் கொண்டவர்கள் செய்கின்ற பிழை இது. அவர்கள் வீட்டு மொழியில் நான்காம் வேற்றுமை உருபே இரண்டாம் வேற்றுமை உருபாகவும் பயன்படுவதால் இப்பிழை நேர்கிறது. இது வீட்டு மொழியின் இடையீட்டால் ஏற்பட்ட பிழை. எனவே, இதற்கெனத் தனியாகப் பயிற்சி அளிக்க வேண்டும்.

இரண்டாம் வேற்றுமை வருகின்ற வாக்கியங்களைத் தனியாக வும் நான்காம் வேற்றுமை வருகின்ற வாக்கியங்களைத் தனியாக வும் கற்பிக்க வேண்டும். அவற்றின் வேறுபாட்டைக் காட்டி அவர்களின் பிழை வாக்கியத்தையும் அவற்றோடு ஒப்பிட்டுக் காட்ட வேண்டும். இவ்வாறு வீட்டு மொழி இடையீட்டால் நேர்கின்ற பிழைகளை முன்னரே எதிர்பார்க்கலாம். எனவே, அதற்குத் தகுந்த வாறு முதலிலேயே அம்மாணவர்களுக்கு அதிகப் பயிற்சி கொடுத்து விடலாம்; இதனால் பிழை செய்வதைத் தடுக்கலாம். நிறைய வாய் மொழிப் பயிற்சி கொடுக்க வேண்டும்.

### உட்கொள்ளும் பிழைகளும் வெளியிடும் பிழைகளும்

கேட்டலும் படித்தலும் உட்கொள்ளும் திறன்கள் என்றும் பேசு தலும் எழுதுதலும் வெளியிடும் திறன்கள் என்றும் அறிவோம். மாணவர்களின் கேட்டல் திறனிலும் படித்தல் திறனிலும் குறை இருப்பின் அவை அவர்களின் வெளியிடும் திறன்களிலும் எதிரொலிக்கும்.

சான்றாக, ர/ற; ல/ள/ழ போன்ற ஒலிகளைக் கேட்டுப் பிரித்தறிய முடியாத இருமொழியக் குழந்தைகளுக்குச் சரியாகப் பேசவோ எழுதவோ முடியாமல் போகலாம். இவ்வேறுபாட்டை அவர்கள் உணரும் வண்ணம் பயிற்சியளிக்க வேண்டும். இவைகள் உட்கொள்ளும் பிழைகளாகும்.

'நான் வீட்டுக்கு வரும்'
'அவன் படத்துக்குப் போகும்'

என ஒரு சில இருமொழியக் குழந்தைகள் எழுதுவதற்கு அவர்களுக்குக் கற்பிக்கப்பட்ட முறை காரணம் அல்ல. 'நான் வீட்டுக்கு வருவேன்' 'அவன் படத்துக்குப் போவான்' எனக் கற்பிக்கப்பட்ட பின்னும் இவ்வாறு எழுதுவதற்கு அவர்களுடைய வீட்டுமொழியே காரணமாகின்றது. இது வெளியிடும் திறனில் ஏற்பட்ட கோளாறு. இப்பிழையை நீக்குவதற்கும் வீட்டுமொழி தமிழிலிருந்து வேறுபடும் இடங்களில் அதிக கவனம் செலுத்திப் பல பயிற்சிகளைக் கொடுக்க வேண்டும்.

## திட்டவட்டத்திற்குள் அடங்கும் பிழைகளும் அடங்காப் பிழைகளும்

பிழைகள் எந்தெந்த மொழியமைப்புகளில் நிகழும் என்பதை முன்னரே ஊகிக்க முடியுமானால் அவற்றைத் திட்டவட்டத்திற்குள் அடங்கும் பிழைகள் எனச் சொல்லலாம்.

இருமொழியக் குழந்தைகளின் வீட்டுமொழிக்கும் தமிழுக்கும் இடையிலான வேறுபாடுகளில் பிழைகள் செய்யப்படக் கூடும் என எதிர்பார்க்கலாம். வேறுபாடுகள் என்னென்ன என்பதை முன்னரே குறித்துக் கொண்டால் அவற்றை அடிப்படையாகக் கொண்டு கற்பிக்கும்போதே அதில் கவனம் செலுத்த முடியும். சான்றாக,

ந/ள, ர/ற, ல/ள/ழ, போன்ற எழுத்து வேறுபாடுகள் பல மொழிகளில் இருப்பதில்லை. எ ஏ, ஒ ஓ எழுத்து வேறுபாடுகள் ஆரிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்த மொழிகளுள் பெரும்பாலும் இருப்பதில்லை. வினைச் சொற்களிலும் வேற்றுமைகளிலும் தமிழுக்கும் இருமொழியக் குழந்தைகளின் வீட்டு மொழிக்கும் வேறுபாடுகள் காணப்படலாம். இவை போன்று பல வேறுபாடுகளையும் அறிந்து கொண்டு அதிக கவனம் செலுத்திப் பயிற்சிகள் அளிக்க வேண்டும். (பார்க்க : **தமிழும் தெலுங்கும், தமிழும் கன்னடமும், தமிழும் மலையாளமும், தமிழும் சௌராட்டிரமும், தமிழும் உருதுவும், தமிழும் மாரத்தியும். எனும் இயல்கள்**)

சில பிழைகளுக்குத் தமிழ் மொழியின் எழுத்து, சொல் வாக்கியங்களே காரணமாகின்றன. குறிப்பாக, சில இறந்த கால இடை-

நிலைகள் வினைச் சொற்களின் கடை ஒலியை அடிப்படையாகக் கொண்டு அமையாமல் விதி விலக்குகளாக இருக்கின்றன, சான்றாக,

தேய் — தேய்த்தான் காய் — காய்த்தது.
வேய் — வேய்த்தான் 'வேய்ந்தான்'

'வேய்' இக்குழுவின் விதி விலக்காகும், அதனால் வேய்த்தான் என்று இருமொழியக் குழந்தைகள் எழுத வாய்ப்பு உண்டு. இவ்வாறான பிழைகளையும் ஓரளவு இனங்கண்டு கொள்ளலாம்.

**மொழி அமைப்புகளில் பிழைகள்**

இருமொழியக் குழந்தைகள் தமிழை முதன் மொழியாகக் கற்கும் போது செய்கின்ற பிழைகளை எழுத்துப் பிழைகள், சொற் பிழைகள், வாக்கியப் பிழைகள், புணர்ச்சிப் பிழைகள் என பல வகைகளாகப் பிரிக்கலாம்.

**1. எழுத்துப் பிழைகள்**

| | |
|---|---|
| மல்யாளம் | மலையாளம் |
| எப்பம் | ஏப்பம் |
| ஏழமை | ஏழைமை |
| காய்கரி | காய்கறி |
| நாயிறு | ஞாயிறு |

இவை இரண்டாம் வகுப்பில் இருமொழியக் குழந்தைகள் செய்த பிழைகள் இவற்றைப் போன்று எல்லா எழுத்துப் பிழைகளையும் தொகுத்துக் கொள்ள வேண்டும். பொதுவாகச் செய்யப்படுகின்ற பிழைகளைத் தவிர்ப்பதற்காக அட்டைகளில் அவ்வெழுத்துகள் வரும் பல சொற்களை எழுதிக் காட்டிப் பிழைகளைத் திருத்தலாம். சில சொற்களின் எழுத்துக் கூட்டலைக் கண்களால் பார்த்து மனப் பாடம் செய்து கொண்டால் 'சின்னராவா' 'பெரியராவா' போன்ற கேள்விகளுக்கு இடமிருக்காது.

**சொற்பிழைகள்**

தமிழ்ச் சொற்களுக்குப் பதிலாக வீட்டுமொழிச் சொல்லைப் பயன்படுத்துதல், பொருள் தெரியாத காரணத்தால் தவறாகப் பயன் படுத்துதல் வீட்டுமொழியிலும் தமிழிலும் ஒரு சொல் கொண்டுள்ள உருவ ஒற்றுமையால் ஒரு சொல்லைப் பயன்படுத்துதல், அதனால் பொருள் வேறுபடுதல், வீட்டுமொழியில் அச்சொல் இல்லாத போதும் வேறு ஒரு பொருளில் அச்சொல்லைப் பயன் படுத்துதல், வீட்டு மொழியிலும் பேச்சுத் தமிழிலும் பயன் படுத்தப்படுகின்ற வட

மொழிச் சொற்களை எழுத்தத் தமிழில் பயன்படுத்துதல், போன்ற பல வகையான காரணங்களால் சொற்பிழைகள் நேர்கின்றன (இவற்றிற்கான சான்றுகள் ஆங்காங்கே பல இயல்களிலும் வந்திருப்பவைப் பார்க்கவும்).

தொடங்கு, ஆரம்பி, புறப்படு, கிளம்பு, கிளப்பு, போன்ற வினைச் சொற்களின் பொருள் புரியாத காரணத்தாலும் சரியாகக் கற்பிக்கப்படாத காரணத்தாலும் ஒரு சில இருமொழியக் குழந்தைகள் 'சினிமா புறப்பட்டது' 'எனவும்' நாங்கள் சுற்றுலா போன வண்டியை அவர் கிளம்பினார்' எனவும் எழுதுவதைக் காணலாம். 'ஏழு மணி பண்டிக்குப் போகிறேன்' என வண்டிக்குப் பதிலாக பண்டியைப் பயன்படுத்துவதையும் காணலாம். இவை போன்று வீட்டுமொழிச் சொற்களை இருமொழியக் குழந்தைகள் பயன்படுத்தும் போது அச்சொற்களுக்கு ஈடான தமிழ்ச்சொற்களைத் தந்து பல தடவைகள் தமிழ் பயன்படுத்தச் செய்ய வேண்டும்.

## வாக்கியப் பிழைகள்

பல பிழைகள் சொற்களில் பிழையாகத் தோன்றினும் அவற்றை வாக்கியத்தில் நேர்ந்த பிழையாகக் கொண்டு திருத்த வேண்டும். சான்றாக,

அவன் ஊருக்குப் போகும்.
அவன் இராமனுக்கு அடித்தான்.

முதல் வாக்கியத்தை மலையாளத்தை வீட்டுமொழியாகக் கொண்ட குழந்தைகளும் இரண்டாவது வாக்கியத்தைக் கன்னடத்தை வீட்டுமொழியாகக் கொண்ட குழந்தைகளும் எழுதுவதையும் பேசுவதையும் பார்க்கலாம். 'போகும்' என்ற சொல்லையோ இராமனுக்கு என்ற சொல்லையோ திருத்திக் கொடுத்தால் மட்டும் போதாது'

எழுவாய் அவன், அவள், அவர், அவர்கள், அவை, அது, நான், நாம், நாங்கள், நீ, நீங்கள், என வரும் போது வினைச் சொல்லில் நேரும் மாற்றத்தையும் கற்பிக்க வேண்டும். பல வினைச் சொற்களை வாய்மொழியாகப் பயிற்சி செய்யக் கொடுக்க வேண்டும் 'இராமனுக்கு' அடித்தேன் என வேற்றுமை உருபு மாறுவதற்கும் வீட்டு மொழியே காரணமாகிறது. இது போன்ற வாக்கியங்களில் நிறைய வாய்மொழிப் பயிற்சிகள் தரவேண்டும்.

## புணர்ச்சிப் பிழைகள்

தமிழை வீட்டு மொழியாகக் கொண்ட குழந்தைகளும் இப்பகுதியில் பிழைகள் செய்யலாம். அதிலும் வல்லினம் மிகுதல் எந்தெந்த இடங்களில் என்பது தமிழை வீட்டுமொழியாகக் கொண்ட குழந்தை

களுக்கும் மற்ற குழந்தைகளுக்கும் 'புதிராகவே' இருக்கின்றது. மூன்றாம் வகுப்பிலிருந்து இலக்கணம் தொடங்குகின்றது. அங்கேயே புணர்ச்சியில் பிழை செய்யாமலிருக்க அடிக்கல்லிடப்பட வேண்டும்.

அம்மா + உம்– அம்மாவும் எனத் தமிழில் வர மலையாளத்தில் அம்மயும் என வரும். இது போன்ற பிழைகளைத் தொகுத்து அவற்றில் அமையும் சொற்களைப் பொறுக்கி எடுத்துப் பயிற்சி அளிக்க வேண்டும்.

இருமொழியக் குழந்தைகள் தமிழைக் கற்கும் போது அவர்களுடைய வீட்டு மொழி சில நேரங்களில் உதவலாம். சில நேரங்களில் ஊறு செய்யலாம். எனினும் வீட்டு மொழியின் இடையீடு தமிழின் எழுத்து, சொல், வாக்கியம், போன்ற எல்லா இடங்களிலும் இருக்கலாம். தமிழை வீட்டுமொழியாகக் கொண்ட குழந்தைகள் போன்ற வட்டார/ சமுதாயப் பேச்சுத் தமிழின் இடையீடு இருக்கும். இவை போன்ற பல காரணங்களால் செய்யப் படுகின்ற பிழைகளைத் தொகுத்து அவற்றைக்களைய ஆசிரியர் உதவ வேண்டும்.

**ஆசிரியர் நினைவிலிருத்த வேண்டிய சில குறிப்புகள்**

1. பிழைகள் என்றால் என்ன என்பதையும் பிழைகளின் வகைகள் என்னென்ன என்பதையும் அறிந்திருக்க வேண்டும்.

2. தமிழைக் கற்கும் போது இருமொழியக் குழந்தைகள் எந்தெந்த இடங்களில் பிழை செய்யக் கூடும் என்பதை அறிந்திருக்க வேண்டும்.

3. பிழைகளை நீக்குவதற்கான வழிமுறைகளை அறிந்திருக்க வேண்டும்.

4. இருமொழியக் குழந்தைகள் பேசும் போதும், படிக்கும் போதும், எழுதும் போதும் செய்கின்ற பிழைகளைத் தொகுக்கவும்.

—o—

# 21. தேர்வுகள்

ஒருவர் எந்த அளவிற்குப் பல்வகைத் திறன்களையும் அறிவையும் பெற்றிருக்கிறார் என்பதை அறியத் தேர்வு பயன்படுகிறது.

தேர்வுகளை நடத்தப்படுகின்ற முறையின்படி இருவகைகளாகப் பிரிக்கலாம். வாய்மொழியாகக் கேட்டு ஒரு மாணவனின் தரத்தை அறிவது வாய்மொழித் தேர்வு ; அவன் எழுதியுள்ளதைக் கொண்டு அவனுடைய தரத்தை அறிவது எழுத்துத் தேர்வு. வாய்மொழித் தேர்வு பெரும்பாலும் தொடக்கப் பள்ளிகளில் தான் அதிக அளவு பயன்படுகிறது. மற்ற நிலைகளில் பயிலும் மாணவர்களின் தரத்தைப் பெரும்பாலும் எழுத்துத் தேர்வு கொண்டே அறிந்து வருகிறோம்.

தேர்வை அது நடத்தப்படும் நோக்கத்தினால் நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். 1. முன்னறி தேர்வு, 2. முன்னேற்ற தேர்வு. 3. அடைவுத் தேர்வு, 4. திறமைத் தேர்வு.

### முன்னறி தேர்வு

மாணவர் ஒன்றைக் கற்கும் முன்பாக, எந்த நிலையில் உள்ளார்கள் என்பதையும் கற்கப் போவதைக் கற்கும் நிலையில் உள்ளார்களா என்பதையும் அறிய இத்தேர்வு பயன்படுகிறது. இதில் பின்வருவனவற்றை அடக்கலாம்.

(அ) வகுப்பிற்கு வருமுன் இருமொழியக் குழந்தைகள் தமிழைத் தெரிந்து கொண்டிருக்கிறார்களா?

(ஆ) அவ்வாறு தெரிந்து கொண்டிருந்தால் அவர்களுடைய தமிழ்ப் பேச்சில் காணப்படும் இயல்புகள் என்னென்ன? (ஒலிப்பு, சொற்பொருள் உணர்ந்து பயன்படுத்துதல், சொற்களின் வடிவம், புரியாத சொற்கள், வாக்கிய இசை போன்றவை)

(இ) இருமொழியக் குழந்தைகளின் வீட்டுமொழியின் செல்வாக்கு எவ்வளவு ?

(ஈ) இருமொழியக் குழந்தைகள் மேல் வகுப்புகளுக்கு வரும்போது கீழ் வகுப்பில் கற்றுத் தேர்ந்த தமிழறிவு.

### முன்னேற்றத் தேர்வு

கற்றலில் மாணவர்கள் எந்த அளவு முன்னேறி வருகிறார்கள் என்பதை அறிய அவ்வப்போது நடத்தப்படும் தேர்வு இது.

(அ) கற்பிக்கப்படுகிற ஒலிகள், எழுத்து வடிவங்கள், சொற்கள், சொற்களைப் பயன்படுத்துகிற முறைகள், சொற்பொருள், வாக்கிய இசை, வாக்கியங்கள் போன்றவற்றை எவ்வாறு திறம்படக் கற்று வருகிறார்கள், எவ்வெவ்விடங்களில் அவர்களுக்குச் சிரமம் இருக்கிறது என்பதை அறியப் பயன்படுகிறது.

(ஆ) வகுப்பறையிலும் வெளியிலும் இருமொழியக் குழந்தைகள் பேசும் தமிழின் அளவு. இந்த அளவு முந்திய வகுப்பிலிருந்து இந்த வகுப்பாண்டில் அதிகரிக்கிறதா ? போன்ற கேள்விகளை அடக்கலாம்.

### அடைவுத் தேர்வு

ஒரு குறிப்பிட்ட நிலையின் இறுதியில் மாணவர்கள் எந்த அளவு திறன் பெற்றிருக்கிறார்கள் என்பதை அறிய இத்தேர்வு வைக்கப் படுகிறது, (1) கற்பிக்கப்பட்ட தமிழ் மொழித் திறன்களையும் தமிழ் மொழிக் கூறுகளையும் (எழுத்து, சொல், வாக்கியம், போன்றவை) எந்த அளவிற்குத் தெளிவாகப் பயன்படுத்துகிறார் கள். முந்திய வகுப்புகளில் கற்றுக் கொடுக்கப்பட்டவற்றை தாமாகவே பயன்படுத்தும் திறனை இவ்வகுப்பில் அடைந்துள்ளார் களா ? அவர்களுடைய பேச்சுத் தமிழ் வளர்ச்சி எவ்வாறு அமைகிறது என்பன போன்றவற்றை அடக்கலாம்.

### திறமைத் தேர்வு

இது மாணவர்கள் ஒரு குறிப்பிட்ட நிலையில் அந்நிலைக்கு மேலாக எந்த அளவு திறன் பெற்றுள்ளார்கள் என்பதை அறியப் பயன்படுகிறது. இதுவரை கற்றுள்ள தமிழ்மொழித் திறன்களில் தமிழ் மொழிக் கூறுகளையும் (எழுத்து, சொல், வாக்கியங்கள் போன்றவை) எவ்வாறு தாமாகவே பயன்படுத்துகிறார்கள் என்பதைக் கண்டறிய இத்தேர்வு உதவுகின்றது.

### தேர்வு வினாக்கள்

தேர்வில் கேட்கப்படும் வினாக்கள் கீழ்க்கண்ட சிறப்புக் கூறு களைக் கொண்டிருக்க வேண்டும்.

(அ) வினாக்கள் குறிப்பிட்ட நோக்கத்தை அடைபவையாக இருக்க வேண்டும். அதாவது, மாணவரின் எந்தத் திறனைச் சோதிக்க விரும்புகிறோமோ அதை அடிப்படையாகக் கொண்டு அவ்வினா அமைய வேண்டும்.

(ஆ) வினாக்கள் தெளிவாக இருக்க வேண்டும். வினாவை மாணவர்களிடம் கேட்டவுடன், மாணவர்கள் படித்தவுடன் இதுதான் கேட்கப்பட்டிருக்கிறது என்று தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

(இ) வினாக்கள் திட்டவட்டமாகக் கேட்கப்படல் வேண்டும். சில எடுத்துக்காட்டுகள் தருக என்றிராமல் இரு (அல்லது வேறு எண்) எடுத்துக் காட்டுகள் தருக என்றிருக்க வேண்டும்.

(ஈ) மதிப்பெண்களுக்கு ஏற்றவாறு வினாக்கள் அமைய வேண்டும். 5 மதிப்பெண்கள் உள்ள வினாவை 2 மதிப்பெண் உள்ள வினா வகையிலும், 2 மதிப்பெண்கள் உள்ள வினாவை 5 மதிப்பெண் உள்ள வினாவகையிலும் கேட்கக் கூடாது.

(உ) மாணவர்கள் கற்றதைச் சோதிக்கும் வினாவாக இருக்க வேண்டுமே ஒழிய ஆசிரியரின் வினா கேட்கும் திறமையை வெளிக் காட்டும் வினாவாக அமையக் கூடாது.

(ஊ) மொழிப் பாடத்தில் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மொழிப் பாடத்தின் நோக்கங்களாகிய (1) இலக்கிய அறிவு பெறுதல், (2) படித்து (அல்லது) கேட்டுப் பொருளுணர்திறன் பெறுதல், (3) மொழிக் கூறுபாடுகளை உணர்தல், (4) பேச்சு (அல்லது) எழுத்து வழி வெளியிடுதிறன் பெறுதல், (5) இலக்கியச் சுவை உணர்தல், (6) அடிப்படைத் திறன்களாகிய கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றையாவது சோதிப்பதாக அமைய வேண்டும்.

(எ) மிகுதியான புறவயவினாக்கள் இடம்பெற வேண்டும்.

**வினாத்தாளின் அமைப்பு**

1. வினாத்தாளில் வினாக்களின் எண்ணிக்கை தொடர்ச்சியாக இருக்க வேண்டும் (பல வகைகளாகக் கேள்விகள் அமைந்தாலும்).

2. மாணவர்கள் எத்தனை, எப்படி, எவ்வளவு வினாக்களுக்குப் பதில் எழுத வேண்டும், என்பன போன்ற குறிப்புகள் தெளிவாக இருக்க வேண்டும்.

3. ஒவ்வொரு வினாவிற்கும் அல்லதுவினாத் தொகுதிக்கும் தனித் தனியே மதிப்பெண்கள் தரப்பட வேண்டும்.

4. பலவுள் தேர்வு, கோடிட்ட இடம் நிரப்புதல், பொருத்துதல், மிகக் குறுவிடை வினா, குறுவிடை வினா, கட்டுரை எழுதுதல் போன்ற பல வகை வினாக்கள் இடம் பெற வேண்டும்.

5. தெளிவாக அச்சிடப்பட்டிருத்தல் வேண்டும்.

6. முதன் மூன்று வகுப்புகளுக்கு வாய்மொழி வழி மேற் கூறிய வினா வகைகளைத் தெளிவாகத் தர வேண்டும். பல முறை திருப்பித்திருப்பிக் கேட்கவும் வேண்டியிருக்கும்.

7. ஒரு சிலவற்றிற்கு ஆசிரியர்களே வாய்மொழியாகவும் எழுத்திலும் முன் மாதிரியாக விடைதர வேண்டியது இருக்கும்.

## சில சிறப்புக் குறிப்புகள்

இருமொழியக் குழந்தைகளுக்குத் தொடக்கப் பள்ளியில் எல்லா நிலைகளிலும் எழுத்துத் தேர்வுடன் வாய்மொழித் தேர்வும் கட்டாயம் நடத்தப்படல் வேண்டும். இதற்கென 20% மதிப்பெண் வழங்கலாம். அப்பொழுதுதான் பேசுதல் திறனிலும் நல்ல தேர்ச்சி பெற முயல்வர். முதல் இரண்டு வகுப்புகளிலும் வாய்மொழித் தேர்வில் மாணவர்கள் புரிந்து கொள்வதற்காக தாங்கள் வீட்டு மொழியையும் பயன்படுத்தினால் தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது. அவர்கள் தரும் விடைகளில் அவர்கள் வீட்டுமொழியின் இடையீட்டையும் ஏற்றுக் கொண்டு, ஆனால் அது எந்த அளவிற்குக் குறைந்து வருகின்றது என்பதையும் மனத்திற் கொண்டு தகுந்த மதிப்பெண்கள் வழங்க வேண்டும்.

தமிழை வீட்டுமொழியாகக் கொண்ட குழந்தைகளுக்கும் தமிழை வீட்டுமொழியாகக் கொண்டிராத குழந்தைகளுக்கும் பாடநூல் ஒன்றாகவே அமைகிறது. எனவே, தமிழை வீட்டுமொழியாகக் கொண்ட குழந்தைகளிடம் கேட்கப்படுவது போன்றே பாடநூல் வினாக்கள் கேட்கப் படவேண்டும். எனினும், இருமொழியக் குழந்தைகள் தமிழைக் கற்றுக் கொள்வதற்காகச் செலவிடுகின்ற நேரம், ஆற்றல், படுகின்ற சிரமம் ஆகியவற்றையும் மனத்திற் கொள்ள வேண்டும். இவற்றையும் அளவிடுவதற்கு ஏற்றவாறு கேள்விகளை அமைத்துக் கொடுக்கலாம். எடுத்துக் காட்டாக, சொற்கள் தவறான வரிசையில் தரப்பட்ட வாக்கியங்கள், பேச்சு வழக்குச் சொற்களுக்கு இணையான எழுத்து வழக்குச் சொற்கள் தருதல் வீட்டுமொழிச் சொற்களுக்கும் வாக்கியங்களுக்கும் இணையான தமிழ்ச் சொற்கள், வாக்கியங்கள் தருதல் போன்ற வகையில் அமையும் வினாக்களினால் இருமொழியக் குழந்தைகள் தமிழைக் கற்க எடுக்கின்ற முயற்சியையும் அளவிடலாம். இருமொழியக் குழந்தைகளின் தமிழ் மொழி அறிவை மனத்திற் கொண்டு தேர்வுகள் நடத்த வேண்டும்.

**ஆசிரியர் நினைவிலிருத்த வேண்டிய சில குறிப்புகள்.**

1. தேர்வுகளின் வகைகள், வினாவகைகள், வினாத்தாள் அமைய வேண்டிய விதம் போன்றவற்றை அறிந்திருக்க வேண்டும்.

2. இருமொழியக் குழந்தைகளின் தமிழறிவையும் முயற்சியையும் அளவிட அறிந்திருக்க வேண்டும்.

3. இருமொழியக் குழந்தைகளுக்குத் தரவேண்டிய சில முக்கிய வினாக்களைத் தொகுக்கவும்.

—o—

## 22. பாட நூல்களைக் கற்பித்தல்

முதல் வகுப்புக்கு வரும் இருமொழியக் குழந்தைகளுக்கு முதலில் கேட்டல் திறனை நன்கு வளர்க்க வேண்டும். குழந்தைகள் வந்து சேர்ந்த நாள் முதல், முதல் வகுப்புப் பாடநூலில் உள்ள பாடங்களைச் சொல்லித்தரத் தொடங்கக் கூடாது. முதல் ஓரிரு மாதத்திற்குக் கேட்டல் திறனைப் பெருமளவிலும் சிறிது பேசுதல் திறனையும்தான்வளர்க்க வேண்டும். (பார்க்க : **கேட்டல் திறன்**)

கேட்டல், பேசுதல் திறன்களை வளர்ப்பதற்கு ஆசிரியர் நிரம்பக் கதைகளைத் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும். ஒரு மாத காலத்திற்கு மேல் கேட்டல் பேசுதல் திறன் வளர்ச்சிக்கு ஏற்றபடி சூழ்நிலைகளை உருவாக்கிக் கற்றுணர்ந்த பின் முதல் வகுப்புப் பாடநூலில் உள்ள படக் கதைகளுக்கு வரலாம்.

படக் கதைகளைக் கற்றுத் தருவதன் மூலம் மாணவர்களின் பல்வேறு திறன்கள் வளர்க்கப் படுகின்றன. உற்று நோக்கும் திறன், கற்பனைத்திறன், உரையாடல் திறன், படைப்பாற்றல் திறன், நினைவாற்றல் போன்றவை குறிப்பிடத் தக்கவை.

படக் கதைக்கே இப்படி ஓரிரு மாதங்கள் செலவு செய்தால் மீதமுள்ள பகுதியை எப்படி முடிப்பது என்ற ஐயம் ஆசிரியர்களுக்கு ஏற்படலாம். முதல் வகுப்பில் மாணவர்களிடம் வளர்க்க வேண்டிய திறன்கள், கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல். இதற்காகப் பாடநூலில் உள்ள பக்கங்கள் மொத்தம் 54. முதல் ஆண்டில் தமிழ்ப் பாடத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள பாடவேளைகள் $100 \times 4 = 400$. 54 பக்கங்கள் நடத்த அனுமதித்துள்ள பாட வேளைகள் மொத்தம் 400. எனவே ஒரு பக்கத்தை நடத்தத் தேவையான பாடவேளைகள் ஏறக்குறைய $400/54 = 7$ ஒரு பக்கத்தை ஆசிரியர் கற்பிக்க எடுத்துக் கொள்ள வேண்டிய பாட வேளைகள் 7 என்றால் அப்பக்கம் தொடர்பான பிற செய்திகளையும் வேறுபல கதைகளையும் நடத்த எடுத்துக் கொள்ள வேண்டிய காலம் எனப் பொருள். ஆசிரியர் பாடநூலில் உள்ள ஒரு பக்கத்தை நடத்தக் குறைந்தது 3 அல்லது 4 பாடவேளைகளாவது எடுத்துக் கொள்ள வேண்டும்.

மொத்த நேரத்தில் அரைப்பகுதியாவது இருமொழியக் குழந்தைகளின் தேவைகளை மனத்திற் கொண்டு தமிழ் மொழி அறிவை

வளர்ப்பதற்குப் பயன்படுத்த வேண்டும். ஆனால் இதற்கென்று தனித்தனிப் பாடவேளைகளை அமைத்துக் கொள்ளாது, ஒவ்வொரு பாடவேளையிலும் கற்பிக்கப்படுகிற பொருளுக்கேற்ற இருமொழியக் குழந்தைகளின் தேவைகளை மனத்திற் கொண்டு கணிசமான நேரத்தைச் செலவிட வேண்டும்.

பின்பு நான்காவது ஐந்தாவது பக்கங்களிலுள்ள **'படத்தைப் பார்த்து பெயரைச் சொல்லச் செய்க'** என்ற பாடத்திற்கு வரலாம். இங்கு ஆசிரியர் ஒலிவடிவத்தை அறிமுகம் செய்கிறார். அதாவது, படித்தல் திறனுக்கு அடிப்படையான வரிவடிவத்தின் ஒலிவடிவ அறிமுகம் இங்கு நடைபெற வேண்டும். வரிவடிவத்தின் ஒலியை உச்சரிக்கக் கற்றுத் தருவதே இங்கு நம் நோக்கமாகும் (பார்க்க : **பேசுதல் திறன்**) மாணவர்கள் ஏற்கனவே அறிந்த பொருள்களின் பெயர்களே இங்கு இடம் பெற்றுள்ளன.

ஆசிரியர் இச்சொற்களை ஒலித்துக் காட்டும் போது குறில் நெடில் ஓசை வேறுபாடு தோன்ற ஒலித்துக் காட்ட வேண்டும். அதற்காகத் தான் பக்கம் 4,5-ல் குறில் ஓசையுடைய எழுத்துகள் பச்சை வண்ணத்திலும் நெடில் ஓசையுடைய எழுத்துகள் சிவப்பு நிறத்திலும் அச்சிடப்பட்டுள்ளன. உயிர் எழுத்துகள் அடங்கிய இச்சொற்களை யும் இவை போன்ற வேறு சில சொற்களையும் ஒலிக்கக் கற்றுத் தந்த பின்பு (சுமார் 4 வாரங்களுக்குப் பின்பு) 8, 9 பக்கங்களைக் கற்பிக்கத் தொடங்கலாம். மாணவர்களுக்குத் தெரிந்த உயிரெழுத்து கள் அடங்கிய சொற்களின் படங்கள் கொண்ட அட்டைகள் பலவற்றை ஆசிரியர் பயன்படுத்தலாம். இவ்வாறு குறில் நெடில் ஆகியவற்றைத் தெளிவாக ஒலிக்கக் கற்றுத் தருவதால் பின்னர் கேட்டெழுதுதலின் போது மாணவர்கள் பிழையின்றி எழுத உதவு கிறது. (காண்க : **தமிலும் தெலுங்கும்** போன்ற மற்ற இயல்கள்)

இதே போன்று அடுத்து வரும் நான்கு பக்கங்களிலுள்ள மெய் யெழுத்துகளையும் நன்கு பிழையின்றி ஒலிக்கக் கற்றுத் தரவேண்டும். (காண்க : **ஒலிகளையும் வரிவடிவங்களையும் கற்பித்தல்**) இப்பக்கங் களில் மெய்யெழுத்துகள் மூவகை வண்ணத்தில் அதாவது வல்லினம் மெல்லினம், இடையினம் ஆகிய வேறுபாடு தோன்ற அச்சிடப் பட்டிருப்பதன் நோக்கத்தையும் ஆசிரியர் உணர்ந்திருப்பது நலம்.

முதல் 10 பக்கங்களைத் தொடர்ந்து கற்பிக்க வேண்டுமென் பதில்லை. உயிரெழுத்துகள் அறிமுகத்திற்குப் பின்பு அவை தொடர் பான எளிய குழந்தைப் பாடல்களைச் சந்தத்துடன் (பாடநூலில் உள்ளவை தவிர) பாடிக்காட்டிக் குழந்தைகளையும் பாடச் செய்ய லாம். இதற்காகக் குழந்தைப் பாடல்களின் தொகுப்பு ஒன்றை ஆசிரியர் வைத்திருத்தல் நலம்.

உயிர், மெய் எழுத்துகளின் அறிமுகத்தைத் தொடர்ந்து வருவது (12, 13, 14, பக்கங்களில்) உயிர்மெய் எழுத்துகளின் அறிமுகமாகும். இவற்றின் ஒலி வடிவத்தைத்தான் இங்குக் கற்றுத் தர வேண்டுமே யொழிய வரிவடிவத்தை எழுதத் தொடங்கக் கூடாது. உயிர்மெய் எழுத்துகள் அடங்கிய மாணவர்களுக்குத் தெரிந்த பிற சொற்களைக் கொண்ட அட்டைகளைத் துணைக் கருவிகளாகப் பயன்படுத்தலாம்.

இவ்வாறு மாணவர்கள் கேட்டல், பேசுதல், படித்தல் திறன்களில் ஏறக்குறைய மூன்று மாதகாலம் பயிற்சி பெற்ற பின்பு நான்காவது திறனாகிய எழுதுதல் திறனைத் தொடங்கலாம். எழுதுதல் திறன் வளர்ச்சியின் போது மற்ற திறன்களின் வளர்ச்சியிலும் ஆசிரியர் அக்கறை கொள்ள வேண்டும்.

எழுதுதல் திறன் அறிமுகம் என்றால் எழுத்துகளின் வரிவடிவத்தை ஒலிக்கக் கற்ற மாணவர்களுக்கு அதன் வரிவடிவத்தை எழுதக் கற்பித்தல் என்பதாகும். எழுதுவதற்கு உறுதுணையான விரல்கள்—கட்டைவிரல், ஆள்காட்டிவிரல், அதைத் தாங்கும் ஏனைய விரல்கள். எழுதுதலைச் சிறப்பாகச் செய்ய பெரிதும் உதவுவது ஆள்காட்டி விரல். முதலில் அது நன்கு வலிமை பெற வேண்டும் என்பதால்தான் அக்காலத்தில் மணலில் ஆள்காட்டி விரலால் எழுதக் கற்றுத் தந்தார்கள். முதலில் குழந்தைகளுக்குப் பலப்பத்தை எப்படிப் பிடிப்பது என்பதை ஆசிரியர் ஒவ்வொரு குழந்தைக்கும் தனித்தனியே கற்றுத் தரவேண்டும். ஒரு செ. மீ. பலப்பம் விரல்களுக்கு வெளியே தெரியும்படிப் பிடித்து எழுதச் செய்வதே நல்லது. இவ்வாறு பலப்பத்தைப் பிடிக்கும் முறையைக் கற்றுத் தந்த பின் சொற்களையோ எழுத்துகளையோ உடன் எழுதச் செய்தல் கூடாது.

மாணவர்களை முதலில் நெடுக்குக் கோடுகள் 500 முறையும் (/) படுக்கைக் கோடுகள் 500 முறையும்(—) போடச் செய்யவும். பின்பு சாய்வான கோடுகள், சுழிகள், கொம்புகள், போன்றவைகளும் போடக்கற்றுத் தந்த பின்பு தான் எழுத்துகளின் வரிவடிவத்தை எழுதத் தொடங்க வேண்டும். (காண்க : **ஒலிகளையும் வரிவடிவங்களையும் கற்பித்தல்**)

இவ்வாறு படிப்படியாக எழுத்துகளை எழுதக் கற்றுத் தந்த பின்பு பாடநூலில் பக்கம் 15 முதல் உள்ள சொற்களை எழுதக் கற்பிக்கவும். தொடக்கத்தில் மாணவர்களிடையே விரைவாக எழுதும் பழக்கத்தைத் தூண்டக் கூடாது. மாறாகத் தெளிவாக

எழுதும் பழக்கத்தையே வற்புறுத்த வேண்டும். சொற்களை எழுதும் போது சரியானபடி ஒலித்துக் கொண்டே எழுதக் கற்பிக்க வேண்டும். ஒவ்வொரு பக்கத்திலும் உள்ள சொற்களை மாணவர்கள் நன்கு தெளிவாக ஒலிக்கக் கற்றுக்கொண்ட பின் அச்சொற்களைப் பார்த்து எழுதக் கற்றுத் தர வேண்டும். அச்சொற்களைப் படிக்கும் போது தெளிவாகவும், ஒலிவேறுபாடு தோன்றவும் படிக்கப் பழக்க வேண்டும் தொடக்கத்தில் எழுத்துக் கூட்டிப் படிக்கக் கற்றுத் தருதல் நலம். (பார்க்க : **படித்தல் திறன் வளர்த்தல்**).

இவ்வாறு எழுத்துகளின், சொற்களின் வரிவடிவத்தைக் கற்றுத் தந்த பின் (டிசம்பருக்குப் பின்) நெடுங்கணக்கின் அமைப்பை மாணவர்களுக்கு விளக்கலாம். அதாவது, உயிரும் மெய்யும் இணைந்து உயிர்மெய் உண்டாவதைக் கற்பிக்கலாம். மீண்டும் ஓரெழுத்துச் சொற்கள், ஈரெழுத்துச் சொற்கள், மூவெழுத்துச் சொற்கள் எனப் படிப்படியாக ஆசிரியர் தொகுத்து வைத்துக் கொண்டு எழுதக் கற்பிக்க வேண்டும். பாடநூலில் உள்ளவற்றையும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

மாணவர்களுக்குத் தெரிந்த சில விலங்குகளின் செயல்களோடு பாடநூலில் இல்லாத சில விலங்குகளைப் பற்றியும் பல வித நிறங் கள் பற்றியும் அடுத்து வரும் பக்கங்கள் மூலம் கற்பிப்பதுடன் அதே சுவையுடைய வேறு பொருள்களையும் கற்பிக்க வேண்டும். அடுத்து வரும் பாடத்தின் மூலம் குழந்தைகளுக்குக் குடும்பத்தினர் உறவுப் பெயர்களைத் தெரிந்துகொள்ள வாய்ப்பளிக்கப் படவேண்டும். இப்பாடத்தில் கூறப்படாத வேறு உறவுப் பெயர்களைப் பற்றியும் அறிவித்தல் நலம். 40, 41—ஆம் பக்கங்களின் மூலம் மாணவர்கள் ஒருமை, பன்மைகளை அறிந்துகொள்ள வேண்டும். ஒருமை, பன்மை எனக் கூறாமலேயே இன்னும் அனேக எடுத்துக்காட்டுகளுடன் கற்பிக்க வேண்டும்.

அடுத்து வரும் மூன்று பக்கங்களிலும் மாணவர்கள் நினை வாற்றலை வளர்க்கவும் சொற்களின் ஒலிநயம், சொற்களஞ்சியம் பெருக்கவும் உதவும் வண்ணம் அமைக்கப்பட்ட பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இப்பாடல்களுக்குப் பொருள் கற்பிக்க வேண்டும். என்பதில்லை. 47-ஆம் பாடம் '**எங்கள் வீடு** என்பதைக் கற்பிக்கும் போது மாணவர்கள் ஒவ்வொருவர் வீட்டைப் பற்றியும் கூறச் செய்தல் நலம். பாடத்தில் உள்ளது போன்று எளிய வாக்கியங்களாக் கூறச் செய்து, முடிந்தால் எழுதப் பயிற்றுவிக்கலாம். விலங்குகளின் ஒலிகளைப் பற்றிய அடுத்த பாடத்திலிருந்து வெவ்வேறு விலங்குகள் ஒலிப்பதைக் குறிக்கும் சொற்களை விளையாட்டு முறையில் கற்பிக்க

வேண்டும். அடுத்து வரும் பக்கங்களிலுள்ள பாடங்கள் மாணவர்கள் ஒலிவடிவத்தை நன்கு உச்சரிக்கவும் எதுகை மோனைகளைக் கேட்டு மகிழ்வதற்கும் அமைந்தவை. குழந்தைப் பாடல்களையும் ஆத்தி சூடியையும் ஆசிரியர் சரியாக ரகர றகர லகர ளகர ழகர ணகர னகர நகர வேறுபாடு தோன்ற உச்சரித்துக் காட்டிக் கற்பிக்க வேண்டும். ஆத்திசூடியை மனப்பாடமாகக் கூறச் செய்வதன் மூலம் மாணவர் களின் நினைவாற்றலை வளர்க்கலாம். ஒலிவேறுபாட்டினையும் உணர்ந்து கொள்ள உதவும்.

## இரண்டாம் வகுப்பு

இரண்டாம் வகுப்புப் பாடநூலில் 4 படக்கதைகளும், 9 குழந்தைப் பாடல்களும், ஒரு உரையாடலும், இரு கதைகளும், 23 பாடங்களும், புதிய ஆத்திசூடி, கொன்றை வேந்தனும் ஆக 41 பாடங்கள் உள்ளன.

முதல் வகுப்புப் பாடநூலில் உள்ள படக் கதையைக் கற்பித்தது போன்றே இவ்வகுப்பில் உள்ள படக் கதைகளையும் கற்பித்தல் வேண்டும். அடுத்து 1, 2, 3, 4, 5, 6 பாடங்களை ஒவ்வொன்றை யும் நடத்த ஏறக்குறைய 5 பிரிவேளைகள் எடுத்துக் கொண்டு, சொற்களஞ்சியம் பெருக்குதல், அருஞ்சொற்பொருள் அறிதல் முதலியவற்றுடன், பாடநூலிலுள்ள பயிற்சிகளையும் முறையாகக் கற்பிக்க வேண்டும். இப்பாடநூலில் உள்ள குழந்தைப் பாடல்கள் அனைத்தையும் ஒலியைப் பிழையின்றி ஒலித்தல், எழுத்துகளின் வரி வடிவத்தை நன்கு அறிந்து படிக்கவும், எழுதவும் செய்யக் கற்பிக்க வேண்டும்.

அன்றாட வாழ்க்கையில் நாம் பயன்படுத்தும் மரபுத்தொடர்கள், அடுக்குத் தொடர்கள், இரட்டைச் சொற்களும் இப்பாடநூலில் கையாளப்பட்டுள்ளன. இச்சொற்கள் இருமொழியக் குழந்தைகளின் தமிழ் மொழியறிவை வளர்க்கப் பெரிதும் பயன்படும். அவற்றை ஆசிரியர் இனங்கண்டு மாணவர்களுக்கு அதைப் பயன்படுத்தி எளிய வாக்கியங்களை எழுதக் கற்பித்தல் வேண்டும். முதல் வகுப்பைப் போன்றே மாணவர்கள் சில எழுத்துகளைச் சிறப்பாக, ல, ள, ழ, ற, ர, ன, ண, ந, போன்றவற்றைச் சரியாக ஒலிக்கக் கூறப்பட்டுள்ள வால், வாள், தழை, தலை போன்ற பல்வேறு சொற்களைப் பட்டியலிட்டு வைத்துக்கொண்டு நன்கு ஒலிக்கப் பயிற்சியளிக்க வேண்டும்.

மாணவர்களின் கற்பனைத்திறன், படைப்பாற்றல் போன்ற வற்றை வளர்க்கும் வண்ணம் சில கதைப்பாடங்களும் இடம் பெற்றுள்ளன. இவை போன்ற வேறு சில நீதிக்கதைகளை ஆசிரியர்

கூறுவதோடு மாணவர்களையும் சிலவற்றை அறிந்து வந்து வகுப்பில் கூறச் செய்வதன் மூலம் பேசுந்திறனையும் நன்கு வளர்க்கலாம். மாணவர்களின் பேசுந்திறனை வளர்க்க உரையாடல் பாடம் ஒன்றும் இடம் பெற்றுள்ளது (24) இது போன்றே வானொலி, அஞ்சலகம், பேருந்து நிலையம், உள்ளூர்ச் சந்தை போன்றவை பற்றியும் மாணவர்களை உரையாடச் செய்து பேசுதல் திறனை வளர்க்கலாம். (பார்க்க : **பேசுதல் திறன், உரைநடை கற்பித்தல்**)

பாடநூலில் உள்ள பயிற்சிகளில் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு மாணவர்கள் கூறும் விடைகளுள் மொழிக்குத்தான் அதிக முக்கியத்துவம் தர வேண்டும். மாணவர்களின் எழுத்து நன்கு அமைய தினந்தோறும் பார்த்தெழுதும் பயிற்சி தரப்படல் வேண்டும். தினந்தோறும் ஒரு பக்கமாவது கைப்பலகையில் தெளிவாக, கொம்பு சுழிக்கோணாமல் எழுதிவரச் செய்ய வேண்டும். ஆசிரியரும் அதனைப் பார்த்து திருத்துவதுடன் நன்கு எழுதும் மாணவனைப் பாராட்ட வேண்டும். மேலும் மாணவர்களுக்குத் தினந்தோறும் கேட்டெழுதுதல் பயிற்சி கொடுக்கப் படவேண்டும். அப்பொழுது தான் அவர்களின் கேட்டல் திறன் மேலும் வளர்வதோடு ஒலி வடிவத்திற்கேற்ற வரிவடிவத்தைச் சரியாக எழுதும் பயிற்சியும் கிடைக்கும்.

கடைசியில் உள்ள 34, 35 பாடங்களின் மூலம் மாணவர் களிடையே நாட்டுப்பற்றை வளர்க்கப் பாரதியார் செய்த செயலையும், காந்தி, பகத்சிங், கட்டபொம்மன் போன்றோரின் நாட்டுப் பற்றுணர்வை மாணவர்களிடையே வளர்க்க வேண்டும். புதிய ஆத்திசூடியைக் கற்பிப்பதின் மூலம், சொற்களிலுள்ள எழுத்துகளின் ஒலிவேறுபாடுகளைச் சரியாக உச்சரிக்க கற்றுத் தருவதுடன், நல்ல ஒழுக்கத்தையும் மாணவர்களிடையே தோற்று விக்க வேண்டும். முடிந்தால் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு கதை மூலமாகக் கற்பித்தல் நலம் பயக்கும்.

## மூன்றாம் வகுப்பு

மூன்றாம் வகுப்புப் பாடநூலில், 8 உரைநடைப் பாடங்களும், 3 கதைப்பாடங்களும், 3 வாழ்க்கை வரலாறு கூறும் கட்டுரைப் பாடங்களும், 3 உரையாடல்களும், 2 வருணனைக்கட்டுரைப் பாடங் களும், 1 நிகழ்ச்சி விளக்கப் பாடமும், 1 விடுகதைப் பாடமும், 9 பாடல்களும் ஆக மொத்தம் 31 பாடங்களும் வெற்றிவேற்கை, உலகநீதி, மூதுரை ஆகிய செய்யுட் பகுதிகளும் கொடுக்கப் பட்டுள்ளன.

**நான்காம் வகுப்பு**

நான்காம் வகுப்புப் பாடநூலில் 16 உரைநடைப் பாடங்களும், 2 கதைப்பாடல்களும், 6 பாடல்களும், 1 உரையாடலும், 1 நாடகமும் ஆகமொத்தம் 26 பாடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

செய்யுட் பாடம், நீதிப்பகுதி, இயற்கை அழகு என இருபகுதி களைக் கொண்டுள்ளது.

**ஐந்தாம் வகுப்பு**

ஐந்தாம் வகுப்பு என்பது தொடக்கக் கல்வியின் நிறை நிலை வகுப்பு ஆகும். ஆதலின், மொழிப் பாடத்தைப் பொறுத்தவரை, எளிய புத்தகங்களைப் பொருளறிந்து படித்தல், அவ்வாறு படித்தவற்றைப் பிறர் விளங்கக் கூறுதல், எழுதுதல். சிறுகதைகளையும் பாடல்களை யும் சுவையுணர்ந்து படித்தல் முதலான திறன்களை மாணவர்கள் கைவரப் பெற்றவராதல் வேண்டும்.

முதல் இரண்டு வகுப்புகளைப் போலல்லாது இம்மூன்று வகுப்பு களிலும் வாக்கியத்தை அமைத்துப் பயன்படுத்தும் திறன் பெற வேண்டும். இருமொழியக் குழந்தைகள் பேசுகிற தமிழிலும் எழுதுகிற தமிழிலும் வீட்டு மொழியின் செல்வாக்குக் குறைந்து காணச் செய்ய வேண்டும். எழுத்துகளை ஒலிப்பதிலும் சொற்களைத் தேர்ந்தெடுப் பதிலும் வாக்கியங்களை அமைப்பதிலும் இச்செல்வாக்கு குறைக்கப் பட வேண்டும். இதற்குரிய வழிமுறைகளை முந்திய இயல்களில் பார்த்தோம். அவற்றைப் பயன்படுத்தி செய்யுளையும் உரைநடை யையும் கற்பித்தால் இருமொழியக் குழந்தைகள் பேசும், எழுதும் தமிழில் அவர்களுடைய வீட்டுமொழியின் செல்வாக்கு குறைவதோடு அவர்களின் தமிழ்மொழியிலுள்ள திறன்களும் சிறப்பாக வளர்ச் சியுறும். இவ்வளர்ச்சியால் இருமொழியக் குழந்தைகளுக்குத் தமிழை மட்டுமல்லாது தமிழ் மொழியின் வழி பிற பாடங்களையும் கற்றுத் தேர்வதற்குரிய தன்னம்பிக்கையும் திறனும் ஏற்படும்.

—o—

## நூற்பட்டியல்


1. கருணாகரன், இ. 1975 — சமுதாயமொழியியல்

2. சாரநாத், சி. இரா. 1975 — சௌராட்டிரமொழிப் பூங்கொத்து, மதுரை

3. சீனிவாசவர்மா, கோ. 1977 — கிளை மொழியியல், அண்ணாமலை நகர்

4. சீனிவாசவர்மா, கோ. 1980 — இருமொழியம், மொழியியற் கழக வெளியீடு, அண்ணாமலை நகர்

5. சுப்புரெட்டியார், ந. 1980 — தமிழ் பயிற்றும் முறை மணிவாசகர் நூலகம், சிதம்பரம்

6. சுப்புரெட்டியார், ந. 1982 — செய்யுள் பயிற்றும் முறை

7. திருமலை, மா. சு. — மொழி கற்பித்தல் அல்லது தமிழ் கற்பித்தல், மணிவாசகர் நூலகம் சிதம்பரம்

8. திருமலை, மா. சு. — பாடல் பயிற்று முறை, மொழியியற் கழக வெளியீடு, அண்ணாமலை நகர்

9. நடராசபிள்ளை, ந விமலா, ச. 1981 — பிழை ஆய்வு, இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூர்

10. மீனாட்சிசுந்தரனார், தெ. பொ 1974 — தமிழும் பிற பண்பாடும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரை. லிமிட்.. சென்னை.

| | | |
|---|---|---|
| 11. | இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம் மற்றும் தமிழ்நாடு கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம். 1982 | தொடக்கப் பள்ளிகளில் தமிழ் மொழித்திறன் வளர்த்தல் |
| 12. | இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம் மற்றும் தமிழ்நாடு கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம். (1979–85) | அஞ்சல் மற்றும் வானொலி வழித் தமிழ்ப் பயிற்சி (ஐந்து முதல் பத்தாம் வகுப்பு வரை) |

-0--

# இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம்

(இந்திய அரசு) மானசகங்கோத்திரி, மைசூர் 570 006.

## நிறுவனத்தின் தமிழ்த்தொடர்பான வெளியீடுகள்

1. Tamil Phonetic Reader
2. An Intensive Course in Tamil
3. Advanced Tamil Reader
4. An Introduction to Tamil Script : Reading and Writing
5. பிழை ஆய்வு
6. நமது மொழி (C. I. I. L.—K. V. S. Series)
   - Level I : தமிழ் நெடுங்கணக்கு
     தமிழ்க் கையெழுத்து நோட்டு
     தமிழ்ப் பாடநூல்
     ஆசிரியர் கையேடு
   - Level II : தமிழ்ப் பாடநூல்
     ஆசிரியர் கையேடு
   - Level III : தமிழ்ப் பாடநூல்
7. Tamil Bridge Course for P.U.C. Students, 8 volumes
8. Semi Programmed Instructional Material for Learning Tamil as a Second Language
9. A Guide for Advanced Learners of Tamil
10. தமிழ் விளக்கு (Second Language Series) Level I
11. தமிழ் விளக்கு (Second Language Series) Level II
12. Tamil Pictorial Glossary
13. Hindi - Tamil Common Vocabulary
14. இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனமும் தமிழும் தமிழ் நாடும்
15. தொடக்கப் பள்ளிகளில் தமிழ் மொழித் திறன்களை வளர்த்தல்
16. அஞ்சல் மற்றும் வானொலி வழித் தமிழாசிரியர்களுக்கான பயிற்றுப் பாடத் தொகுதிகள் — ஐந்து முதல் பத்தாம் வகுப்பு வரை தனித்தனியாக.
17. Certificate Course Materials in Tamil by Correspondence.

Copy right — CIIL, MYSORE - 570 006